

புரட்சிப்

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | periyardk.org | திருவள்ளுவர் ஆண்டு 2041 | செப்டம்பர் 02, 2010 | புரட்சி 9 | முழக்கம் 34 | விலை: ரூ.2.50


## புதுவை மாணவர் உரிமைகளை பறிக்காதே!

# கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் மாபெரும் பேரணி



*புதுவை வாழ் மாணவர் உரிமைகளை பறிக்கும் புதுவை அரசு சட்டத்தை எதிர்த்து கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் மாபெரும் கண்டன பேரணி நடந்தது.*

புதுச்சேரி மாநிலத்தில் மருத்துவம் மற்றும் பொறியியல் கல்லூரிகளுக்கு, தற்போது பிராந்திய அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. அகில இந்திய இடஒதுக்கீடு போக மீதியுள்ள மொத்த இடத்தில் காரைக்காலுக்கு 18 சதவீதமும், மாகேவிற்கு 4 சதவீதமும், ஏனாமிற்கு 3 சதவீதமும் வழங்கப்படுவதால், பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மாணவர்களாக இருந்தாலும்கூட புதுச்சேரி பகுதியை சார்ந்தவர்கள் 200க்கு 194 வாங்கினாலும் விரும்பிய பாடத்தில் இடம் கிடைக்காத நிலை உள்ளது.

எனவே, 23.8.2010 திங்கட்கிழமை அன்று காலை 9 மணியளவில் புதுவை பெரியார் திராவிடர் கழகம் சார்பாக, பிராந்திய இடஒதுக்கீட்டை இரத்து செய்ய வலியுறுத்தி, கண்டனப் பேரணி மற்றும் பொதுக் கூட்டம் நடைபெற்றது. சுதேசி பஞ்சாலை அருகே தொடங்கிய சுமார் ஆயிரத்தி ஐநூறுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்ட இந்த பேரணி நகரின் முக்கிய வீதிகளின் வழியாகச் சென்று தலைமை தபால் நிலையம் அருகே ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில், வீராம் பட்டினம் கவுன்சிலர் பா. சக்திவேல், தேங்காய் திட்டு கவுன்சிலர் சு. பாஸ்கரன், புரட்சியாளர் அம்பேட்கர் மக்கள் படை சி. மூர்த்தி, பார்வர்டு பிளாக் உ. முத்து, மக்கள் ஜனசக்தி புரட்சி வேந்தன், செந்தமிழர் இயக்கம் ந.மு.தமிழ்மணி, தமிழர் தேசிய இயக்கம் இரா. அழகிரி, பெரியார் திராவிடர் விடுதலைக் கழகம் கோகுல் காந்தி நாத், கிராமப்புற மக்களின் அடிப்படை உரிமைகள் மற்றும் சுற்றுச் சூழல் பாதுகாப்பு இயக்கம், புரட்சிப் பாவலர் இலக்கிய பாசறை, செம்படுகை நன்னீரகம், மண்ணின் மைந்தர் நல உரிமை சங்கம், மாணவர் கல்வி அறக்கட்டளை, புதிய வேள்வி மக்கள் இயக்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பின் தங்கிய மற்றும் வளர்ச்சி இல்லாமல் இருக்கின்ற பகுதிகளுக்கு சிறப்பு நிதி ஒதுக்கீடு, சிறப்புத் திட்டங்கள், பள்ளிகள் திறப்பது போன்ற உதவிகளை அரசு செய்வதில் எந்த தடையும் இல்லை;



யாரும் எதிர்ப்பு தெரிவிக்கப் போவதும் இல்லை. இந்த பிராந்திய இடஒதுக்கீடு என்பது புதுவை மாணவர்களுக்கு மட்டும் இல்லாத நிலையில், புதுவை மாணவர்கள் ஏற்கனவே பெற்று வந்த உரிமைகளும்கூட, பொதுப் போட்டி என்ற அடிப்படையில் மற்றப் பகுதிகளில் இருப்பவர்களும் எடுத்துக் கொள்கிற வாய்ப்பு இருக்கிற இந்த நிலையில்தான், சமச்சீரான வாய்ப்பு வரவேண்டும் என்ற அடிப்படையில், அனைத்து தரப்பினரும் ஒன்றுகூடி, பிராந்திய ஒதுக்கீடு என்ற அடிப்படையில் புதுச்சேரி மாணவர்களின் உரிமைகள் பறிக்கப் படக் கூடாது. அவர்கள் வாய்ப்புகள் மறுக்கப்படக் கூடாது. எதிர்காலம் பாதிக்கப்படக் கூடாது என்கின்ற அடிப்படையில்தான் இந்த ஆர்ப்பாட்டம் நடந்துக் கொண்டிருக்கிறது என்று விளக்கிப் பேசிய கழகத் தலைவர் கொளத்தூர் மணி, அரசியல் சட்டத்தில் எங்கும் இல்லாத இந்த பிராந்திய இடஒதுக்கீடு திட்டத்தை, புதுவை அரசு உடனே முழுமையாக ரத்து செய்ய வேண்டும் என வேண்டுகோள் வைத்தார்.

பின்னர், புதுவை முதல்வர் அலுவலகத்திற்கும், ஆளுநர் அலுவலகத்திற்கும் சென்று கோரிக்கைகளை மனுவாக வழங்கப்பட்டது.

**– அ.கோகுலகண்ணன்**

### சீர்காழியில் கழக கூட்டம் நடத்த உயர்நீதிமன்றம் அனுமதி

சீர்காழி நகரம் பனங்காட்டுத் தெருவில் பெரியார் திராவிடர் கழக சார்பில் சாதி தீண்டாமைக்கு எதிரான பெரியார் கொள்கை விளக்கப் பொதுக் கூட்டம் நடத்த திட்டமிட்டு அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டது. 25.7.2010 அன்று பொதுக் கூட்டம் நடைபெற விருந்தது. 23.7.2010 அன்று காவல்துறை கழக நகரச் செயலாளர் க.சு. அனந்தராசு மற்றும் கழகத் தோழர்களை அழைத்து பொதுக் கூட்டம் நடத்தும் இடத்தில் சட்டம் ஒழுங்கு பிரச்சினை ஏற்பட வாய்ப்புள்ளதாகக் கூறி கழகக் கூட்டத்திற்கு அனுமதி மறுத்தது.

தொடர்ந்து கழக வழக்கறிஞர் குமாரதேவன், சென்னை உயர்நீதிமன்றத்தில் வழங்கு தொடர்ந்தார். வழக்கை விசாரித்த நீதிபதி வி. தனபாலன், காவல்துறை தடையை ரத்து செய்து, கழகத்திற்கு கூட்டம் நடத்த அனுமதி வழங்குமாறு கடந்த 18 ஆம் தேதி உத்தரவிட்டார். கழக சார்பில் கூட்டம் நடத்த ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

**தலையங்கம்**

# தேசிய இன விடுதலைகளுக்கு வழி திறக்கும் தீர்ப்பு

தேசிய சுய நிர்ணய உரிமைக்குட்பட்டு தனிநாடு விடுதலைப் போராட்டம் நடத்தும் தேசிய இனங்களுக்கு மகிழ்ச்சியான செய்தி ஒன்று வெளிவந்துள்ளது. ஹேக் நகரில் (நெதர்லாந்து) செயல்படும் சர்வதேச நீதிமன்றம் (The International Court of Justice) கடந்த ஜூலை 22 ஆம் தேதி வெளியிட்டுள்ள ஒரு பிரகடனம், மிகவும் முக்கியத்துவம் பெற்றதாகும். செர்பியாவிலிருந்து சுய நிர்ணய உரிமையின் கீழ் தனது விடுதலைப் பிரகடனத்தை கடந்த 2008 டிசம்பரில் கொசாவா அறிவித்தது. கொசாவாவின் விடுதலைப் பிரகடனத்துக்கு சர்வதேச நீதிமன்றம் இப்போது ஏற்பு வழங்கிவிட்டது.

கொசாவா, தனிநாடு அறிவிப்பை எதிர்த்து செர்பியா, அய்.நா.வின் பொது சபை வழியாக சர்வதேச நீதிமன்றத்துக்கு விண்ணப்பித்தது. விசாரணை நடத்திய 10 நீதிபதிகளில் 6 பேர் கொசாவா விடுதலையை அங்கீகரித்துள்ளனர். தலைமை நீதிபதி ஹியாசுகி ஓவாடா (Hisashi Owada) சர்வதேச சட்டங்களின்படி கொசாவின் விடுதலை அறிவிப்புக்கு எந்தத் தடையும் இல்லை என்று கூறியுள்ளார். கொசாவா விடுதலையை 60 நாடுகள் இப்போது அங்கீகரித் துள்ளன. இந்தத் தீர்ப்புக்குப் பிறகு கொசாவாவை அங்கீகரிக்கும் நாடுகள் நூறுக்கும் அதிகமாகும் என்று எதிர்பார்க்கப்படுவதாக செய்திகள் கூறுகின்றன. ஆனாலும் செர்பியா, இத் தீர்ப்பை ஏற்கவியலாது என்று கூறிவிட்டது. ருஷ்யாவும், சீனாவும், அய்.நா.வில் இடம் பெற்றுள்ள ஒரு உறுப்பு நாட்டை, இரண்டாக பிரிப்பதை ஏற்க முடியாது என்று கூறியுள்ளன. அமெரிக்காவும், பெரும்பாலான அய்ரோப்பிய நாடுகளும், சர்வதேச நீதிமன்றத்தின் தீர்ப்பை வரவேற்றுள்ளன.

இந்தியா, கொசாவா விடுதலையை அங்கீகரிக்கவில்லை. என்றாலும், ருஷ்யா, சீனாவைப் போல், கடுமையாக எதிர்க்காமல் (அமெரிக்க எதிர்ப்புக்கு அஞ்சி), சர்வதேச நீதிமன்றத் தீர்ப்பை பரிசீலித்து வருவதாக, வெளியுறவுத் துறை அதிகாரி கூறியுள்ளார். அய்ரோப்பிய ஒன்றியத்தில் இணைந்துள்ள சில நாடுகள் மட்டும், இந்தத் தீர்ப்பை எதிர்த்துள்ளன. அந்த நாடுகளில் தேசிய இன உரிமைப் போராட்டங்கள் நடப்பதுதான், இதற்குக் காரணம். ஸ்பெயின் நாட்டில் பாஸ்க்யு, கேட்டலான் பகுதியினர், தனி நாடு கோரி போராடுகிறார்கள். சைப்ரசில் வாழும் துருக்கியர்களும், அதேபோல், கிரீஸ், சோல்வாகியா, ரொமானியா நாடுகளி லும் உரிமை மறுக்கப்பட்ட தேசிய இனங்கள், சுயநிர்ணய உரிமை கோரி போராடுகின்றன.

சர்வதேச நீதிமன்றத்தின் இந்த பிரகடனம், உலகில் தன்னுரிமைக்காக போராடும் பல நாடுகளுக்கு நம்பிக்கை ஒளியைத் தந்துள்ளது.

இது ஆபத்தான விளைவுகளை உருவாக்கிவிடும் என்று ரஷ்யா, சீனா, இந்தியா உள்ளிட்ட நாடுகள் அஞ்சத் தொடங்கிவிட்டன. அதன் காரணமாகத்தான் சர்வதேச நீதிமன்றத்தில் முதன்முறையாக சீனாவின் பிரதிநிதி நேரில் நின்று கொசாவா விடுதலையை அங்கீகரிக்கக் கூடாது என்று வாதாடினார்.

(1960-க்குப் பிறகு சர்வதேச நீதிமன்றத்தில் சீனாவின் பிரதிநிதி நேரில் வாதாடியது இதுவே முதல்முறை)

சர்வதேச நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பைத் தொடர்ந்து உலகின் பல நாடுகளிலிருந்து, தனியே பிரித்து விட்டதாக அறிவித்துள்ள நாடுகள், சுதந்திரப் பிரகடனத்தை வெளியிட தயாராகிவருகின்றன. அசர்பசான் நாட்டில் ஆர்மெனியர்கள் அதிகம் வாழும் நாக்ரோனா – கார்பகா பகுதியில் அம் மக்கள் தங்களுக்கான தேசிய சுயநிர்ணய உரிமையின் கீழ், தனி நாடு பிரகடனத்தை உடனே வெளியிடவிருக்கிறார்கள்.

ருஷ்யாவின் ராணுவ உதவியுடன், ஜார்ஜியாவிலிருந்து பிரிந்து நிற்கும் அபாக்கஷியா (Abakhazia) மற்றும் தெற்கு ஒசர்ஷியா (Osertia) நாடுகளின் தலைவர்கள். இந்தத் தீர்ப்பு, தங்களின் சுயநிர்ணய உரிமைக்கு வழி திறந்து விட்டுள்ளது என்று அறிவித்துள்ளனர். இந்த நாடுகளின் போராட்டத்திற்கு 2008 ஆம் ஆண்டில் ருஷ்யா ஆதரவு தெரிவித்தது குறிப்பிடத் தக்தாகும். சர்வதேச சட்டம் வழங்கியுள்ள 'மனிதாபினமான தலையீட்டின் கீழ்' (Humanitarian Intervention) ஜார்ஜியாவுக்கு தனது படைகளை அனுப்பியது ருஷ்யா. அதேபோல் மேற்குலக நாடுகளும் இனப் படுகொலை நடக்கும் ஒரு நாட்டில், அதைத் தடுக்க தலையிடும் சர்வதேச சட்டத்தின் கீழ், சூடான் நாட்டில் தலையிட்டன. சூடான் அதிபர் இப்போது போர்க் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டுள்ளார். ஆப்பிரிக்கக் கண்டத்தில் மட்டும் 50 தேசிய இனங்கள் தங்களின் சுயநிர்ணய உரிமைகளுக்காக காத்திருக்கும்போது, இத் தீர்ப்பு, ஆபத்தான விளைவுகளை உருவாக்கிவிட்டது என்று அலறியிருக்கிறார். செர்பியாவின் வெளிநாட்டுத் துறை அமைச்சர் வுக் ஜெரிமிக் (Vuk Jeremic) மேற்கு சகாரா விடுதலைக்கும் இத்தீர்ப்பு உயிரூட்டியுள்ளது. இந்தியாவிலே காஷ்மீரில் நடக்கும் விடுதலைப் போராட் டத்துக்கும், மியாம்னரில் நடக்கும் கரின், ஷான் தனிநாடு விடுதலைப் போராட்டத்துக்கும் ஈராக்கில் குருது இனத்து மக்கள் நடத்தும் விடுதலைப் போராட்டத்துக்கும், இத் தீர்ப்பு, கதவு திறந்துள்ளதாக, மேற்கத்திய ஆய்வாளர்கள் விவாதிக்கத் தொடங்கிவிட்டனர்.

'இனப் படுகொலை' நடந்த காரணத்தால்தான் தேசிய சுயநிர்ணய உரிமையின் கீழ், தனி நாடு பிரகடனம் செய்தது கொசாவா. இது அப்படியே தமிழ் ஈழத்துக்கும் பொருந்தக் கூடிய தாகும். சர்வதேச நீதிமன்றம் தனது தீர்ப்பில் இரண்டு முக்கிய கருத்துகளை சுட்டிக்காட் டியுள்ளது.

1. தனியாக அங்கீகரிக்கப்படாத அரசு இல்லாவிட்டாலும்கூட, தங்களுக்கான பாரம்பரிய பிரதேசத்தில் உள்ள மக்கள் சுயநிர்ணய உரிமை கோருவதை சர்வதேச சட்டம் அங்கீகரிக்கிறது.
2. பிரதேச ஒற்றுமை என்ற கோட்பாட்டை இரு மாநிலங்களுக்குள் உள்ள உறவுகளின் அடிப்படையில்தான் தீர்மானிக்க வேண்டும். (Principles of territorial integrity applies only to the sphere of relations between states)

இந்த இரண்டு கருத்துகளும் ஒரு நாட்டின் இறையாண்மையில் தலையிடக் கூடாது என்ற கண்மூடித்தனமான கொள்கைக்கு சாவுமணி அடித்துள்ளது என்றே கூறவேண்டும்.

தமிழ் ஈழத்தில் வடக்கு, கிழக்கு மாநிலத்தில் விடுதலைப் புலிகள் நடத்திய தனியாட்சி – இந்திய, இலங்கையின் கூட்டு சதியால், நசுக்கப்பட்டாலும்கூட சர்வதேச நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பு முக்கிய திருப்பத்தை உருவாக்க முடியும். 'நாடு கடந்த தமிழ் ஈழ அரசு'கள், சர்வதேச நீதிமன்றத்தின் தீர்ப்பின் அடிப்படையில் தமிழ் ஈழ அரசியலை சர்வதேச அரங்கில் அடுத்த இலக்கு நோக்கி நகர்த்தும் செயல்பாடுகளைத் தொடங்க வேண்டிய காலம் கனிந்திருக்கிறது. இதுவே சர்வதேச தமிழினத்தின் எதிர்பார்ப்பும் ஆகும்.

# பார்ப்பன வறுமையும் - ஆவணி அவிட்டமும்

தமிழ்நாட்டில் பார்ப்பனர்கள் வறுமையில் வாடுகிறார்களாம், 'டைம்ஸ் ஆப் இந்தியா' ஆங்கில நாளேடு முழு பக்கக் கட்டுரை ஒன்றை வெளியிட்டிருக்கிறது. இது பற்றி 'துக்ளக்' சோவிடம் கருத்துக் கேட்டபோது, "தமிழ்நாட்டில் பிராமணர்கள் தேவை யற்றவர்கள் ஆகிவிட்டனர் என்பதைத் தவிர வேறு எதுவும் கூற விரும்பவில்லை" என்று கூறியிருக்கிறார்.

வறுமை என்பது சமூகப் பிரச்சினை; தமிழ் நாட்டின் வசதி படைத்த பணக்காரர்கள் பட்டியலில் எத்தனையோ பார்ப்பனர்கள் இருக்கிறார்கள். பெரும் முதலாளிகள் பட்டியலில் டி.வி.எஸ். குழும மும், 'இன்போசிஸ்' நாராயண மூர்த்திகளும்கூட இருக்கிறார்கள்.

தமிழ்நாட்டு சேரிகளிலும், சாலை ஓரங்களிலும் அடிப்படை வாழ்வுரிமை இழந்து கிடக்கும், ஒடுக்கப்பட்ட மக்கள் பல லட்சம் பேர். "எல்லா சாதியிலும் ஏழைகள் இருக்கலாம்; அது கடவுள் எழுதிய தலையெழுத்து. ஆனால், 'பிராமணர்களில்' ஏழைகள் இருப்பது பாவம் அல்லவா?" என்பதுதான் "இவாளின்" கவலை போதும்!

ஒரு "பிராமணன்" மட்டுமல்ல, எந்த ஒரு மனிதனும் வறுமை யில் வாடக் கூடாது என்பதுதான், சமத்துவத்தை விரும்பும் அனைவரின் கவலையாக இருக்க முடியும். அரசின் ஏழ்மை ஒழிப்புத் திட்டங்கள் - அனைத்து மக்களுக்கும் தான் உருவாக்கப்படுகின்றனவே தவிர, அதில் சாதிக் கண்ணோட்டம் இல்லை; ஆனால், வறுமையில் வாடு வதாகக் கூறும் 'பார்ப்பனர்கள்' கூட தங்களின் பிறவி ஆதிக்கத்தை வெளிப்படுத்தும் 'பூணூல்களை' கழற்றத் தயாராக இல்லை.

'ஜெயா' தொலைக்காட்சியில் 'துக்ளக்' சோ எழுதிய "எங்கே பிராமணன்?" என்ற தொடர் ஒளிபரப்பாகிறது. அதில் 'பிராமண தர்மங்கள்' பற்றி சோ, இடையிடையே விளக்கமளித்து, அதை தனது 'துக்ளக்' ஏட்டிலும் வெளியிட்டு வருகிறார். இந்த வாரம் வெளிவந்த 'துக்ளக்'கில் (1.9.2010) 'ஆவணி அவிட்டம்' பற்றி, சோ, 'ஜெயா' தொலைக்காட்சியில் தந்த விளக்கம் வெளியிடப்பட்டுள்ளது.

ஆவணி மாதம் அவிட்ட நட்சத்திரத்தில்தான் முதன்முதலாக பிரம்மாவுக்கு வேதம் கிடைத்ததாம். அதாவது பிரம்மாவுக்கே உபதேசம் செய்யப்பட்டதாம். அதுதான் வேதத்தின் தொடக்கம் என்றும், எனவே, வேதத்தின் தொடக்கத்துக்கு விழா எடுப்பதுதான், ஆவணி அவிட்டம் என்றும் விளக்கம் கூறியிருக்கிறார். ஆவணி அவிட்டத்தின் உண்மையான பெயர் 'உபா கர்மா' என்பதுதான் என்றும், அதற்கு தொடக்கம் என்று பொருள் என்றும் விளக்குகிறார். 'பிரம்மா' காலத்திலே தொடங்கப்பட்ட வேதத்துக்கு ஒவ்வொரு ஆண்டும் தொடக்க விழா எதற்கு என்ற கேள்வி எழுகிறது அல்லவா! அதற்கு, 'தேசிய ஒருமைப்பாட்டைக் காப்பாற்ற ஒவ்வொரு ஆண்டும் உறுதிமொழி ஏற்கவில்லையா என்று சோ, எதிர்கேள்வி கேட்கிறார். ஆக, பிராமணர்கள் வேதத்தைவிட்டு விடாமல் தொடர்ந்து கொண்டே இருப்பதற்கான உறுதி ஏற்பு நாள்தான் ஆவணி அவிட்டம் என்பது சோ தரும் விளக்கம்.

2010 ஆம் ஆண்டிலும் ஆவணி அவிட்டத்தை வேதத்தின் தொடக்க விழாவாகக் கொண்டாட வேண்டும் என்று துக்ளக் 'சோ' வெளிப்படையாக அறிவிக்கிறார் என்றால், அதற்கு காரணம் என்ன? அதையும் 'சோ'வே தெளிவாக விளக்கியிருக்கிறார்:

"உபநயனம் என்பது **முதல் மூன்று வர்ணத்தாருக்கும்** உண்டு. அதாவது பிராமண, க்ஷத்திரிய, வைசிய வர்ணங்களைச் சார்ந்தவர் களுக்கு உபநயனம் உண்டு. அவர்கள் மூவருமே வருடா வருடம், இந்த ஆவணி அவிட்டம் என்கிற உபகர்மாவைச் செய்ய வேண்டும்" ('துக்ளக்' 1.9.2010) என்கிறார்.

மேற்குறிப்பிட்ட கருத்தில் மறைந்திருக்கும் ஒரு உண்மையைப் புரிந்து கொள்ள வேண்டும். வேதத்தைக் கொண்டாடி பூணூல் போடும் உரிமை, மூன்று வருணத்துக்கு மட்டுமே உண்டு. **நான்காவது வர்ண மாகிய சூத்திரர்களுக்கு இல்லை** என்பதை, சொல்லாமல் பதுங்கிக் கொள்கிறார் 'சோ'; இதற்குப் பெயர் தான் பார்ப்பன சூழ்ச்சி!

இன்னமும், 'பிராமண, வைசிய, சத்திரிய' வர்ணாஸ்ரமப் பிரிவுகளை நியாயப்படுத்திக் கொண்டு - 'சூத்திரர்' என்பவர்கள் இழி பிறவிகள் அவர்களுக்கு 'வேதத்தை' நெருங்கும் உரிமை கிடையாது என்று 'மனுஸ்மிருதியை' பரப்பிக் கொண்டிருக்கிறார்கள். பார்ப்பனர்கள் எல்லாம் மாறி விட்டார்கள் என்று, கதை பேசக் கிளம்பியிருப்போர், சிந்திக்க வேண்டும்.

பார்ப்பனர்கள் மாறவில்லை; பார்ப்பனரல்லாதார் இயக்கத்தின் வழி வந்ததாக அவ்வப்போது கூறிக்கொண்டு வரும் கட்சியினர்தான் மாறிக்கொண்டு வருகிறார்கள்.

தமிழ்நாட்டில் இதுவரை இல்லாத அளவுக்கு துணை வேந்தராக திருச்சி - பாரதிதாசன் பல்கலைக்கழகத்துக்கு ஒரு பார்ப்பனப் பெண், தி.மு.க. ஆட்சியில் நியமிக்கப்பட்டுள்ளார்.

தமிழக அரசின் தலைமைச் செயலாளர் பதவி என்றால், பார்ப் பனர்களைத் தேடிப் பிடித்து நியமிப்பதுதான், 'பார்ப்பனரல்லாத' தி.மு.க. ஆட்சியின் வழமை!

அரசு தலைமை வழக்கறிஞர் பதவிக்கும் 'வி.பி.ராமன்' பார்ப்பனப் பரம்பரையைத்தான், தேடி ஓடுகிறார்கள்!

ஆக - பார்ப்பனர்கள் மாறாத நிலையில் பார்ப்பனரல்லாத இயக்கங்கள்தான் திசை மாறிய பறவை களாகிவிட்டனர். வர்ணாஸ்ரம பேதத்தை நியாயப்படுத்தும் 'துக்ளக்' சோக்கள் மீது சட்டம் பாயாது; தமிழர் உரிமைக்கு குரல் கொடுக்கும் சீமான்கள் மீது தேசிய பாது காப்பு சட்டம் பாயும். அதனால்தான், 'துக்ளக்' சோக்கள் வர்ணா ஸ்ரமத்தை இன்றைக்கும் நியாயப்படுத்தி எழுதிக் கொண்டிருக் கிறார்கள்.

**–இரா**

### மறைந்த சுயமரியாதை வீரர் நாகை பாட்சா, கழக மாநாட்டில் ஆற்றிய உரை

# நாங்கள் உழைக்க வந்தவர்கள்; பிழைக்க வரவில்லை

அரசியல் சட்ட எரிப்புப் போராட்டம் நடந்த நாள் 1957, நவம்பர் 26. அரசியல் சட்டத்தை எரித்து, சிறைச் சென்ற மூவாயிரம் தோழர்களில் நாகை எஸ்.எஸ்.பாட்சாவும் ஒருவர். அப்போது நாகை எஸ்.எஸ். பாட்சாவுக்கு வயது 27. அரசியல் சட்டத்தின் சாதியைப் பாதுகாக்கும் பிரிவுகளை எரித்ததற்காக அவருக்கு 9 மாத சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

பெரியார் திராவிடர் கழகம் 2007 ஆம் ஆண்டு மே 19 ஆம் நாள் தஞ்சையில், சாதி ஒழிப்பு மாநாட்டை நடத்தி, அரசியல் சட்ட எரிப்புப் போராளிகளுக்கு விருது வழங்கி, கவுரவித்தது. அந்த நிகழ்வில் பங்கேற்று தோழர் எஸ்.எஸ். பாட்சா ஆற்றிய உரையை அவரது நினைவாக, மீண்டும் வெளியிடுகிறோம்:

சட்ட எரிப்புப் போராட்டம் என்பது சாதி ஒழிப்புப் போராட்டத்தின் ஒரு பகுதியேயாகும். வயது வந்த அனைவருக்கும் ஓட்டுரிமை தரப்பட்டு, அவர்களால் ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப் பட்ட ஒரு நாடாளுமன்றம், நமக்கு அரசியல் சட்டத்தை உருவாக்கவில்லை. படித்தவர்கள் - பணக்காரர்கள் - பதவிக்காரர்கள் மட்டுமே வாக்களிக்கக்கூடிய பிரிட்டிஷாரின் நிர்வாகக் கட்டுப் பாட்டுக்குள் இருந்த அரசியல் நிர்ணய சபைதான் அரசியல் சட்டத்தை உருவாக்கியது. அதன் தலைவராக டாக்டர் அம்பேத்கர் இருந்தார். மற்றொரு உறுப்பினர் ஒரு முஸ்லீம். மற்ற உறுப்பினர்கள் எல்லோரும் பார்ப்பனர்கள். எனவே, இந்த அரசியல் சட்டத்தை அப்போதே பெரியார் மறுத்தார். இதனால் ஏற்பட்ட விளைவுகள் என்று பார்க்கும்போது - அரசியல் சட்டத்தின் ஜீவாதார உரிமை என்ற அடிப்படை உரிமைகளுக்குள் மதம், சாதி, கலாச்சாரம், பணம் ஆகியவற்றுக்கான உரிமை கொண்டு வரப்பட்டது. இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இந்த அடிப்படை உரிமைகளுக்கு எதிராக, எந்த சட்டமன்றமும், சட்டம் இயற்ற முடியாது. அப்படி சட்டம் இயற்றப்படுமானால், அது பற்றி உயர்நீதிமன்றமும், உச்சநீதிமன்றமும் தன்னிச்சையாக முடிவு செய்யும் உரிமை, இந்த நீதி மன்றங்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. உதாரணத் துக்கு சொல்ல வேண்டுமானால்,

கலைஞர் அரசு, அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற சட்டம் இயற்றியதை எதிர்த்து, உச்சநீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்து, அது நிலுவையில் உள்ளது. இதை முடிவுசெய்யும் உரிமை உச்சநீதிமன்றத்துக்கே இருக்கிறது. மதத்தை யும், சாதியையும், அது தொடர்பான சட்டங் களையும் அரசியல் சட்டம் உறுதி செய்வதால், அந்தப் பிரிவுகளை நீக்க வேண்டும் என்று வலியுறுத்தி பெரியார் அரசியல் சட்டத்தை எரிக்கச் சொன்னார்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் சட்டமன்றங் களை நீதிமன்றங்கள் கட்டுப்படுத்துவதை எதிர்த்து பெரியார் 'சுப்ரீம் கோர்ட் கண்டன நாள்' கூட்டங்கள் நடத்தி நாட்டை ஆள்வது சட்ட மன்றங்களா, நீதிமன்றங்களா என்று கேட்டார். அவ்வளவு துணிவோடு பேசக்கூடிய தலைவர் அவர் ஒருவர்தான். நமது பிரதமர் மன்மோகன் சிங், உச்சநீதி மன்றம் எல்லை தாண்டிடக் கூடாது என்றுதான் கூறினார். உடனே அதே மேடையில் இருந்த உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி பால கிருட்டிணன் நீதிமன்றம், சட்டப்படி தான் செயல்படுகிறது என்று பிரதமர் முகத்தில் அடிப்பது போல் பதில் கூறினார். ஆக, நீதிமன்றங்கள்தான் எதையும் நிர்ணயிக்கிறது என்றால், பார்ப்பனர்களிடம் தான் அதிகாரம் இருக்கிறது என்பதுதான் அதன் அர்த்தம். பெரியார் இப்படிக் கூறினார் என்று தான் என்னைப் போன்றவர்களால் பேச முடியுமே தவிர, பெரியார் பேசுவது போல் என்னால் பேச முடியாது. அந்தத் துணிவு எனக்குக் கிடையாது. சுப்ரீம் கோர்ட் கண்டன நாள் கூட்டம் நடத்திய பெரியார், "3 கோடி வாக்காளர்கள் ஓட்டளித்து, தங்களுக்கு வேண்டிய அரசாங்கத்தை தேர்வு செய்கிறார்கள். அந்த அரசாங்கம் செய்யும் சட்டத்தைத் தடுக்க உனக்கு ஏது உரிமை?" என்று கேட்டார் பெரியார். இந்த எல்லை வரை நாமும் பேசலாம். ஆனால் பெரியார் அடுத்த எல்லைக்குப் போய் - "யார் இந்த நீதிபதிகள்? பிச்சை



எடுத்துப் படித்தவன், பந்தக்காலைப் பிடித்து மேலே வந்தவன்; இவர்கள்தான் இந்த நாட்டை ஆள்வதா? இதற்கு ஒரு முடிவு தெரிந்தாக வேண்டும் என்று கேட்டார். இப்படிக் கேட்கும் துணிவு கொண்ட தலைவர் வேறு யாராவது உண்டா? அவர்தான் பெரியார்; அவருக்கு தொண்டராக இருந்தோம் என்பது தான் எங்களுக்கு உள்ள பெருமை. *(கைதட்டல்)*

சட்டத்தைக் கொளுத்தி, சிறைக்கு - இளையோர், முதியோர் வரை சென்றார்கள். மன்னிப்புக் கேட்கிறாயா, உடனே விடுதலை என்று சொல்லப்பட்டது. மன்னிப்புக் கேட்டால் சிறைத் தண்டனையை முழுமையாக அனுபவிக்கத் தேவையில்லை. விடுதலை கிடைக்கும் என்றார்கள். ஆனால், ஒருவர் கூட, மன்னிப்புக் கேட்டு வெளியே வர வில்லை. அது தான் இந்தப் போராட்டத்தின் வெற்றி. *(கைதட்டல்)*

சாதியை ஒழிக்க போராடினோம்; ஆனால் சாதி ஒழியவில்லை. ஆனால் அதற்கான போராட்டத்தில் பங்கு பெற்றோம் என்பதுதான் எங்களுக்குள்ள மகிழ்ச்சி. 3000 ஆண்டுகளாக நிலை பெற்றுள்ள சாதியை 50 ஆண்டில் ஒழித்துவிட முடியாது. அண்ணா, திராவிடர் கழகப் பொதுச்செயலாளராக இருந்தபோது, "உழைக்க வாருங்கள்! பிழைக்க என்ன வழி என்று கேட்காதீர்கள்! போராட வாருங்கள்! அது எப்போது முடியும் என்று கேட்காதீர்கள்!" என்றார். இதே கருத்தை பெரியார், "உன் வீட்டுச் சோற்றைத் தின்றுவிட்டு என் வீட்டு வேலைக்கு வா" என்று அவரது மொழியில் சொன்னார். "உன்னுடைய குடும்ப சூழ்நிலை சரியாக இருந்தால் வா! இல்லாவிட்டால் வரவேண்டாம். போராட்டத்துக்கு வராதவர்களை கட்சியில் இரண்டாம் பிரஜையாக நான் நினைப்பது கிடையாது" என்றார்.

இன்னொரு கேள்வி கேட்கப்படுகிறது. நான் பிறப்பால் ஒரு முஸ்லீம். "உனக்கு எதற்கு சாதி எதிர்ப்புப் போராட்டம்?" என்று கேட்கப்படுகிறது. பெரியார் ராமன் பட எரிப்பு, விநாயகன் சிலை உடைப்புப் போராட்டங்களை நடத்தியபோது, முஸ்லீம்கள், கிறிஸ்தவர்கள் வர வேண்டாம் என்றார். ஆனால் சாதி ஒழிப்புப் போராட்டத்தில் அப்படிக் கூறவில்லை. திருச்சியிலேயே இருந்த பிரான்சிஸ் ஒரு கிறிஸ்தவராக இருந்தாலும் போராட்டத்தில் கலந்து கொண்டார். எந்த மதத்தவராக இருந்தாலும், அரசியல் சட்டத்தின் அடிப்படை உரிமைகள் அனைவரையும் கட்டுப்படுத்துகிறது. எனவே இந்த நாட்டின் குடிமகன் என்ற உரிமையில் சாதியைப் பாதுகாப்பதை அடிப்படை உரிமையாக்கும் அரசியல் சட்டப் பிரிவை எரிக்கும் போராட்டத்தில் பங்கேற்றேன்.

இந்தப் போராட்டத்தில் பங்கேற்றவர்களுக்கு தி.மு.க. அரசு உதவித் தொகை வழங்கக் கூடாதா என்று கேட்கப்படுகிறது. அந்த எதிர்பார்ப்பும் இருக்கிறது. அரசியல் சட்டத்தைப் பாதுகாப்பேன் என்று உறுதி ஏற்று, ஆட்சிக்கு வருகிறவர்களால், அரசியல் சட்டத்தை எரித்தவர்களுக்கு எப்படி, அரசு உதவித் தொகை வழங்க முடியும்? நாம் எப்படி அதை எதிர்பார்க்க முடியும்? ஈ.வெ.கி. சம்பத் அழகாகச் சொன்னார். பெரியாருடைய பேச்சு மூன்று மணி நேரம் நிகழுகிறது என்றால், "தாய்மார்களே, பெரியோர்களே, தோழர்களே" என்ற முதல் வாக்கியமும், "நான் சொல்வது உங்களுக்கு சரியானது என்று தோன்றினால், ஏற்றுக் கொள்ளுங்கள்; இல்லாவிட்டால் நிராகரித்து விடுங்கள்" என்ற இறுதி வாக்கியமும் தான், சட்டத்துக்கு உட்பட்டதாக இருக்கும். மற்ற மூன்று மணி நேர உரை முழுதும், அரசியல் சட்டத்துக்கு எதிராகவே இருக்கும் *(பலத்த கைதட்டல்)* என்று சம்பத் குறிப்பிட்டார். நாம், விலைவாசி உயர்வை எதிர்த்து புளி, மிளகாய் விலை ஏற்றத்தை எதிர்த்து சிறைக்குப் போகவில்லை. நாட்டின் அமைப்பையே தலைகீழாக மாற்றுவதற்காக போராட்டம் நடத்தி சிறை சென்றவர்கள். எனவே நாம் அரசு மான்யத்தை, உதவியை, போனசை எதிர்பார்க்கக் கூடாது. அந்த மரியாதையை எதிர்பார்த்து நாம் போராடவில்லை.

நானும், என்னுடைய தோழர்களும், உடல் தளர்ந்து, பிணி, மூப்பு என்று வந்து விட்டோம். நமக்குப் பிறகு, இந்தக் கொள்கைகளைத் திருப்பிச் சொல்ல யார் இருக்கப் போகிறார்கள் என்று நினைத்துக் கொண்டிருந்தோம். உங்களைப் பார்க்கும்போது நம்பிக்கை ஏற்படுகிறது. நான் உங்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம், பெரியார் கருத்தை, குழப்பாமல் நேரடியாகச் சொல்லுங்கள்.

நாம் போராட்டம் நடத்தி 50 ஆண்டுகளுக்குப் பிறகும், பெரியார் திராவிடர் கழகம், நம்மை நினைவு கூர்ந்து, நமக்கு மரியாதை செய்ய இந்த மாநாட்டை நடத்துகிறதே; இந்த மரியாதையைவிட வேறு மரியாதை நமக்குத் தேவை இல்லை. *(கைதட்டல்)*

## தீண்டாமை ஒழிப்புப் பிரிவை இழுத்துப் பூட்டுவோம்!

சட்டப்படி தீண்டாமை குற்றம்; ஆனால் நடைமுறையில் என்ன நடக்கிறது?

தமிழ்நாட்டின் பல கிராமங்களில் தேனீர்க் கடைகளில், சுடுகாடுகளில் முடிதிருத்தும் நிலையங்களில், ரேஷன் கடைகளில், பல இடங்களில் பல வடிவங்களில் தீண்டாமைக் கொடுமைகள் நீடிக்கின்றன.

பெரியார் திராவிடர் கழகம், தீண்டாமையைப் பின்பற்றும் கடைகள், அமைப்புகளை முகவரிகளோடு பட்டி யல்களாக தயாரித்துள்ளது. தீண்டாமை நிலவும் கிராமங்கள் இருப்பதாக அரசாங்கமும் ஒப்புக் கொள்கிறது.

மனிதனை மனிதன் இழிவுபடுத்தும் இந்தக் கொடுமையை எதிர்த்துத்தான் பெரியார் இயக்கம் தொடங்கினார். ஆனால், பெரியார் தொடங்கிய போராட்டம் இன்னும் முடியவில்லை.

பெரியார் திராவிடர் கழகம் மூன்று கட்டங்களாக பல மாதங்களாக, பல நூறு கிராமங்களில் தொடர்ந்து மக்களை சந்தித்து சாதி, தீண்டாமைக்கு எதிராக பரப்புரைப் பயணம் நடத்தியது. அடுத்தக்கட்டமாக இப்போது போராட்டக் களத்தில் இறங்கியுள்ளது.

தீண்டாமைக் குற்றங்களைத் தடுப்பதற்கும், குற்றவாளிகள் மீது நடவடிக்கை எடுப்பதற்கும் காவல்துறையில் தனிப் பிரிவே இருக்கிறது.

மனித உரிமைப் பிரிவு என்று பெயரில் உள்ள இந்தத் துறை என்ன செய்கிறது? தீண்டாமையைத் தடுக்க வேண்டாமா? குற்றம் புரிந்தோர் மீது கைது செய்து நடவடிக்கை எடுக்க வேண்டாமா? செயல்படாமல் இருப்பதற்கு ஒரு துறையா?

**இந்தக் கேள்விகளோடு - கழகம் களமிறங்குகிறது! திருச்சியில் - அக்.2 இல் தீண்டாமை ஒழிப்புப் பிரிவை இழுத்துப் பூட்டும் போராட்டம்!**

காந்தி பிறந்த நாள் அக்.2; 'தேசியத் தந்தை' பிறந்த நாளில் தேசிய அவமானமாக நீடிக்கும் தீண்டாமைக் கொடுமைகளை சுட்டிக் காட்டுகிறோம்.

இது மக்கள் போராட்டம்; மனித உரிமைப் போராட்டம்; சுயமரியாதைப் போராட்டம்.

தமிழர்களே! உங்கள் ஆதரவை வேண்டி நிற்கிறது, பெரியார் திராவிடர் கழகம்! களப்பணிகளுக்கு, நிதி வழங்கி உதவிடுவீர்!

**– பெரியார் திராவிடர் கழகம்**

# அடித்தல் குறியோடு சாதி போடலாமாம்!



கி.வீரமணியின் ‘லிபர்ட்டி கிரியேஷன்ஸ்’ தயாரித்த பெரியார் படம், தெலுங்கில் ‘ராமசாமி நாயக்கர்’ என்ற சாதிப் பெயருடன் வெளியிடப்படுவதை சுட்டிக்காட்டினோம். முதலில் ராமசாமி நாயக்கர் என்ற பெயரில், தெலுங்கில் வெளியிட சம்மதித்த கி.வீரமணி, நாம் எதிர்ப்பை தெரிவித்தவுடன், அதற்கு சமாதானம் கூறினார். இப்போது ‘நாய்க்கர்’ என்று சாதிப் பெயரைப் போட்டு, அந்தப் பெயரை அடித்தல் கோடு போட்டு வெளியிட முடிவு செய்துள்ளார்களாம். இப்படி நாய்க்கர் பெயர் அடித்தல் குறியோடு வெளியிடப்பட்டிருக்கும் திரைப்பட சுவரொட்டியின் படத்தை ‘விடுதலை’ நாளேடு வெளியிட்டுள்ளது. (அதைத்தான் இங்கு வெளியிட்டுள்ளோம்)

ஒரு காலத்தில் பார்ப்பன பத்திரிகைகள், பெரியாரை ‘நாய்க்கர்’ என்றே குறிப்பிட்டு வந்தன. இதை “பார்ப்பன புத்தி” என்று ‘விடுதலை’ சாடி வந்தது. இப்போது பெரியார் பெயருக்கு அவர்களே சாதிப் பெயரை ஒட்டி வைக்கிறார்கள். 1927 ஆம் ஆண்டிலேயே தனது பெயருக்குப் பின்னால் இருந்த சாதிப் பெயரை நீக்கிக் கொண்ட தலைவர் பெரியார். (25.12.1927 ‘குடிஅரசு’ இதழிலிருந்து பெரியார் தனது சாதிப் பட்டத்தை நீக்கிக் கொண்டார்). இப்போது சாதிப்பெயரை அடித்தல் குறியோடு போடலாம் என்று சாதி ஒழிப்புக்கு புதிய அத்தியாயத்தை கி.வீரமணி தொடங்கி வைத்துள்ளார்.

ஓட்டல்களில் ‘பிராமணாள்’ பெயர் அழிப்புப் போராட்டம் நடத்தினார் பெரியார். இனி, ‘பிராமணாள்’ பெயரையும் அடித்தல் குறியோடு பார்ப்பனர்கள் போட்டுக் கொள்ளலாமா?

கி.வீரமணியும் தனது பெயரோடு சாதிப் பெயரை அடித்தல் குறியோடு போட்டு, இதுதான் சாதி ஒழிப்பு என்று கூறுவாரா? தனது தோழர்களும் அவ்வாறு போட்டுக் கொள்ளலாம், அதுவும் சாதி ஒழிப்புதான்; என்று அறிவிப்பாரா?

தமிழ்நாட்டில் பார்ப்பான் கூட பெயரோடு சாதி வாலை ஒட்டிக் கொள்ள வெட்கப்படும் காலம் இது!

ஆனால் வீரமணி - அதை புதிய பொலிவுடன் பெரியாருக்கே ஒட்ட வைக்கிறார்; வெட்கம்!

## சேலம் மாவட்டத்தில் சுவரெழுத்துகள்



**சேலம் மாவட்டத்தில் தோழர்கள் குமரப்பா, அருள், சௌந்தர், மூர்த்தி, அண்ணாதுரை, பிரவீன் ஆகியோர் சுவரெழுத்து பணியில் ஈடுபட்டுள்ளனர்.**

# புதுவையில் கழகக் கலந்துரையாடல்

23.8.2010 திங்கட்கிழமை அன்று மாலை 6 மணிக்கு புதுவை மாநிலம் அரியாங்குப்பம் மில்லர் அரங்கில், கழகத்தின் புதுவை மாநில மாவட்ட கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையிலும், புதுவை மாநில தலைவர் லோகு அய்யப்பன் முன்னிலையிலும் நடைபெற்ற இக்கலந்தாய்வுக் கூட்டத்தில், புதுவை மாநில அமைப்பாளர் இர. தந்தைபிரியன் வரவேற்புரையாற்றினார். கழகத் தலைவர் உரையில் -

“நாம் ஏற்கனவே இரட்டை குவளை உடைப்புப் போராட்டம் தொடங்கினோம். கடந்த ஆண்டு ஈழப் பிரச்சினையின் அவசியம் கருதி அதில் ஈடுபட்டோம். எனவே மீண்டும் பெரியாரின் அடிப்படைக் கொள்கையான சாதி ஒழிப்பில் நாம் கவனம் செலுத்த வேண்டியுள்ளது. முதலில் தீண்டாமை பற்றி பட்டியல் தயாரித்து, மனித உரிமை சமூக நீதி பிரிவு (தீண்டாமை ஒழிப்புப் பிரிவு) அதிகாரிகளிடம் மனு கொடுப்பது, பிறகு வழக்கு தொடங்குவது என படிப்படியாக நம் போராட்டம் நடைபெற இருக்கிறது. அரசின் கவன ஈர்ப்புக்காக திருச்சி கிறித்துவ சுடுகாட்டிலுள்ள சுவரை அகற்ற வேண்டும் என்ற கோரிக்கையோடு தீண்டாமை ஒழிப்புப் பிரிவு அலுவலகத்தை இழுத்துப் பூட்டும் போராட்டம் முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்தப் போராட்டத்திற்கு அணி திரட்ட வேண்டும், வழக்கமான கலந்துரையாடல் கூட்டங்கள் எல்லாம், ஏன் இந்த வேலைத் திட்டங்களை செய்யவில்லை என்பதைப் பற்றி பேசுவதாகவே அமைந்துவிட்டது. இனி எப்படி செய்யப் போகிறோம் என்ற பேசுவதற்கு இக்கலந்துரையாடல் கூட்டம் பயன்பட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

தோழர்கள் வீராசாமி, விசயசங்கர், சார்லஸ், வீரமோகன், சுப்பு, இளங்கோ, சுரேஷ் ஆகியோர் தங்களது கருத்துகளைக் கூறினர்.

மூன்று மணி நேரத்திற்கு மேலாக பல செய்திகள் விவாதிக்கப்பட்டு, அதற்கு விளக்கம் தெரிவித்த பிறகு, இறுதியாக புதுவை மாநில தலைவர் லோகு அய்யப்பன் உரையாற்றினார். அதிக எண்ணிக்கையில் குடிஅரசு தொகுதிகளை விற்பனை செய்து தருவதாகவும், அக்.2 போராட்டத்தில் குறைந்தபட்சம் முன்னூறு தோழர்கள் கலந்து கொள்வது எனவும் முடிவு செய்யப்பட்டது. தோழர்கள் சுமார் 100 பேர் இக்கலந்துரையாடல் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

# அக்.2 போராட்டத்தை விளக்கி மயிலாடுதுறையில் சுவரெழுத்து

நாகை மாவட்டம் மயிலாடுதுறையில், அக். 2 ஆம் தேதி போராட்டத்தை விளக்கி, சுவரெழுத்துகள் எழுதப்பட்டுள்ளன. சுவரெழுத்துகள் நகர் முழுதும் போராட்டம் பற்றிய விவாதங்களை பொது மக்களிடையே உருவாக்கி இருக்கிறது. கழகத் தோழர்கள் அய்யனார், மயிலை நாத்திகன் ஆகியோர், மயிலாடுதுறை கழகத் தோழர்களுடன் இணைந்து, சுவர் எழுத்துகளை எழுதி வருகின்றனர். தொடர்ந்து நாகை மாவட்டம் முழுதும் சுவரெழுத்துப் பணிகளைத் தொடர ஏற்பாடுகள் நடந்து வருவதாக மாவட்ட செயலாளர் மகேஷ் கூறினார்.

முன்னதாக கடந்த ஆகஸ்ட் 22 ஆம் தேதி நாகை மாவட்டக் கழக கலந்துரையாடல் கூட்டம், மாலை 6 மணியளவில், மயிலாடுதுறையில் ‘புத்தகச் சோலை’யில் நடைபெற்றது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் பங்கேற்றனர். அக்டோபர் 2 ஆம் தேதி போராட்டத்தை மக்களிடையே பரப்பிட சுவரெழுத்து, துண்டறிக்கை வழியாக பரப்புரை நடத்துவது என்றும், போராட்டத்தில், பெருமளவில் தோழர்கள் பங்கேற்பது என்றும் முடிவு செய்யப்பட்டது.

கலந்துரையாடல் கூட்டத்தில் திண்டுக்கல் தாமரைக்கண்ணன், மாவட்டத் தலைவர் பரசுராமன், அமைப்பாளர் இளையராசா மற்றும் கழகப் பொறுப்பாளர்கள் பெரியார் செல்வம், மகேஷ், சங்கர், விஜயராகவன், உள்ளிட்ட பல தோழர்கள் பங்கேற்று கருத்துகளைத் தெரிவித்தனர். கடும் மழை காரணமாக அன்று மாலை நடக்கவிருந்த பொதுக் கூட்டம் தள்ளி வைக்கப்பட்டது.

### அரூரில் கழகக் கூட்டம்

2.8.2010 அன்று மாலை 6 மணிக்கு தர்மபுரி மாவட்டம் அரூர் ரவுண்டானா அருகில் அரூர் ஒன்றிய பெரியார் திராவிடர் கழகம் சார்பாக வன்கொடுமை தடுப்புச் சட்டத்தை அமுல்படுத்தாத தீண்டாமை ஒழிப்புப் பிரிவு அலுவலகத்தை இழுத்துப் பூட்டும் போராட்ட விளக்க பொதுக் கூட்டம் நடந்தது. மேட்டூர் டி.கே.ஆர். இசைக் குழுவினரோடு இணைந்து சமர் பா குமரன் எழுச்சி பாடல்களை பாடினார். தருமபுரி மாவட்ட அமைப்பாளர் வேடியப்பன் தலைமையில் நடைபெற்ற இப்பொதுக்கூட்டத்தில் அறிவுடை நம்பி வரவேற்புரையாற்றினார். பெரியார் பெருந்தொண்டர் பொன்னையன், கணேசன், கோகுலகண்ணன் ஆகியோர் உரைக்குப் பின்பு கழகத்தலைவர் கொளத்தூர் மணி போராட்டத்தை விளக்கி சிறப்புரையாற்றினார். இறுதியாக பரமசிவம் நன்றி கூறினார். தோழர்கள் செந்தில்குமார், ராஜ்குமார், தங்கவேல், சுதாகர் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

### மேட்டூரில் போராட்ட விளக்கக் கூட்டம்

7.8.2010 சனிக் கிழமை அன்று மாலை சேலம் மாவட்டம் மேட்டூர் சின்ன பார்க் அருகில் கழகத்தின் போராட்ட விளக்கப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. சேலம் மாவட்ட பொருளாளர் கோவிந்தராசு தலைமையில் நடைபெற்ற இப்பொதுக் கூட்டம், மேட்டூர் டி.கே.ஆர். இசைக் குழுவின் பாடல்களோடு துவங்கியது. இளவரசன், கோகுலகண்ணன் ஆகியோர் உரைக்குப் பின், கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

### சென்னை மாவட்டக் கழக கலந்துரையாடல்

சென்னை மாவட்டக் கழக கலந்துரையாடல் கூட்டம் 5.8.2010 அன்று மாலை சென்னை அயனாவரம் நூர் ஓட்டல் அருகே உள்ள நாடார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. கழகத் துணைத் தலைவர் ஆனூர் ஜெகதீசன் தலைமை தாங்கினார். பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், வழக்கறிஞர் குமாரதேவன், சென்னை மாவட்டக் கழகப் பொறுப்பாளர்கள் உரையாற்றினர்.

### புதுவையில் ஈழம் – போபால் மக்கள் படுகொலைக் கண்டனக் கருத்தரங்கம்


ஈழத்திலும், போபாலிலும் மக்கள் படுகொலைக்கு துணை போன காங்கிரஸ் ஆட்சியைக் கண்டித்து கருத்தரங்கு புதுவையில் 3.7.2010 அன்று அரியாங்குப்பத்திலுள்ள கேப்டன் மில்லர் நினைவரங்கத்தில் நடைபெற்றது. இரா. வீராசாமி தலைமையில் நடந்த கண்டனக் கருத்தரங்கில், லோகு. அய்யப்பன் (புதுவை மாநில கழகத் தலைவர்), இரா. அழகிரி (தமிழர் தேசிய இயக்கம்), புரட்சி வேந்தன் (மக்கள் ஜனசக்தி), ந.மு. தமிழ்மணி (செந்தமிழர் இயக்கம்), முத்துக்கண்ணு (செந்தமிழர் இயக்கம்), எஸ்.யு. முத்து (பார்வர்டு பிளாக் கட்சி), கு. இராமமூர்த்தி, இராம. சேகர் (புரட்சிப் பாவலர் இலக்கியப் பாசறை) ஆகியோர் உரையாற்றினர். இறுதியில் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் சிறப்புரையாற்றினார்.

“புரட்சிப் பெரியார் முழக்கம்” ஆண்டுக்கட்டணம் ரூ.150/-
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41. ✆ 99416 13535

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 2nd September 2010

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



புரட்சிப்

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | periyardk.org | திருவள்ளுவர் ஆண்டு 2041 | செப்டம்பர் 09, 2010 | புரட்சி 9 | முழக்கம் 35 | விலை: ரூ.2.50


## மண்டல் பரிந்துரைக்கு பட்டை நாமம்!

# மத்திய அரசில் பிற்படுத்தப்பட்டோர் 7 சதவீதம் மட்டுமே

மண்டல் பரிந்துரையின் கீழ் மத்திய அரசு பதவிகளில் பிற்படுத்தப்பட்டோருக்கு 27 சதவீத இடஒதுக்கீடு அமுல்படுத்தப்பட்டு 17 ஆண்டுகள் உருண்டோடிவிட்டன. ஆனால், மத்திய அரசின் குரூப் ஏ, பி, சி, டி பிரிவுகளில் நியமிக்கப்பட்டுள்ள பிற்படுத்தப்பட்டோர் எண்ணிக்கை 6.87 சதவீதம் மட்டும் தான். இந்த அதிர்ச்சியான உண்மை, தகவல் அறியும் சட்டத்தின் கீழ், இப்போது அம்பலமாகியுள்ளது. 20 சதவீத இடங்கள் நிரப்பப்படாமல் கிடப்பில் போடப்பட்டுள்ளன. சமூக நீதிப் போராளியும், பொறியியல் விஞ்ஞானியும், சென்னை அய்.அய்.டி. பார்ப்பன நிறுவனத்துக்கு எதிராக போராடி வருபவருமான சென்னை பேராசிரியர் ஈ. முரளிதரன், மத்திய அரசின் வேலை வாய்ப்புத் துறை அமைச்சகத்துக்கு, தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ், விளக்கம் கேட்டு விண்ணப்பித்தார். ஏ, பி, சி, டி பிரிவுகளுக்கான மத்திய அரசு வேலைகளில், பிற்படுத்தப்பட்டோர் எண்ணிக்கை, விகிதாசாரம் பற்றிய தகவல்களை தெரிவிக்கக் கோரி இருந்தார். இதற்கு மத்திய வேலை வாய்ப்புத் துறை அமைச்சகம் பதில் அளித்துள்ளது. இதன்படி, 2008 ஜனவரி முதல் தேதி நிலவரப்படி, மத்திய அரசில், மேற்குறிப்பிட்ட ஏ, பி, சி, டி பிரிவுகளில் பணியாற்றும் பிற்படுத்தப்பட்டோரின் மொத்த எண்ணிக்கையே 1,93,228 மட்டும் தான். இவற்றில் பிற்படுத்தப்பட்ட சமூகப் பிரிவைச் சார்ந்த 2430 துப்புறவுத் தொழிலாளிகளும் அடங்குவர். சிவில் துறை வேலைகளிலும், அய்.ஏ.எஸ். போன்ற அதிகாரப் பதவிகளிலும், பிற்படுத்தப்பட்டோருக்கான நேரடி நியமனங்கள், 1993 ஆம் ஆண்டு செப்டம்பர் 8 ஆம் தேதி முதல் அமுலாகி வருகிறது. இதில் 5031 பேர் மட்டுமே 'ஏ' பிரிவு அதிகாரிகளாக நியமிக்கப்பட்டனர். இந்தப் பிரிவில் மொத்தம் நியமிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 91,881. இதில் பிற்படுத்தப்பட்டோர் 5.5 சதவீதம் மட்டுமே.

அதேபோல் 'பி' பிரிவில் 1,37,272 பிற்படுத்தப்பட்டோர் மட்டுமே நியமிக்கப்பட்டுள்ளனர். இது 3.9 சதவீதம் மட்டுமே! 'சி' பிரிவில் 18,10,141 பேர் நியமிக்கப்பட்டனர். இது 8.1 சதவீதம் 'டி' பிரிவில், துப்புறவு தொழிலாளர் நீங்கலாக நியமிக்கப்பட்டவர்கள் 6,96,891. அதாவது 5 சதவீதம் மட்டும்! துப்புறவு தொழிலாளர்களுக்கான காலி இடங்களில் 3.2 சதவீத பிற்படுத்தப்பட்டோர் நியமிக்கப்பட்டுள்ளனர். துப்புறவு தொழிலில் பிற்படுத்தப்பட்டோரைவிட, தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினரே, பெருமளவில் ஈடுபடுகின்றனர். 75,901 துப்புறவுத் தொழிலாளர் பணிகளில் 51.4 சதவீதம் பட்டியல் இனத்தைச் சார்ந்தவர்களும், 6 சதவீதம் பழங்குடியினப் பிரிவினரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

2009 ஆம் ஆண்டு நிலவரப்படி மத்திய அரசுப் பதவிகளில் உள்ள பிற்படுத்தப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை பற்றிய விவரத்தை பேராசிரியர் முரளிதரன் கேட்டிருந்தார். மொத்த பிற்படுத்தப்பட்டோர் எண்ணிக்கையை ஒருமுகப் படுத்தி, தகவல்களை சேகரிக்கும் நிர்வாக அமைப்பு முறை எதுவும் இல்லை என்று, மத்திய அமைச்சகம், இதற்கு பதில் அளித்துள்ளது. 2008 ஜனவரி முதல் தேதி வரை மட்டுமே ஒவ்வொரு பிரிவு வாரியாக விவரங்கள் உள்ளன என்றும், 2009 ஆம் ஆண்டு நிலவரம் பற்றிய தகவல்கள் ஏதும் இல்லை என்றும் அமைச்சகம் கூறியுள்ளது. தற்போது தந்துள்ள தகவல்கள்கூட மத்திய அரசின் அனைத்துத் துறைகளுக்கானது அல்ல. மத்திய அரசின் கீழ் உள்ள 6 துறைகள் தொடர்பாக பிற்படுத்தப்பட்டோர் நியமனம் பற்றிய தகவல்கள் ஏதும் கிடைக்காததால் இதில் சேர்க்கப்படவில்லை என்று அமைச்சகம் கூறிவிட்டது. அந்த 6 அமைச்சகத் துறைகளின் பெயர்களை வெளியிடவும் மறுத்து விட்டது.


பட்டியல் இனப் பிரிவினருக்கு ஒதுக்கப்பட வேண்டிய 22 சதவீத இடங்களில் 17.45 சதவீதமும் (4,90,773 வேலைகள்) பழங்குடியினருக்கான 7.5 சதவீத ஒதுக்கீட்டில், 6.83 சதவீதமும் நிரப்பப்பட்டுள்ளன.

பிற்படுத்தப்பட்டோருக்கான 27 சதவீத இட ஒதுக்கீடு அமுலுக்கு வந்துவிட்டதால், நிர்வாகத் திறன் சீர்கெட்டு விட்டதாகவும் பார்ப்பனர் முன்னேறிய சாதியினரின் வேலை வாய்ப்புகள், பறிக்கப்பட்டு விட்டதாகவும், பார்ப்பனர்களும், பார்ப்பன ஏடுகளும் எழுதியும் பேசியும் வருகின்றன. இந்த நிலையில் உண்மை நிலவரத்தை இந்தப் புள்ளி விவரங்கள் வெளிப் படுத்தியுள்ளன.

இந்திய அரசு இன்னும் பார்ப்பன அதிகாரப் பிடியில் நீடிக்கிறது. அதன் காரணமாகவே, பிற்படுத்தப்பட்டோருக்கான இடஒதுக்கீடுகள் நிரப்பப்படாமல், அலட்சியப்படுத்தப்படுகின்றன. அதிலும், 6 மத்திய அரசு துறைகள், பிற்படுத்தப்பட்டோர் நியமனம் பற்றிய தகவல்களையே தர மறுக்கின்றன.

அப்படியானால், அங்கு இட ஒதுக்கீடுகளே செய்யாத நிலைதான் நீடிக்கிறது என்றே கருத வேண்டியுள்ளது. உண்மை வெளியே தெரியக் கூடாது என்பதால், மூடி மறைக்கின்றன.

## கடவுள் பிரபஞ்சத்தைப் படைக்கவில்லை




உலகத்தைக் கடவுள் படைக்கவில்லை; இயற்பியலில் (Physics) அது தானாகவே உருவானது என்று உலகின் மிகப் பெரும் இயற்பியல் விஞ்ஞானி பேராசிரியர் ஸ்டீபன் ஹாக்கிங், அண்மையில் புதிதாக வெளியிட்டுள்ள 'தி கிராண்ட் டிசைன்' எனும் நூலில் எழுதியுள்ளார். அமெரிக்காவைச் சார்ந்த மற்றொரு இயற்பியல் விஞ்ஞானி லியோனார்டு லோடினோவ் என்பவருடன் இணைந்து இந்த நூலை எழுதியுள்ளார். இந்த உலகம் (பிரபஞ்சம்) உருவாவதற்கு முன்பு மிகப் பெரும் வெற்றிடம் இருந்தது. இதை உருவாக்க கடவுளுக்கு அவசியம் இல்லை; கடவுள் உருவாக்கவும் இல்லை. தத்துவவாதிகள் (மத வாதிகள்) கூறுவது போல், உலகத்துக்கு வெளியிலிருந்தும் எவரும் படைக்கவில்லை. அதற்கு வாய்ப்பும் இல்லை. "கடவுள் வந்து, தடவிப் பார்த்து, உலகமே நீ உருவாகு' என்று கூறுவது அபத்தமானது என்றும் ஹாக்கிங் கூறியுள்ளார்.

விண்வெளி ஆய்வுக்கு தனது ஆராய்ச்சிகள் வழியாக பெரும் பங்காற்றியவர் ஸ்டீபன் ஹாக்கின்ஸ். பூமியை உருவாக்குவதில் 'கடவுளுக்கும்' பங்கு இருக்கலாம் என்ற கருத்தையே ஏற்கனவே முன் வைத்தார். அந்தக் கருத்தை, இப்போது தாம் மாற்றிக் கொண்டு விட்டதாக புதிய நூலில் குறிப்பிட்டுள்ளார். இந்த புதிய நூல் அடுத்த வாரம் விற்பனைக்கு வரவிருக்கிறது. ஆனால், இப்போது வெளியிட்ட ஆய்வு நூலில், கடவுளுக்கும் பிரபஞ்சம் உருவானதற்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று உறுதியாகக் கூறிவிட்டார். புதிய நூலில் இவ்வாறு எழுதியிருக்கிறார்.

"எனக்கு நானே இரண்டு கேள்விகளைக் கேட்டுக் கொள்கிறேன். முதல் கேள்வி, இந்த பிரபஞ்சம் உருவானதற்கான காரணம், நம்மால் புரிந்து கொள்ள முடியாது. புரிந்து கொள்ள முடியாத காரணங்களுக்காகவே கடவுள், இந்த உலகை உருவாக்கினாரா? இது முதல் கேள்வி. அறிவியல் கோட்பாடுகளின் அடிப்படையில், உலகம் (பிரபஞ்சம்) உருவானதா என்பது இரண்டாவது கேள்வி.

இதில் இரண்டாவது கேள்வியையே நான் ஆதரிக்கிறேன். இயற்பியல் கோட்பாடுகள்தான் பிரபஞ்சத்தை உருவாக்கியது என்று நான் கூறுவதை, நீங்கள் ஏற்கத் தயங்கினால், அந்த அறிவியலுக்கு, கடவுள் என்று நீங்களே பெயர் சூட்டிக் கொள்ளுங்கள். ஆனால், இந்த பிரபஞ்சத்தை உருவாக்கியதில், எந்தக் கடவுளும் உரிமை கோர முடியாது என்பதே எனது உறுதியான கருத்து" - என்று தனது நூலில் திட்டவட்டமாகக் கூறியுள்ளார்.

மதவாதிகளுக்கு, சரியான சம்மட்டி அடியை ஸ்டீபன் ஹாக்கிங் ஆய்வு தந்துள்ளது. பிரபஞ்சம் உருவானதற்கான காரணம், பெருவெடிப்பு கொள்கைதான் என்பதும், அது குறித்து, விரிவான ஆய்வு நூல்களையும் ஏற்கனவே ஸ்டீபன் ஹாக்கிங் எழுதியுள்ளார். இது குறித்து 1998 இல் அவர் எழுதிய "தி பிரீப் ஹிஸ்டரி ஆப் டைம்" என்ற நூல், உலகப் புகழ் வாய்ந்ததாகும். (இதன் தமிழ்மொழி பெயர்ப்பு 'காலம்' என்ற பெயரில் வெளி வந்துள்ளது. தோழர் நலங்கிள்ளி, தமிழாக்கம் செய்துள்ளார்.) இங்கிலாந்திலிருந்து வெளி வரும் பிரபல 'சண்டே டைம்ஸ்' ஏடு, வெளியிட்ட சிறந்த புத்தக வரிசையில், தொடர்ந்து 237 வாரங்கள் முதலிடம் பிடித்து, சாதனை படைத்தது இந்த நூல்.


**ஸ்டீபன் ஹாக்கிங் வாழ்க்கைப் போராட்டம் – உள்ளே**

**தலையங்கம்**

# தலைமைச் செயலாளர்கள் என்றாலே பார்ப்பனர் தானா?

நாள்தோறும் முதலமைச்சருடனும், மூத்த அமைச்சர்களுடனும் விவாதித்து, தமிழ்நாட்டின் தலைமை நிர்வாக அதிகாரியாக செயல்படும் தலைமைச் செயலாளர் பதவி என்பது கோட்டையில் முக்கியத்துவம் வாய்ந்த முதன்மையான பதவியாகும். அ.தி.மு.க. பொதுச்செயலாளர் செல்வி ஜெயலலிதா, 2001 இல் மீண்டும் ஆட்சிக்கு வந்தவுடன் அவர் எடுத்த முதல் நடவடிக்கை, தில்லியில் மத்திய அரசுப் பணியில் இருந்த பார்ப்பனர் பி.சங்கர் என்பவரைத் தேடிப் பிடித்து அழைத்து வந்து தலைமைச் செயலாளர் பதவியில் அமர்த்தியதுதான்.

பார்ப்பன அதிகாரி பி. சங்கரைத் தொடர்ந்து, தனது ஐந்தாண்டு கால ஆட்சியில் நான்கு பார்ப்பனர்களைத் தேடித் தேடி பதவியில் அமர்த்தினார் ஜெயலலிதா. பி. சங்கர், சுகவனேஸ்வர், லட்சுமி பிரானேஷ், என். நாராயணன் என்று நீடித்த பார்ப்பன தலைமைச் செயலாளர்கள் பட்டியலைப் பார்த்து கொதித்துப் போனது நாம் மட்டுமல்ல, தி.மு.க.வின் அதிகாரபூர்வ ஏடான முரசொலியும்தான். முன்னாள் அமைச்சர் க.பொன்முடி ஒரு நீண்ட கட்டுரையையே எழுதி தி.மு.க.வின் கண்டனத்தைத் தெரிவித்தார்.

அடுத்து வந்த தி.மு.க. ஆட்சியில், "சூத்திரர்" கலைஞர் கருணாநிதி முதலமைச்சராக இருக்கும் ஆட்சியில் என்ன நிலைமை?

எல்.கே. திரிபாதி என்ற ஒரிசா பார்ப்பனரைத் தேடிப் பிடித்து பதவியில் அமர்த்தினார் கலைஞர் கருணாநிதி. அதற்கடுத்து, அவர் ஓய்வு பெற்றபோது இரண்டாண்டுகளுக்கு முன், கே.எஸ்.சிறீபதி என்ற பார்ப்பனர் அந்தப் பதவிக்குக் கொண்டு வரப்பட்டார். அவர் ஓய்வு பெற்றபோது மத்திய அரசிடம் வாதாடி, 6 மாத காலம் பதவி நீடிப்பு பெற்றுத் தந்தது மட்டுமல்ல, தற்போது மாநிலத்தின் தலைமைத் தகவல் அதிகாரியாக நியமித்துள்ளது 'சூத்திரர்' அரசு. (நேர்மையான தலித் அதிகாரி உமாசங்கருக்குத் தண்டனை – தங்கள் விருப்பங்களுக்கு எல்லாம் தாளம் போடும் பார்ப்பனர் சிறீபதிக்கு வெகுமானம்; எப்படி இருக்கிறது சமூகநீதி!)

சிறீபதியைத் தொடர்ந்து மீண்டும் ஒரு பார்ப்பன அம்மையார் எஸ். மாலதியை தலைமைச் செயலாளராக நியமித்துள்ளது தி.மு.க. அரசு. இவர்கள் ஒவ்வொருவரும் நியமிக்கப்பட்ட போதும், ஏராளமான தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சமுதாய அதிகாரிகளின் சீனியாரிட்டியை புறந்தள்ளியே நியமிக்கப்பட்டார்கள் என்பது வேறு செய்தி!

சங்கர் முதல் மாலதி வரை, தொடர்ந்து ஏழு பார்ப்பனர்களே தலைமைச் செயலாளர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர். தமிழ்நாட்டின் வரலாற்றில் இதற்கு முன் இவ்வாறு நடந்தது இல்லை. திராவிட இயக்க ஆட்சி என்று கூறிக்கொள்வோர் ஆட்சியில்தான் இந்த சமூக நீதிக்கு விரோதமான போக்கு.

பார்ப்பனர் ஜெயலலிதா நான்கு பார்ப்பனர்களை உயர் பதவியில் அமர்த்தினார். அடுத்து வந்த "சூத்திரர்" கலைஞர் கருணாநிதி மூன்று பார்ப்பனர்களை வெட்கமின்றி தலைமைச் செயலாளர்களாக நியமித்துள்ளார். இந்த இரண்டு ஆட்சிகளுக்கும் நடைமுறையில் என்ன வேறுபாடு என்று கேட்க விரும்புகிறோம்.

'வாழும் பெரியார்' கலைஞர் தலைமையிலான "சூத்திர" ஆட்சியைப் பாதுகாப்பதே தங்கள் கடமை என்று மூச்சுக்கு முந்நூறு தடவை கூறிவரும் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி, இந்த அநீதியை எதிர்த்து வாய் திறக்காதது ஏன்?

தலைமைச் செயலாளர் மட்டுமல்ல, திருச்சி பாரதிதாசன் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் பதவிக்குத் தகுதியும் திறமையும் வாய்ந்த பல தமிழர்கள், கல்வியாளர்களைப் புறக்கணித்து விட்டு, பார்ப்பன அம்மையார் மீனா என்பவரை நியமித்திருக்கிறது இந்த சூத்திர ஆட்சி!

நிதி, உள்துறை, சுகாதாரம், கல்வி, பொதுப்பணி போன்ற முக்கிய துறைகளின் செயலாளர்களாகத் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த அய்.ஏ.எஸ். அதிகாரிகளை நியமிக்காத 'நவீன தீண்டாமை'யும் கோட்டையில் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது.

தி.மு.க. ஆட்சியை விமர்சித்து பத்திரிகைகள் எழுதும்போது மட்டும், சூத்திரன் என்பதால்தான் தன்னைப் பார்ப்பன ஏடுகள் பிராண்டு கின்றன என்று கலைஞர் கருணாநிதி புலம்புவது வாடிக்கை. தங்கள் ஆட்சியை விமர்சிக்கும் பத்திரிகைகளை பார்ப்பான், பார்ப்பான் பத்திரிகை என்று பக்கத்துக்கு பக்கம் எழுதும் 'முரசொலி'யைக் கேட்கிறோம். இந்த சமூகநீதிக்கு விரோதமான பார்ப்பன நியமனங்களை என்னவென்று அழைப்பது?

பத்திரிகை என்றால் மட்டும் பார்ப்பனர்களை எதிர்ப்பது, உயர் பதவி என்று வந்துவிட்டால் பார்ப்பனர்களைத் தேடிப் பிடித்து அமர்த்தி அழகு பார்ப்பது என்பது இரட்டை வேடம் அல்லவா? இந்த பாசாங்கு நடவடிக்கைகளை பார்ப்பனரல்லாத மக்கள் உன்னிப்பாகக் கவனித்து வருகிறார்கள்.

சமூகநீதியைக் குழிதோண்டிப் புதைக்கும் இந்த அக்கிரமத்தை கோடானுகோடி தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களின் சார்பில் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

தொடர்ந்து ஏமாற மாட்டார்கள், எச்சரிக்கை!

# பகுத்தறிவு "உபதேசம்" மேடைப் பேச்சுக்கு மட்டுமா?

"நட்ட கல்லை தெய்வமென்று நாலு புஷ்பம் சாத்தியே, சுத்தி வந்து மொண மொணன்னு சொல்லு மந்திரம் ஏதடா? நட்ட கல்லும் பேசுமோ நாதன் உள்ளிருக்கையில்" என்று சித்தர் சிவ பாக்கியர் பாடியிருக்கிறார். அதனால் பயப்படாமல், இந்தக் கருத்துக்களை படக் காட்சிகள் வாயிலாகவும் எடுத்துச் சொல்வது தவறு அல்ல; இந்தப் படத்திலே இதுபோன்ற பகுத்தறிவுக் கருத்துக்கள், சீர்திருத்த கருத்துக்கள் நிறைய வரவேண்டுமென்று நான் விரும்புகிறேன்; பயப்படக் கூடாது."

- நடிகை குஷ்பு சுந்தரின் தயாரிப்பான 'நகரம்' திரைப்பட விழாவில், பாடல் குறுந்தகடு வெளியீட்டு விழாவில் பங்கேற்ற முதல்வர் கலைஞர் கருணாநிதி, இப்படி பகுத்தறிவு பேசியிருக்கிறார். மகிழ்ச்சி; வரவேற்க வேண்டிய கருத்துதான்.

ஆனால், தமிழக அரசுத் துறை, எங்கே போய்க் கொண்டிருக்கிறது? அரசு வளாகத் துக்குள் கோயில்கள் கட்டப்படுகின்றன. தலைமைச் செயலகம் உள்பட அரசு கட்டிடங்கள் கால்கோள் விழாவுக்கு பார்ப்பனப் புரோகிதர்களை அழைத்து, 'பூமி பூஜை'கள் நடத்தப்படுகின்றன. காவல் நிலையங்களில் கடாவெட்டி, 'பரிகாரம்' செய்யப்படுகிறது.

'வாஸ்து மீன்'களை வாங்கி வைத்திருக்கும் காவல் நிலையங்கள் உண்டு. அதை காவல்துறை அதிகாரிகளே விழா நடத்தி தொடங்கி வைத்த செய்திகளும் வந்தன.

அண்மையில் வந்த ஒரு செய்தியை உதாரணத்துக்காக மட்டும் சுட்டிக் காட்டுகிறோம்.

"தியாக துருவம் போலீஸ் ஸ்டேஷனில் வாஸ்து முறைப்படி விநாயகன் சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. தொடர்ந்து தலைவலி ஏற்படுத்தும் சம்பவங்களும், மர்மச் சாவுகளும் நடந்ததால், கலக்கமடைந்த நிலையில் போலீசார் இருந்தனர். வாஸ்து சாஸ்திரப்படி தெரு முடியும் இடத்தில், அதற்கு எதிரில் ஸ்டேஷன் அமைந்துள்ளதால், அதற்கு பரிகாரமாக விநாயகன் சிலையை ஸ்டேஷன் எதிரில் பிரதிஷ்டை செய்தால் பிரச்னை தீரும் என்று சிலர் ஆலோசனை அளித்துள்ளனர். அதன்படி போலீஸ் ஸ்டேஷன் காம்பவுண்ட் மீது விநாயகர் சிலை சில தினங்களுக்கு முன் பிரதிஷ்டை செய்யப்பட் டுள்ளது" - 'தினமலர்' 31.8.2010 (கோயில் படத்தையும் அந்த ஏடு வெளியிட்டுள்ளது)

அரசுத் துறைகளில் மதச்சார்பின்மைக்கு எதிராக 'இந்து' மதமாக்கப்பட்டு வருவதை தமிழக முதல்வர், தடுத்து நிறுத்தாதது ஏன்? பகுத்தறிவு 'உபதேசம்' மேடைப் பேச்சுக்கு மட்டும் தானா?

# பெரியாருடன் ஒரு பயணம்

## (1925-1938 "குடிஅரசு" தொகுப்புகளின் வழியே)

18.9.2010 சனிக்கிழமை மாலை 5 மணி

தேவநேயப் பாவாணர் நூலக அரங்கு, அண்ணா சாலை, சென்னை

வரவேற்புரை: பாஸ்கர், "கீற்று" ஆசிரியர் குழு

"குடிஅரசு" இதழ் தொகுப்பு:

1925-1926 : ச.தமிழ்ச்செல்வன், பொதுச் செயலாளர், தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்கள் கலைஞர்கள் சங்கம்

1927 - 1929 : ஓவியா

1930 - 1932 : அழகிய பெரியவன்

1933 - 1935 : பூங்குழலி

1936 - 1938 : பேராசிரியர் ஹாஜா கனி, பொதுச் செயலாளர், தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகம்

"ரிவோல்ட்" ஆங்கில இதழ் தொகுப்பு: விடுதலை இராசேந்திரன்

தொகுப்புரை : கொளத்தூர் மணி,

நன்றியுரை : பிரபாகரன், கீற்று ஆசிரியர் குழு.

ஏற்பாடு: "கீற்று" இணைய தளக் குழு

# அமைச்சர் தங்கம் தென்னரசு தலைமையில் கழகத் தோழர் சிகாமணி – ரேகா மணவிழா



23.8.2010 அன்று மாலை சென்னையில் கழகத் தோழர் சிகாமணி - ரேகா ஆகியோர் வாழ்க்கை துணை ஏற்பு விழா பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தலைமையில் நடைபெற்றது. கழகத்தின் துணைத் தலைவர் ஆனூர் செகதீசன் திருமணத்தை நடத்தி வைத்தார்.

சிகாமணி துணைவியாரை இழந்தவர். ஒரு மகளுக்கு தந்தை. அதைப் போலவே ரேகா அவர்களும் துணைவரை இழந்தவர். இரு குழந்தைகளுக்கு தாய் என்பது குறிப்பிடத்தக்கது. தோழர் சிகாமணி தலைமை செயலக ஊழியர். கல்வி அமைச்சர் தங்கம் தென்னரசு துறை அலுவலகராகப் பணியாற்றி வருகிறார்.

இவ்விழாவில் அமைச்சர் தங்கம் தென்னரசு பேசுகையில் - தந்தை பெரியாரின் சிறந்த கொள்கையாளராக சிகாமணி திகழ்ந்ததால்தான் துணிவான இம்முடிவை அவரால் எடுக்க முடிந்தது என்று பாராட்டினார். மிகவும் நேர்மையுடனும், அப்பழுக்கு இல்லாமலும் பணியாற்றி வருகிறார். நான் உள்ளிட்ட எனது குடும்பத்தாரும் மிகுந்த அன்பு செலுத்தும் ஒருவராக உள்ளார். எந்த நிலையிலும் கொள்கை சமரசம் செய்யாதவர். இவரைப் போன்றவர்கள் பெரியார் திராவிடர் கழகத்தில் இருப்பது எனக்கு மிகப் பெரிய மனநிறைவை தருகிறது" என்றார். சிகாமணியை பாராட்டுவதைப் போல், இம் முடிவை துணிந்து எடுத்த ரேகா அவர்களையும் பாராட்ட வேண்டும்" என்றும் குறிப்பிட்டார்.

நிகழ்ச்சியில் சென்னை மாவட்ட நிர்வாகிகளும், பகுதி நிர்வாகிகளும் பங்கேற்றனர். சேத்துப்பட்டு ராசன் திருமணப் பணிகளை முன்னின்று நடத்தினார். அன்பு தனசேகரன் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார். மணமக்கள் சார்பாக 'புரட்சிப் பெரியார் முழக்கம்' இதழுக்கு ரூ.1000 நன்கொடை அளிக்கப்பட்டது.

# கடவுள் மறுப்பாளரிடம் 'ஆசி' பெற்ற போப்

வாழ்க்கையில் எதிர்நீச்சல் போட்டு வருபவர் ஸ்டீபன் ஹாக்கிங். குழந்தைப் பருவத்திலேயே அவரது உடலில், உயிர் காக்கும் அணுக்கள் சாகத் தொடங்கிய நிலையில், இதைத் தடுக்கும் மருத்துவம் உலகில் கண்டு பிடிக்கப்படவில்லை என்று மருத்துவர்கள் கை விட்டனர். உலகப் புகழ் பெற்ற மருத்துவர்கள் சோதித்து, அவர் உயிரோடு வாழும் காலம் மிகக் குறுகியது என்பதால், வீட்டில் மகிழ்ச்சியுடன் வைத்திருங்கள் என்று கூறி விட்டனர். கை கால்கள் செய லிழந்தன; வாய்ப் பேச்சும் இல்லை; மனம் தளராத ஸ்டீபன் ஹாக்கிங், பெற்றோர்களைத் தேற்றி, தனக்கு ஆய்வு நடத்த தனி அறையையும், நூல்களையும் கேட்டு வாங்கிக் கொண்டார். அவர் சொல்ல விரும்பும் கருத்தை, எழுதிக் காட்டவும் முடியாத நிலையில், வாயிலிருந்து வரும் குரலைக் கொண்டு எழுதும் ஒரு கருவியை அவரே தயாரித்தார். அதைக் கண்டு விஞ்ஞானிகளும், பெற்றோரும் வியப்பில் மூழ்கினர். அதே கருவியைக் கொண்டு தான் இப்போதும் பேசி வருகிறார். உடல் உறுப்புகள் செயலிழந்து சக்கர நாற்காலியில் வலம் வருகிறார். அவரது மூளை மட்டும் அசாத்தியமாக இயங்குகிறது. பெற்றோர்கள் கடவுள் நம்பிக்கையாளர்கள்.

ஆனால் உடல் உறுப்புகள் செயலிழந்துள்ள இவரோ உள்ளம் தளராத அழுத்தமான கடவுள் மறுப்பாளர். உடலின் ஊனம் அவரை கடவுள் நம்பிக்கைக்கு இழுத்துப் போக வில்லை. "பல கோடிக்கணக்கான மக்கள் கடவுளை நம்புகிறார்கள் என்பதற்காக அந்த பொய்யை, புத்தியுள்ள மனிதன் ஏற்கத் தேவை இல்லை" என்கிறார். விஞ்ஞானிகள் கண்டுபிடித்த ஒவ்வொரு புதுமையான கருத்துகளையும், பாமரர்களும் புரிந்து கொள்ளும் வகையில், எளிமைப்படுத்த வேண்டும். அதுவே இன்றைய அறிவாளிகளின் முக்கிய கடமை என்று வலியுறுத்தி வருகிறார்.

2009 ஆம் ஆண்டு உலக கத்தோலிக்க மதத்தின் தலைவரான போப், ரோம் நாட்டில், 'கடவுளும், பிரபஞ்சமும்' என்ற தலைப்பில் கிறிஸ்தவ தலைமைச் சபையில் ஒரு மாநாட்டைக் கூட்டினார். அம் மாநாட்டுக்கு கடவுளை மறுக்கும் ஹாக்கிங்கை, போப் அழைத்தார். தனது உடல் நலிவையும் பொருட்படுத்தாது, ஹாக்கிங், சிறப்பான பாதுகாப்பு ஏற்பாடுகளுடன், மாநாட்டுக்குச் சென்றார். உலகம் முழுதுமிருந்தும் வந்திருந்த விஞ்ஞானிகள், மதத் தலைவர்கள் போப்பிடம், தலை தாழ்த்தி ஆசி பெற்றனர். ஆனால் ஸ்டீபன் ஹாக்கிங் சக்கர நாற்காலியில் அசைவற்று உட்கார்ந்து இருந்த நிலையில், போப் இறங்கி வந்து ஹாக்கிங் முன், முழங்காலிட்டு தலைகுனிந்து, தன்னை வாழ்த்தும்படி கேட்டார். போப், மண்டியிட்டு, ஆசி பெற்றது உலக வரலாற்றில் இதுவே முதல்முறை. அதுவும் கடவுளை மறுக்கும், ஒரு பகுத்தறிவாளர் முன்!

ஹாக்கிங் - மாநாட்டில், தான் கண்டுபிடித்த கருவியின் வழியாக பேசினார். பூமியையோ, நட்சத்திரத்தையோ, சூரியனையோ, நிலவையோ, உயிரினத்தையோ கடவுள் படைக்கவில்லை. மதத் தலைவர்களாகிய நீங்கள் அப்படிப் பேசுவதும் போதிப்பதும் பொய். இது பொய் என்பதை விஞ்ஞானம் நிரூபித்துவிட்டது என்று ஆணித்தரமாக, தனது கருத்துகளை எடுத்துரைத்தார். இறுதியாகப் பேசிய போப், "விஞ்ஞானிகளின் கண்டுபிடிப்புகளை மறுத்து, அவர்களை மதம் தண்டித்து தவறு; அதற்காக மன்னிப்புக் கோருகிறேன்" என்றார். (பூமி தட்டை அல்ல; உருண்டை தான் என்று கலிலியோ கூறியதற்காக, அவரை கிறிஸ்துவ மதம் தண்டித்த தற்கு, போப் மன்னிப்புக் கேட்டது இந்தச் சூழ்நிலையில் தான்)



**வாழ்க்கையுடன் போராடும் ஸ்டீபன்**

ஆனாலும் விஞ்ஞானத்துக்கு அப்பால், அதிசயப் படைப்புகளைக் கொண்ட ஒரு சக்தி இருக்கிறது என்றும், அதிசயமாக உயிர் வாழும் ஹாக்கிங்கையும், அத்தகைய தெய்வம்தான் படைத்திருக்க முடியும் என்றும் மதவாதி களுக்கே உரிய வலிமையற்ற வாதத்தையே போப் அப்போது முன் வைத்தார்.

போக் சந்திப்பைத் தொடர்ந்து, ஸ்டீபன் ஹாக்கிங் மற்றொரு கருத்தையும் முன் வைத்தார். "பூமிப் பந்தில் மட்டு மல்லாது, வேறு ஒரு கோளத்திலும், மனிதர்களைவிட சிறந்த அறிவுள்ள உயிரினங்கள் வாழ்வதற்கான வாய்ப்புகள் உள்ளன. அவர்கள் நமது பூமியைக் கண்டறிவதற்கு முயற்சித்து வரலாம் என்று கருதுகிறேன். நம்மிலும் அறிவில் சிறந்த அந்த உயிரினம் இங்கே எப்போதாவது வரக் கூடும். அது பற்றி ஆராய்ந்து வருகிறேன். இது எனது கற்பனையல்ல; விஞ்ஞான கண்டுபிடிப்பு" என்று கூறி யுள்ளார். வேறு சில விஞ்ஞானிகளும் இந்தக் கருத்தை ஏற்றுள்ளனர்.

நியுயார்க் நகரில் ஸ்டீபன் ஹாக்கிங்கைப் பாராட்டி, கடந்த ஜூன் 4 ஆம் தேதியிலிருந்து மூன்று நாட்கள் பாராட்டு விழாக்கள் நடந்தன. பல்துறை கலைஞர்களும், விஞ்ஞானிகளும் இசை, நாட்டியம், நாடகம் ஆகிய கலைகளின் வழியாக, பாராட்டி மகிழ்ந்து அந்த விஞ்ஞானியை கொண்டாடினர்.

விழாவில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றுப் பேசிய ஸ்டீபன் ஹாக்கிங், "கோளங்களில் இருண்ட குகைகள் இருக்கின்றன. அந்த இருட்டைவிட, விஞ்ஞானத்தைப் புரிந்து கொள்ளாமலும் ஏற்க மறுத்தும் அறியாமையில் உழலும் இருட்டுதான் மிகவும் ஆபத்தானது" - என்று பேசினார். அறியாமை இருட்டைக் கிழித்து, அறிவு வெளிச்சம் பரப்பும் ஸ்டீபன் ஹாக்கிங் அறிவியல் பார்வையில் முன் வைக்கும் கருத்துகள், தமிழ்நாட்டில், கடவுள் மறுப்பை மக்கள் இயக்கமாக்கிய பெரியாரியலுக்கு மேலும் வலிமை சேர்க்கிறது!

– இரா

## விநாயகனும் – ஏழுமலையானும் சந்தித்தால்....

***ஏழுமலையான்:*** அடேய் விநாயகா! உனக்கு பிறந்த நாள் வரப் போகிறது; உனது பக்தர்கள் விழா எடுக்கிறார்கள் நீ மகிழ்ச்சியில் துள்ளிக் கிடக்கிறாய்! எனது நிலையைப் பார்த்தாயா? என்னை தரிசிக்க வரும் பக்தர்களை சிறுத்தைப் புலி மிரட்டுகிறது; இப் போது கரடியும் சேர்ந்து மிரட்டுகிறது! பக்தர்கள் வருவதற்கே பயப்படு கிறார்களப்பா.

***விநாயகன் :*** இதைச் சொல்ல உனக்கு வெட்கமாக இல்லை? அந்த சிறுத்தையையும், புலியையும் உனது கட்டுப்பாட்டில் கொண்டுவரக்கூட சக்தி இல்லாமல் போய் விட்டதா, உனக்கு!

***ஏழுமலையான்:*** அட, யானைத் தலைவா தும்பிக்கையை மூடப்பா! நம்ம இரண்டு பேருக்குமே எந்த சக்தியுமே இல்லை என்பது உனக்கே தெரியாதா? ஏதோ, தெரியாதவன் போல் நடிக்கிறாயே! உனக்கு சக்தி இருந்தால், இரும்பு ஏணியில் வைத்து தூக்கி, அடித்து உடைத்துத் தானே உன்னை கடலில் கொண்டு போய் வீசுகிறார்கள், அதைத் தடுத்து நிறுத்தினாயா? விதிக்கு வீதி, உனது சிலைக்கு காக்கி சட்டை கள் தானே பாதுகாப்புத் தருகின்றன! இது மானக் கேடு அல்லவா?

***விநாயகன் :*** மானம் பற்றியெல் லாம் பேசாதே; கிருஷ்ண தேவராயர் வாங்கிக் கொடுத்த நகைகளைக் காப்பாற்றிக் கொள்ள உனக்கு துப்பு இல்லை. உனக்குத் தெரியாமல் எவனோ அடிச்சிட்டுப் போயிட் டான். உண்டியலில் ஊழல், நிர்வாகத் தில் ஊழல்; லட்டு தயாரிப்பில் ஊழல்; அர்ச்சனை டிக்கெட்டில் ஊழல்; உனது கோயில் ஊழியரே ஊழல் பிரச்சினையில் தற்கொலை செய்கிற அளவுக்கு உனது சக்தி நாறிப் போய் கிடக்குது!

***ஏழுமலையான் :*** உண்மைதான், உண்மைதான்; ஒப்புக் கொள்கிறேன். எனது கோயில் ஊழியர்களே நிர் வாகத்தை எதிர்த்து என் கண்ணெதிரே போராடுகிறார்கள். அவர்கள்கூட, நான் ஒருவன் கல்லுப்போல இங்கே உட்கார்ந்திருக்கிறேனே, என்னிடம் வந்து முறையிடலாம் என்று கூட நினைக்கவில்லை. என் சக்தி மீது அவ்வளவு அபார நம்பிக்கை அவர் களுக்கு. ஆனாலும், என் சக்தி இப்படி சந்தி சிரிக்கிறது என்றால், உன்னை களிமண்ணால் மட்டுமே செய்ய வேண்டும்; ரசாயனப் பொருள்களால் செய்து, சுற்றுச் சூழலை பாழடிக்கக் கூடாது என்று அறிவித்து விட்டார் களே? சுத்த களிமண்ணாக்கி விட்டார் களே, இதெல்லாம் அவமானம் அல்லவா?

***விநாயகன் :*** சரி, சரி; எல்லாம் சரி தான்; நமக்குள் சண்டைப் போட்டுக் கொண்டு, நாம் சக்தியற்ற வெத்து வேட்டு, வெறும் கல் என்பதை நாமே, டமாரம் அடித்துக் கூறிக் கொண் டிருக்க வேண்டுமா? நமக்கு ஒரு மண்ணாங்கட்டி சக்தியும் கிடையாது என்பது, பக்தி மரமண்டைகளுக்குத் தெரியாதவரை, நமது காட்டுல மழை தான்!

*கரடி வந்தால் என்னா? கடலில் போட்டால் என்ன? அதோ, புரோகிதர்களும், இந்து முன்னணியும், போலீசும் நமக்கு பாதுகாப்பாக வந்துன்டே இருக்கா..... பார்!*

– கோடங்குடி மாரிமுத்து

## பெரியார் சிலைகள் தகர்ப்பு: உளவுத் துறை சதியா?

திருச்சியில் இரண்டு இடங்களிலும், நெல்லை யிலும் அடுத்தடுத்து பெரியார் சிலைகள் சேதப்படுத்தப்பட்டுள்ளன. இது குறித்து 'தினமதி' என்ற நாளேடு (செப்டம்பர் 4) உளவுத் துறையின் சதி என்று சந்தேகிக்கப்படுவதாக செய்தி வெளியிட்டுள்ளது. அக்டோபர் 2 ஆம் தேதி பெரியார் திராவிடர் கழகம் நடத்தவிருக்கும் தீண்டாமை ஒழிப்புப் பிரிவு அலுவலகத்தை இழுத்துப் பூட்டும் போராட்டத்தை திசை திருப்ப உளவுத் துறை, நடத்தும் நாடகம் என்று அந்த செய்தி கூறுகிறது. பெரியார் சிலை தகர்க்கப் படுவதை எதிர்த்து பெரியார் திராவிடர் கழகத்தினர், எதிர் போராட்டம் நடத்துவார்கள் என்றும், எனவே அதை காரணம் காட்டி, முன்கூட்டியே கைது செய்து உள்ளே தள்ளி விடலாம் என்பதே உளவுத் துறையின் திட்டம் என்றும் கூறுகிறது, அந்த செய்தி!

## உடுமலை, மடத்துக்குளம் கழக முடிவுகள்

உடுமலை, மடத்துக்குளம் ஒன்றிய, நகர கழகக் கலந்தரையாடல் கூட்டம் 29.8.2010 மாலை 4 மணிக்கு உடுமலையில், உடுமலை நகரத் தலைவர் யாழ். நடராசன் தலைமையில் நடைபெற்றது. உடுமலை நகரச் செயலாளர் இரா. பாக்கியநாதன், மடத்துக்குளம் ஒன்றிய செயலாளர் சு. சிவானந்தம் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில், பெரியார் பெருந்தொண்டர்கள் நாகை பாட்சா மற்றும் கீசகன் ஆகியோர் மறைவிற்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

தந்தை பெரியார் பிறந்த நாள் கொடியேற்று விழா செப்டம்பர் 19 ஞாயிறு அன்று உடுமலை, மடத்துக்குளம் ஒன்றியங்களில் இரு சக்கர வாகனங்களின் மூலம் சென்று நடத்துவது என முடிவு செய்யப்பட்டது.

மடத்துக்குளம் ஒன்றிய பொருளாளர் நா.ப. கதிரவன், உடுமலை நகர துணைச் செயலாளர் சு. சிவசங்கர், பொருளாளர் மு. வேல் முருகன் மற்றும் பல தோழர்கள் கலந்து கொண்டனர்.

இறுதியில் மடத்துக்குளம் ஒன்றிய துணைச் செயலாளர் மா. மோகன்குமார் நன்றி கூறினார்.

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/09-11 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/09-11
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

# கோவை மாவட்டக் கழக எழுச்சி



கோவை மாநகர், மாவட்ட தோழர்கள் கலந்துரையாடல் கூட்டம் 22.8.2010 ஞாயிறு அன்று காலை 10 மணி முதல் இரவு 8 மணி வரை பெரியார் படிப்பகத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு கழகப் பொதுச் செயலாளர் கு. இராமகிருட்டிணன் தலைமையேற்றார். கழக செயற்குழு உறுப்பினர் வெ. ஆறுச்சாமி முன்னிலை வகித்தார். கூட்டத்திற்கு 200-க்கும் மேற்பட்ட தோழர்கள் பல்வேறு பகுதியிலிருந்து கலந்து கொணடனர். காலை அமர்வாக மாநகர தோழர்கள் கலந்துரையாடல் நடைபெற்றது. மாநகரின் அனைத்துப் பகுதியிலிருந்தும் தோழர்கள் கலந்து கொண்டனர். கலந்து கொண்ட தோழர்களில் பெரும்பாலோரிடமிருந்து கருத்துகள் கேட்கப்பட்டன. அனைத்து தோழர்களும் உற்சாகமாக தங்களின் கருத்துகளை தெரிவித்தனர். தோழர்களின் கருத்துகளின் அடிப்படையில் மாநகர கழகத்திற்கு புதிய பொறுப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டு அறிவிக்கப்பட்டனர்.

கூட்டத்தில் கழக வார ஏடான பெரியார் முழக்கத்திற்கு 500 சந்தாக்கள் சேர்ப்பது என்றும், வரும் அக்டோர் 2 ஆம் தேதி திருச்சியில் நடைபெற உள்ள தீண்டாமை எதிர்ப்புப் போராட்டத்தில் 500க்கும் மேற்பட்ட தோழர்கள் பெரும் திரளாக பங்கேற்பது மற்றும் புதிதாக நியமிக்கப்பட்ட கழகப் பொறுப்பாளர் பட்டியல் உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மாநகர கழகத்திற்கு சொந்தமாக ரூ.1 லட்சம் செலவில் மேடை மற்றும் ஒலி பெருக்கி வாங்குவது என்று தீர்மானிக்கப்பட்டது. கழக மாநகர அமைப்பாளர் பழையூர் செல்வம், ரூ.30 ஆயிரம் மதிப்பிலான இரண்டு ஒலி பெருக்கிப் பெட்டிகளை தருவதாக கூறியுள்ளார். கோவையில் கழக வழக்கறிஞர் அணி உருவாக்கப்பட்டு, அதற்கான பொறுப்பாளர்கள் அறிவிக்கப்பட்டனர். கழக பொதுச்செயலாளர் கு.இராமகிருட்டிணன் நிறைவுரையாற்றினார். இறுதியாக கழக மாநகர பொருளாளர் இரஞ்சித் பிரபு கலந்து கொண்ட அனைத்து தோழர்களுக்கும் புலால் உணவு விருந்தளித்தார்.

கழகப் பொறுப்பாளர்கள் விவரம்:

கோவை மாநகரம்: தலைவர் வே. கோபால், செயலாளர் இ.மு.சாஜித், பொருளாளர் இரஞ்சித் பிரபு, துணைத் தலைவர்கள் ராசுக்குமார், ந. தண்டபாணி, துணைச் செயலாளர்கள் சு. இளங்கோ, ப. தமிழரசன், அமைப்பாளர் செல்வம்.

பகுதி கழக செயலாளர்கள் : மணிமாறன், இராசன், குமணன், கிருட்டிண மூர்த்தி, மு. பாண்டியன், மாணிக்கம், சம்பத்.

கிளைக் கழக செயலாளர்கள் : காந்திபுரம் - அண்ணாமலை சரவணன், காந்திபுரம்2 - தமிழ்ச்செல்வன், இரத்தினபுரி - நாகராசு, சங்கனூர் - பிரகாசு, கணபதி - பிரவீன், இலட்சுமிகாந்தன், மணியகாரன்பாளையம் - மூர்த்தி, ஆவாரம் பாளையம் - கணேசு, சித்தாபுதூர் - உமேசு, தனலட்சுமி நகர் - மதன், பாப்பநாயக்கன் பாளையம் - காமராஜ், காட்டூர் - கார்த்தி, உக்கடம் - பத்திரன், இராமநாதபுரம் - செல்வம், உடையாம்பாளையம் - இராசமாணிக்கம், வரதராசபுரம் - மனோகரன், பீளமேடு - சகாதேவன், இர.ச.புரம் - பாண்டியன், வேலாண்டிபாளையம் - சம்பத், இடையர்பாளையம் - ஈசுவரன், புலியகுளம் - இரகுநாத், வேலுமணி, சொக்கம்புதூர் - நித்தியானந்தம்.

வழக்கறிஞர் அணி : தலைவர் லெனின், செயலாளர் மதுசூதனன், அமைப்பாளர் பாலச்சந்தர்.

பயிலரங்கக் குழு : அண்ணாமலை சரவணன், தமிழ்ச்செல்வன், நேர. பார்த்த சாரதி, தம்பு, பாலமுரளி.

மாநகர மாணவரணி: தலைவர் சிலம்பரசன், செயலாளர் ஜெரால்டு.

சட்டக் கல்லூரி மாணவரணி : தலைவர் வினோத், செயலாளர் விசுவநாதன்.

அரசு கலைக் கல்லூரி மாணவரணி : செயலாளர் பிரதாப்.

பொறியியல் கல்லூரி: செயலாளர் பிரவீன்

ஆசிரியர் பயிற்சிக் கல்வி : செயலாளர் பாலமுரளி.

கோவை தெற்கு மாவட்டம்: தலைவர் கலங்கல் வேலு, துணைத் தலைவர் பன்னீர்செல்வம், செயலாளர் நாகராஜ், பொருளாளர் குமாரவேல்.

கோவை வடக்கு மாவட்டம் : தலைவர் பெ.நா. பாளையம் து. இராமசாமி, செயலாளர் வெள்ளமடை நாகராசு, அமைப்பாளர் கவுண்டம்பாளையம் ம. சண்முக சுந்தரம்.

ஒன்றியங்கள்: பொள்ளாச்சி வடக்கு - சீனிவாசன், பொள்ளாச்சி தெற்கு - கண்ணன். கிணத்துக்கடவு - தலைவர் பெரியார் மணி, செயலாளர் நிர்மல், ஆனைமலை - தலைவர் மணிமொழி, செயலாளர் சம்பத், சுல்தான்பேட்டை - பச்சைமுத்து, சூலூர் ஒன்றியம் - திலீபன், நகரம் - ஆட்டோதேவன், மதுக்கரை - பாலமுரளி, பெரியநாயக்கன் பாளையம் - தலைவர் சீனிவாசன், செயலாளர் பிரசன்னா, அன்னூர் - தலைவர் மகேசு, செயலாளர் ஈசுவரன்.

பொள்ளாச்சி நகரம்: தலைவர் த. இராசேந்திரன், செயலாளர் வெள்ளிங்கிரி.

மேட்டுப்பாளையம் நகரம்: அமைப்பாளர் த. சந்திரசேகரன்.

மதுக்கரை ஒன்றிய கழக புதிய நிர்வாகிகள்: தலைவர் இரா. மகேந்திரன், செயலாளர் தி.க. நாகராசன், பொருளாளர் சகா. ராமலிங்கம், அமைப்பாளர் மகி. வடிவேல், இளைஞரணி மு. சிவக்குமார்.

திருமலையம் பாளையம் கிளை தலைவர் கா. மாசிலாமணி, செயலாளர் ர. தங்கவேல், அமைப்பாளர் ர. காளிமுத்து, பொருளாளர் இரா. சக்திவேல்.

## ந. விஜயராகவன் – மோ. சுகந்தி வாழ்க்கை இணை ஏற்பு விழா

மயிலாடுதுறை கழகத் தோழர் ‘புத்தகச் சோலை’ உரிமையாளர் ந. விஜயராகவன் - மோ. சுகந்தி வாழ்க்கை இணை ஏற்பு விழா 22.8.2010 ஞாயிறு காலை 8 மணியளவில், மயிலாடுதுறை விமலாம்பிகை திருமண மகாலில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் நிகழ்ந்தது. பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், பேராசிரியர் ஜெயராமன், நல்லாசிரியர் இரா. சுவாமிநாதன், மேஜர் சி. கணேசன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். பாரதிதாசன் பல்கலை செனட் உறுப்பினர் இரா. தெய்வநாயகம் வரவேற்புரை வழங்கினார். இளையராசா நன்றி கூறினார். பிற்பகல் 3 மணியளவில் ராகு காலத்தில் மணமகனின் புதிய இல்லத்தை கழகத் தலைவர் திறந்து வைத்தார். விழாக்களின் நினைவாக மணமக்கள் கழக ஏட்டுக்கு ரூ.5000 நன்கொடை வழங்கினர். நன்றியுடன் பெற்றுக் கொண்டோம். (ஆர்)

## தோழியர் தேவை

பாரதியார் பல்கலையில் கணினி பொறியியல் துறையில் முனைவர் பட்ட ஆய்வு மேற்கொண்டு வரும் 32 வயதுள்ள, பெரியாரிய சிந்தனை கொண்ட மணமகனுக்கு பட்ட மேற்படிப்பு முடித்த, சுயமரியாதை, சாதி மறுப்பு திருமணத்துக்கு உடன்பாடான மணமகள் தேவை. தொடர்புக்கு : 9488604673

## நன்கொடை


கடந்த 27.6.2010 அன்று நடை பெற்ற பெரியார் திராவிடர் கழகம், புதுச்சேரி, கோட்டை மேடு கழகத் தோழர் சி.சிவமுருகன் - த. கிருட்டிணவேணி வாழ்க்கைத் துணை நல ஒப்பந்த விழாவை முன்னிட்டு, “புரட்சிப் பெரியார் முழக்கம்” வளர்ச்சி நிதியாக ரூ.1000 வழங்கப் பட்டது. (நன்றியுடன் பெற்றுக் கொண்டோம் - ஆர்.)

“புரட்சிப் பெரியார் முழக்கம்” ஆண்டுக்கட்டணம் ரூ.150/-
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41. ✆ 99416 13535

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 9th September 2010

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.




புரட்சிப்

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | periyardk.org | திருவள்ளுவர் ஆண்டு 2041 | செப்டம்பர் 16, 2010 | புரட்சி 9 | முழக்கம் 36 | விலை: ரூ.2.50


## ‘அக்கிரகாரம்’ – ‘சேரி’களை உருவாக்கிய இராசஇராசன்

## ‘சூத்திர’ இழிவை நிலைநிறுத்தும் தஞ்சை பெரிய கோயில்

# அவமானச் சின்னங்களுக்கு அரசு விழாவா?

தஞ்சை பெரிய கோயில் கட்டப்பட்டு, 1000 ஆண்டுகள் முடிந்தமைக்காக தமிழக அரசு மற்றொரு ‘திருவிழா’வை தஞ்சையில் செப். 22 தொடங்கி 26 ஆம் தேதி வரை நடத்த இருக்கிறது. இராசஇராசசோழன் பெருமைகளையும், தமிழக அரசு பேசுகிறது. பல கோடி ரூபாய் அரசுப் பணம் விரயமாகிறது.

தஞ்சை பிரகதீசுவரன் கோயிலைக் கட்டிய இராசஇராசனுக்கு கோயிலுக்குள் சிலை வைக்க, இதே முதல்வர் கலைஞர் கருணாநிதி முயன்றபோது, அதற்கு மத்திய தொல்பொருள் துறை அனுமதிக்கவில்லை. இதனால் கோயிலுக்கு வெளியே அந்த சிலையை நிறுவினார், கலைஞர் கருணாநிதி. கோயிலைக் கட்டிய இராசஇராசன், பார்ப்பனீயத்தை ஏற்றுக் கொண்டவன். ஆனால், பிறப்பால் ‘சூத்திரன்’. எனவே கோயில் கட்டினாலும் உள்ளே அவனுக்கு அனுமதி இல்லை. என்னதான் பெரிய கோயில் என்று பெருமை பேசினாலும், அந்தக் கோயில் கர்ப்பகிரகத்துக்குள் இன்னும் ‘சூத்திர’ அர்ச்சகர்கள் நுழைய முடியாது. பார்ப்பன அர்ச்சகர் மட்டுமே கருவறைக்குள் நுழைய முடியும். ‘சூத்திர’ இழிவை நிலை நாட்டிக் கொண்டிருக்கும் கோயிலுக்கு, ‘சூத்திரர்’ ஆட்சி என்று அவ்வப்போது கூறிவரும் கலைஞர் கருணாநிதி விழா எடுத்து மகிழ்வதுதான் வேடிக்கை.

இராசஇராசசோழன் ஆட்சிக் காலம், கி.பி. 10 ஆம் நூற்றாண்டு. இராசஇராச சோழன் மன்னராக இருக்கும் போது தனது மகன் இராசேந்திர சோழனுக்கும் இளவரசு பட்டம் சூட்டி, ஆட்சிக் கட்டிலில் அமர வைத்தான். அதற்காகத்தான் இப்போது அரசு விழாவா ?

சோழர்கள் காலத்தில் உள்ளாட்சித் துறை சிறப்பாக செயல்பட்டதாக பார்ப்பன வரலாற்று ஆசிரியர்கள் புகழ்ந்துரைக்கிறார்கள். ஆனால், சோழர்கள் ஆட்சியில் பார்ப்பனர்கள் வாழும் அக்கிரகாரங்களுக்கு ‘சபா’ என்றும், ‘சூத்திரர்’ வாழும் பகுதிகளுக்கு ‘ஊர்’ என்றும், பிறப்பின் அடிப்படையில் பிரித்து வைத்திருந்ததை உத்திரமேரூர் கல்வெட்டு சாசனங்கள் கூறுகின்றன. ‘ஆலுங்கணம்’ என்று அமைக்கப்பட்ட கிராம பொதுச் சபையில் உறுப்பினர்களாவதற்கு வேதமந்திர பிராமணங்களில் ஆழ்ந்த அறிவுடையவர்களாக இருத்தல் வேண்டும். ஒன்றரை ஏக்கர் நிலத்திற்கு உரிமையாளராகவும், ஒரு வேதத்திலும், ஒரு மொழியிலும் அறிவுடையவராக இருத்தல் வேண்டும்.

*– (ஏ.எஸ்.அடேல்கர் என்ற வரலாற்று ஆய்வாளர் எழுதிய ‘ஸ்டேட் அன்ட் கவர்ன்மெண்ட் இன் ஏன்சியென்ட் இந்தியா’ நூல்)*

தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனம் 1976 இல் (தி.மு.க. ஆட்சியில்) தமிழ் நில வரலாறு எனும் நூலை வெளியிட்டது. (பதிப்பாசிரியர் புலவர் கோ. தங்கவேலு, தமிழக வரலாற்று வெளியீட்டகம்) அந்த நூல் சோழர் கால ஆட்சியில் பார்ப்பனர்களின் ‘பொற்காலமாக’ விளங்கியதை விவரிக்கிறது. தி.மு.க. ஆட்சி பதவி நீக்கம் செய்யப்பட்டு, தமிழகத்தில் ஆளுநர்களின் ஆலோசகர்களாக தவே, ஆர்.வி. சுப்ரமணியம் என்ற இரு பார்ப் பனர்களின் அதிகாரத்துக்குக் கீழே கொண்டு வரப்பட்டது. அன்றைய தி.மு.க. ஆட்சியில் தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிட்ட இந்த நூலை பார்ப்பன ஆலோசகர் நிர்வாகம் தடை செய்தது. தி.மு.க. ஆட்சியே வெளியிட்ட அந்நூலிலிருந்து இதோ சில தகவல்கள் :

- பல்லவர் காலத்தில் வடமாநிலங்களிலிருந்து முதன் முதலாக பார்ப்பனர்கள், தமிழகத்துக்கு இறக்குமதி செய்யப்பட்டனர். அவர்களுக்கு ‘பிரம்மதேயச் சிற்றூர்கள்’ என்று தனி ஊர்கள் தானமாக வழங்கப் பட்டன. அந்தப் பார்ப்பனர்களை சோழர்கள் ஆட்சி ‘மண்ணுலக தேவர்களாக’ போற்றி, தனிச் சலுகை களை வாரி வாரி வழங்கியது.
- பார்ப்பனர்கள் ஆணையை ஏற்றுத்தான் சோழ மன்னர்கள் செயல்பட்டனர். பார்ப்பனர்களே சமுதாயத்தை ஆட்டுவித்தனர்.
- சோழர் காலப் பார்ப்பனர்களுக்கு வடமொழி மட்டுமே தெரியும். தமிழ் தெரியாது. இந்த வடமொழி மட்டுமே தெரிந்த பார்ப்பனர்களை சோழர்கள் கோயில்கள், அரண்மனைகள், கொலு மண்டபங்களில் அதிகாரத் தில் அமர்த்தினர். (கோயில்களில் வடமொழி அர்ச்சனை நுழைந்த காலமும் அதுதான்)
- பார்ப்பனர்களுக்கு தனியாக ஊர்களை வழங்கி, அதற்கு அக்கிரகாரம், அகரம், சதுர்வேதி மங்கலம், பிரம்மதேயம் என்றெல்லாம் பெயர் சூட்டப்பட்டன. இந்தப் பார்ப்பன ‘மங்கலங்களுக்கு’ அரசனது எந்த ஆணையும் செல்லாது. அரசனது வரி விதிப்புகளோ, கட்டண விதிப்புகளோ பொருந்தாது.
- சமஸ்கிருதம் ‘தேவபாஷையானது’ சோழர் காலத்தில் தான். கோயிலின் செல்வங்களையும், மன்னன் போரில் வென்ற செல்வங்களையும், பார்ப்பனர்கள் தமதாக்கிக் கொண்டனர்.
- போர்களில் கொள்ளையடித்த பொருள்களும், முறையாக வழங்கப்பட்ட தானங்களும், பெரும் செல்வமும், அரசு குடும்பத்தினர் வழங்கிய பொருள்களும், கோயில் சொத்துகளாக்கப்பட்டு, அவை பார்ப்பனர்களின் உடைமைகளாயின.
- அரச குடும்பத்துக்குள்ளேயே பல கோத்திரங்களைப் பிரித்து, தமிழ்ச் சமூகத்தை, சாதிகளாக கூறு போட்டனர் பார்ப்பனர். இதை சோழர்கள் மகிழ்ச்சியோடு ஏற்றனர். நெல்லிக்காய் மூட்டைகளாக தமிழ்

*(4 ஆம் பக்கம்)*



## ஈனத்தைப் போக்க மானத்தைப் பலிகொடு!

“தோழர்களே ! துணிவு கொள்ளுங்கள், சாகத் துணிவு கொள்ளுங்கள், உங்கள் சொந்த வாழ்வு நலத்தையும் மானத்தையும் விட்டுத் தொண்டாற்றத் துணிவு கொள்ளுங்கள். இதுதான் இன்றைய திராவிட வாலிபர் கழக ஆண்டு விழாவில், இனி வெகு காலம் வாழப்போகும் மக்களாகிய உங்களுக்குச் சாகப் போகும் கிழவனாகிய நான் வைத்துவிட்டுப் போகும் செல்வமாகும்.

“உன் சொந்த மானத்தை விட்டாகிலும், உன் இன ஈனத்தை ஒழிப்பதற்குத் தொண்டு ஆற்று.”

“உன் இனத்தின் இழிவை; ஈனத்தைப் போக்க உன் சொந்த மானத்தையும் பலிகொடு.”

“இனத்தின் மானத்தைக் காக்க எவ்வகைத் துன்பத்தையும் பொறுத்துக் கொண்டு தொண்டாற்றத்தக்க குடிமகன் இல்லாத இனம் வேர்ப் பற்றில்லாத மரம்போல் - கோடாலி கொண்டு வெட்ட வேண்டிய அவசியம் இல்லாத மரம்போல் - தானாகவே விழுந்துவிடும்.”

“தன் இனத்திற்கு உண்மையான தொண்டாற்றுபவனுக்கு அடையாளம் என்னவென்றால் - அத் தொண்டால் ஏற்படும் இன்னலுக்கும், துன்பத்திற்குமே அவனது வாழ்வையும் உடலையும் ஒப்புவித்துவிட்டவனாக இருக்க வேண்டும்.”

இது நான் சொல்வதல்ல; குறள் வாக்கியமாகும்.

*(திருச்சியில் 27.8.1945 இல் திராவிட வாலிபர் சங்க ஆண்டு விழாவில் பெரியார் சொற்பொழிவு, “குடிஅரசு”, 1.9.1945)*

**கழகத் தோழர்களுக்கும், வாசகர்களுக்கும், தமிழின உணர்வாளர்களுக்கும் பெரியார் பிறந்த நாள் வாழ்த்துக்கள்!**

## கிருட்டிணகிரி – திருச்செந்தூரில் கழக கூட்டங்களின் எழுச்சி

# “சாதி அடையாளமற்ற அமைப்பு பெரியார் திராவிடர் கழகம்”

*திருச்செந்தூர் – கிருட்டிணகிரியில் கழகக் கூட்டமும், ‘குடிஅரசு’ நூல் அறிமுகமும் சிறப்புடன் நடந்தன. சாதி அடையாளமற்ற அமைப்பாக பெரியார் திராவிடர் கழகம் திகழ்கிறது என்று ஆதித் தமிழர் பேரவை பொதுச் செயலாளர் பழ.நீலவேந்தன் திருச்செந்தூர் கூட்டத்தில் புகழாரம் சூட்டினார்.*

### திருச்செந்தூரில்

**2.9.2010** வியாழக்கிழமை அன்று மாலை **6** மணிக்கு தூத்துக்குடி மாவட்ட பெரியார் திராவிடர் கழகம் சார்பாக,



திருச்செந்தூர் வ.உ.சி. திடலில், ‘குடிஅரசு’ நூல் அறிமுக விழா பொதுக் கூட்டம் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் குமார் தலைமையில் நடைபெற்ற இப்பொதுக் கூட்டம், தூத்துக்குடி நகர செயலாளர் பால் அறிவழகன், ‘மந்திரமா ? தந்திரமா ?’ நிகழ்ச்சியோடு துவங்கியது. மாவட்ட துணைத் தலைவர் வே. பால்ராசு, ஆதித் தமிழர் பேரவையின் நிதிக் குழுப் பொறுப்பாளர் சு.க. சங்கர், மாவட்ட தலைவர் சி. அம்புரோசு, வழக் குரைஞர் பிரிட்டோ, தலைமை செயற்குழு உறுப்பினர் பால். பிரபாகரன், ஆதித் தமிழர் பேரவை பொதுச் செயலாளர் பழ. நீலவேந்தன், கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆகியோர் உரை யாற்றினர். கழகத் தலைவர் “குடி அரசு” தொகுப்பை வெளியிட, ஆதித் தமிழர் பேரவையின் துணைப் பொதுச்செயலாளர் கண்ணன் பெற்றுக் கொண்டார்.

நெல்லை மாவட்ட காசிராஜன்-கோமதி ஆகியோரின் பெண் குழந்தைக்கு மாலதி என கழகத் தலைவர் பெயர் சூட்டினார். இந்தக் கூட்டத்தில் ஆதித் தமிழர் பேரவையின் பொதுச் செயலாளர் நீலவேந்தன் ஆற்றிய உரையிலிருந்து சில செய்திகள்:

பெரியார் திராவிடர் கழக மேடைகளில் ஆதித் தமிழர் பேரவை உரிமையோடு கலந்து கொள்வதற்கு கழகத்தின் மீது ஒரு அளப்பரிய மரியாதை வைத் திருக்கிறோம். ஒருவருடைய சாதியை தெரிந்துக் கொள்ள வேண்டும் என நினைப்பவர்கள், முன்பெல் லாம் பெயரை கேட்டு, அப்பாவின் பெயரை கேட்டு, ஊரின் பெயர், தெருப் பெயர் கேட்டுத் தெரிந்துக் கொள்வார்கள். ஆனால், இப்பொழுது ஒருவர் எந்த இயக்கத்தில் இருக்கிறார் என்று கேட்டாலே, அவரின் சாதி தெளிவாக தெரிந்து விடுகிற நிலைதான் தமிழ்நாட்டில் இருக்கின்றது. எனினும் பெரியார் திராவிடர் கழகம் என்று சொல்கிறபோது, என்ன சாதியென தெரிந்து கொள்ள முடியாது. சாதி அடையாளத்தை ஒழிப்பதையே கொள்கை அடையாளமாக வைத்திருக்கிற விடுதலை இயக்கம்தான் பெரியார் திராவிடர் கழகம்.

உயர்நீதிமன்றம், பெரியார் சொத்துக்களை வைத்திருக்கின்ற வீரமணி போன்ற தலைவர்கள், கலைஞரின் மறைமுக ஆதரவு என இப்படி பல்வேறு தடைகளை கடந்து, ‘குடிஅரசு’ வெளி வந்திருக்கிறது. பெரியார் கருத்தை வெளியிடக் கூடாது எனச் சொல்லி, உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்த வீரமணிக்கும், வெளியிட்டே தீருவது என போராடிய பெரியார் திராவிடர் கழகத்திற்கும் நடந்தது, சொத்துப் போராட்டம் அல்ல. ஆரிய திராவிடர் போராட்டம். அறிவை முடக்க நினைப்பது ஆரியம். அதை தகர்க்க வல்லதே பெரியாரியம். அறிவை முடக்க நினைத்த ஆரிய கூட்டத்திற்கு எதிராக கிளம்பிய பெரியாரின் நூல்களை முடக்க நினைக்கிற வீரமணிக்கு இருப்பதும் ஆரிய சிந்தனையே.

தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்டவர்களை கோவில் கருவறைக்குள் விட மறுக்கும் பூணூலில் மட்டும்தான் பார்ப்பனியம் உள்ளது என சொல்ல முடியாது. சுந்தரலிங்கம் பெயரில் போக்குவரத்துக் கழகம் வருகிறபோது தங்கள் தலைவர் பெயரையும் கூட நீக்கி விடுவார்கள். ஒரு தாழ்த்தப்பட்டவர் பெயர் உள்ள பயணச் சீட்டை என் சட்டைப் பையில் வைக்க மாட்டேன் என்று மீசை முறுக்குகிற பிற்படுத்தப்பட்டவர்களிடம் இருப்பதும் பார்ப்பனியம் தான். பறையர், பள்ளர் என்பவர்கள், தங்களைவிட கீழான சாதியாக கருதி சக்கிலியரை வீட்டில்விட மறுக்கும் தாழ்த்தப்பட்டவர்களிடம் இருப்பதும் பார்ப்பனியம்தான். இந்தப் பார்ப்பனியம் எப்படி பார்ப்பனர்களையும் தாண்டி, பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்டவர்களிடம் மண்டிக் கிடக்கிறதோ, அதுபோல பெரியாரின் பணி முடிக்க வந்ததாக சொல்லுகின்ற வீரமணியிடமும், ஆரிய சிந்தனை புகுந்திருந்ததனாலேதான் அறிவை முடக்க நினைத்தார்.

இன்றைக்கும் பெரியார் தேவைப்படுகிறார். பெரியார், அம்பேத்கர் சிலை தாக்கப்படுவதற்கு காரணம், யாரும் முழுமையாக இவர்களைப் பற்றி தெரிந்து கொள்ளவில்லை. இரு தலைவர்களும் கடவுள், மத நம்பிக்கைக்கு எதிராக பேசினாலும், மக்களின் நன்மைக்காகவே பேசினார்கள். அம்பேத்கரை ஏற்றுக் கொண்டவர்களும், படிக்காத காரணத்தால்தான் கோவில் திருவிழாவில் ஒரு பக்கம் கடவுள் படமும் மறுபக்கம் அம்பேத்கர் படமும் போட்டு பதாகை வைப்பதற்கு எந்தக் கூச்ச நாச்சமும் யாருக்கும் இல்லை.

பெரியரியத்தை பின்பற்றுகிற ஒரே இயக்கம் பெரியார் திராவிடர் கழகம் தான். அதற்கு ஒரு உதாரணம் சொல்ல வேண்டும் என்றால், சாதி தீண்டாமைக்கு எதிராக பரப்புரை செய்தபோது, பிற்படுத்தப்பட்டவர்களிடம் சென்று பேசினர். சாதியத்தால் ஒடுக்கப்பட்டவர்கள் வாழ்த்துரை வழங்குவதைவிட, அதை கடைபிக்கிற பிற்படுத்தப்பட்ட சங்கங்களின் தலைவர்களை அழைத்துப் பேச வைத்தனர் என்றார்.

### கிருட்டிணகிரியில்

**29.8.2010** ஞாயிறு பிற்பகல் **2** மணிக்கு கிருட்டிணகிரி செரீப் மாங்காய் மண்டியில், கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் கிருட்டிணகிரி மாவட்ட கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது. கழகப் பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டிணன் முன்னிலை வகித்தார். சென்னை



வழக்கறிஞர் குமாரதேவன், கேசவன், கரு அண்ணாமலை, தர்மபுரி மாவட்ட அமைப்பாளர் வேடியப்பன் உள்பட பலர் கலந்து கொண்ட இக் கலந்துரையாடல் கூட்டத்தில், கீழ்க்கண்ட பொறுப் பாளர்கள் நியமிக்கப்பட்டனர்.

கிருட்டிணகிரி மாவட்ட - தலைவர் காவேரி பட்டினம் குமார், செயலாளர் சந்தூர் பிரேம் குமார், அமைப்பாளர் மு. பழனிச்சாமி, மாணவரணி அமைப்பாளர் பாஸ்கரன், இராயக்கோட்டை ஒன்றிய அமைப்பாளர் பால கிருட்டிணன், பகுத்தறிவாளர் பேரவை வெங்கடேசன்.

மாலை **6** மணிக்கு கிருட்டிணகிரி கார்டு நேசன் திடலில் (ஆனந்த் திரையரங்கம் எதிரில்) கழகம் சார்பாக “பொங்கும் தமிழர் எழுச்சி” என்ற தலைப்பில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. மேட்டூர் டி.கே.ஆர். இசைக் குழுவின் பாடல் களோடு துவங்கியது. மு. பழனிச்சாமி வரவேற்புரை யாற்றினார். தி.குமார் தலைமையில் நடைபெற்ற இப்பொதுக் கூட்டத்தில், தர்மபுரி மாவட்ட அமைப்பாளர் வேடியப்பன், பாலகிருட்டிணன் ஆகியோர் உரைக்குப்பின் வழக்கறிஞர் குமார தேவன், தமிழர்களின் எழுச்சி மங்கிவிட்ட காரணத்தால், தமிழர்களின் எழுச்சிப் பொங்க வேண்டும் என்பதற்காக இந்த தலைப்பில் கூட்டம் நடைபெறுகிறது. தமிழர்களின் எழுச்சி, உணர்ச்சி, பேச்சு, மூச்சு எல்லாமே தந்தை பெரியாரால் கிடைத்தது என்றும், நமக்குச் சட்டத்திலுள்ள உரிமைகள், அதற்கான சட்டப் பிரிவுகள் ஆகியவைகளை விளக்கிப் பேசினார்.

கழகப் பொதுச்செயலாளர் கோவை இராம கிருட்டிணன், இங்கே பொங்கும் தமிழர் இருந்திருந்தால் ஈழப் போராட்டம் பின்னடைவை சந்தித்திருக்காது. ஈழத்தில் இருப்பவர்கள் தான் பொங்கும் தமிழர்களே தவிர இங்கு இருப்பவர்கள் பொங்கும் தமிழர் அல்ல. தென் மாவட்டங்களை பொருத்தவரை தேவர் என்று சொல்கிற போதும், வட மாவட்டங்களை பொருத்தவரை கொங்கு வேளாளர் என்கிறபோதும், கிருட்டிணகிரி, தர்மபுரி உள்ளிட்ட மாவட்டங்களில் வன்னியர் என்று சொல்லுகிறபோதும் தான், கோபம் வந்து பொங்குகிறார்கள்.

பஞ்சாபில் ஒரு மதவாதி சொந்த பிரச்சினை யால் கொல்லப்பட்டதற்கே மிகப் பெரிய கலவரம். பீகாரில் இரயில் நிறுத்தப்படாததால் இரயிலை தீ வைத்து கொளுத்தி பெரிய போராட்டம். அங்கு மம்தா பானர்ஜி நேரில் வந்து போராட்டக்காரர்களிடம் பேசுகிறார். காஷ்மீர் மக்கள் கற்களையே ஆயுதமாக கொண்டு போராடுகிறார்கள். ஆனால் தமிழ் நாட்டில் சாதி உணர்வு மட்டுமே மேலோங்கி நிற்கிறது. நாமெல்லாம் ஒவ்வொருவரும் உயர் சாதியாக நினைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால், பார்ப்பனர்களை தவிர யாரும் கோவிலில் நுழைய முடியாத நிலைதான். எனவே தமிழன் என்ற அடிப்படையில் தமிழர் பிரச்சினைக்காக எல்லோம் ஒன்றிணைய வேண்டும் எனப் பேசினார்.

இறுதியாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி உரையில், பெரியார் திராவிடர் கழகம் துவக்கப் பட்டதன் நோக்கம், தமிழர்களுக்காக, தந்தை பெரியார், எந்தெந்த உரிமைகள் பெற்றுத் தர போரா டினார் என்பதையும், அந்தப் போராட்டங்கள் எல்லாம் அரசுக்கு எவ்வளவு அழுத்தத்தை தந்தது என்பதைப் பற்றியும் விரிவாகப் பேசினார். மேலும், வடநாட்டில் புரட்சியாளர்களின் பெயருக்கு பின்னால்கூட சாதி பட்டம் உள்ளது. ஆனால் தமிழ்நாட்டில் சாதிச் சங்கத் தலைவர்கள்கூட தங்கள் பெயருக்குப் பின்னால் சாதி பட்டம் போடாமல் இருப்பதற்குக் காரணம் பெரியார் கொள்கையின் தாக்கம் என்று பேசினார்.

**செய்தி: அ. கோகுலகண்ணன்**

### அக்டோபர் கிளர்ச்சிக்கு சேலம் மாவட்டம் தயாராகிறது

**29.8.2010** ஞாயிறு பிற்பகல் **12** மணிக்கு சேலம் தாதகாப்பட்டி பெரியார் நூலகத்தில் சேலம் மாவட்ட கலந்துரையாடல் கூட்டம் நடை பெற்றது. மாவட்ட தலைவர் செ. மார்ட்டின் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் மாவட்டம் முழுவதும் பல இடங்களில் அக். 2 ஆம் தேதி போராட்டத்தை விளக்கி சுவரெழுத்து எழுதப்பட்டுள்ளது என்றாலும் இன்னும் சிறு சிறு கிராமங்களிலும் சுவரெழுத்து எழுதுவது என முடிவு செய்யப்பட்டது. (சுவரெழுத்துப் பணி தொடர்ந்து நடைபெறுகிறது) செப்டம்பர் 17 பெரியார் பிறந்த நாளுக்குள், கழக ஏடான ‘புரட்சிப் பெரியார் முழக்க’த்திற்கு இரண்டாயிரம் சந்தா சேர்த்துக் கொடுப்பது எனவும் முடிவு செய்யப் பட்டது.

மேலும் அக்டோபர் 2 இல் திருச்சியில் நடைபெறும் போராட்டத்திற்கு மேட்டூர், மேட்டூர் ஆர்.எஸ்., கொளத்தூர், காவலாண்டியூர், இளம்பிள்ளை ஆகிய பகுதிகளிலிருந்து தனித் தனிப் பேருந்துகளிலும் நங்கவள்ளி, மேச்சேரி, ஓமலூர், சேலம் மாநகரம், ஆத்தூர் உள்ளிட்ட அனைத்து ஒன்றிய கிளை கழகங்களில் இருந்தும் தனித் தனி சிற்றுந்துகளில் அதிகப்படியாக கலந்து கொள்வது என முடிவு செய்யப்பட்டது.

மாவட்ட செயலாளர் அ. சக்திவேல், மாவட்ட அமைப்பாளர்கள் டைகர் பாலன், கி. முல்லை வேந்தன், நங்கவள்ளி சீ. ஆன்பு, மாவட்ட இளைஞரணி தலைவர் அ. கோகுலகண்ணன், இளைஞரணிச் செயலாளர் விஜயகுமார், மாவட்ட துணைச் செயலாளர் அ. முத்து மாணிக்கம், மாநில செயற்குழு உறுப்பினர் டேவிட், சேல மாநகர அமைப்பாளர் மோ. பாலு, ஆத்தூர் மகேந்திரன், கொளத்தூர் செழியன், காவலாண்டியூர் ஈசுவரன், சேலம் ஜங்ஷன் தங்கராசு, சேலம் வீரமணி, நங்கவள்ளி கிருஷ்ணன், மணியனூர் ராம் உள்பட சுமார் ஐம்பது பேர் கலந்து கொண்டனர்.

## அக்.2 – திருச்சியில் ஆயிரமாயிரமாய் திரளுவோம்!

# கருத்துரிமையை அனுமதிக்கிறதா தி.மு.க. அரசு?



சு. குமார தேவன்

சுதந்திரம் பெற்றதாகச் சொல்லப்படும் 1947 ஆம் ஆண்டு முதல் 1967 ஆம் ஆண்டு முற்பகுதி வரை, காங்கிரஸ் தமிழகத்தை ஆட்சி செய்தது. திராவிடர் கழகத்திலிருந்து தி.மு.க. பிரிந்து 1949 ஆம் ஆண்டு முதல் 1967 ஆம் ஆண்டு ஆட்சியைப் பிடிக்கும் வரை காங்கிரசின் அடக்குமுறையை எதிர்த்து எதிர் நீச்சல் போட்டு வந்தது. பேசிப் பேசியே ஆட்சிக்கு வந்தவர்கள் என்று தி.மு.க.வினரைப் பார்த்து எல்லோரும் சொல்வார்கள். அப்படி வந்தவர்கள் ஆட்சியில் பேசுவதற்குத் தடை, அதை மீறிப் பேசினால் கைது, அதுவும் சாதாரண பிரிவில் கைது செய்வதல்ல, தேசிய பாதுகாப்புச் சட்டத்தில் கைது செய்வது. போராட்டம் அல்லது ஆர்ப்பாட்டம் நடத்தினால் முதலில் அனுமதி, கடைசி நேரத்தில் அனுமதி, மறுப்பு மீறி ஆர்ப்பாட்டம் செய்ய முற்பட்டால் கைது செய்து சிறையில் தள்ளும் கொடூரம், தமிழகத்தில் தி.மு.க. ஆட்சியில்தான் அதிகமாக நடைபெற்று வருகிறது.

திராவிட இயக்கத்தில் மேடைகள், என் தம்பிமார்களால் மாலை நேரத்து கல்லூரி வகுப்புகளாக மாறி வருகிறது என்று குதூகலமாக சொன்னவர், நூற்றாண்டு விழா நாயகர் அண்ணா. ஆனால், அதற்கான ஒரு வாய்ப்பினை சமீபகாலமாக தி.மு.க. அரசு மறுத்து வருவதும், காவல்துறை அதிகாரிகள் சட்டம் ஒழுங்கு பிரச்சினையைக் காரணம் காட்டி கழகம் நடத்தும் பொதுக் கூட்டங்களுக்கு அனுமதி மறுப்பதும், ஈழம், தமிழின உரிமை மற்றும் கருத்துரிமை ஆகியவற்றின் பெயரால் நடத்தும் பொதுக் கூட்டங்களுக்கு அனுமதியை ரத்து செய்தது போக தற்போது “சாதித் தீண்டாமைக்கெதிரான பெரியார் கொள்கை விளக்கப் பொதுக் கூட்டம்” நடத்தக்கூட காவல்துறை சட்டம் ஒழுங்கைக் காரணம் காட்டி சில பகுதிகளில் கூட்டம் நடத்துவதற்கு மறுக்கிறது. கழகம் நடத்த உள்ள அக்டோபர் 2 ஆம் தேதி போராட்டத்திற்கான விளக்க அறிவிப்பு பற்றி சுவர்களில் விளம்பரம் செய்தால் காவல்துறைக்கு கசக்கிறது; சுவரொட்டிகள் ஒட்டி மறைக்கப்படுகின்றன. இந்த எதேச்சாதிகார செயலினை கருத்துரிமையை மறுக்கும் செயலாகத்தான் நடுநிலையாளர்கள் பார்க்கிறார்கள்.

1942 இல் காங்கிரசார் நடத்திய ஆகஸ்டு புரட்சி அல்லது வெள்ளையனே வெளியேறு என்று கூறி கலவரத்தில் ஈடுபட்டபோது, அந்தப் போராட்டம் நடைபெறுவதற்கு முன்பாக மேற்படி போராட்டத்தினை விளக்கி காந்தியார் பேவதற்காக, வெள்ளை அரசு ஒரு ரயிலினை தந்து, ஊர் ஊராக பிரச்சாரம் செய்ய அனுமதித்தது. ஆனால், சுதந்திரம் வந்ததாகச் சொன்ன பிறகு, காங்கிரஸ் அரசு பேசுவதற்கும், எழுதுவதற்கும், ஏன் நாடகம் போடுவதற்குகூட தடை போட்டது. (உதாரணம் - நடிகவேள் எம்.ஆர். இராதா நாடகங்களை தடுக்க போடப்பட்ட சட்டம்) தேசிய பாதுகாப்புச் சட்டம் என்ற ஒரு அடக்குமுறைச் சட்டத்தினை இயற்றி, இதில் அந்நாள் சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவர் கலைஞர் கருணாநிதியை 1965இல் பக்தவச்சலம் தலைமையிலான காங்கிரஸ் அரசு கைது செய்து பாளையங் கோட்டை சிறையிலடைத்தது. அதன் தாக்கம், அடுத்த தேர்தலில் எதிரொலித்தது. ஆனால், அதே தேசிய பாதுகாப்புச் சட்டம், ஈழத் தமிழர்களுக்காகவும், இங்குள்ள மீனவத் தமிழர்களுக்காகவும் ஆதரவாக பேசினால் அதே அடக்கு முறைச் சட்டத்தின் மூலம் கைது செய்து, கலைஞர் அரசு மகிழ்ச்சி அடைகிறது. தன் காங்கிரஸ் விசு வாசத்தைக் காட்டிக் கொள்ள ஒரு கேடயமாக தேசியப் பாதுகாப்புச் சட்டத்தினை பயன்படுத்துகிறது. அரசியலமைப்பு சட்டத்தில் 19(1)(a) ஆம் பிரிவில் அடிப்படை உரிமைகளாக முதலாவதாக பேச்சு சுதந்திரத்தின் மூலம் கருத்துகளை வெளிப்படுத்த வகை செய்கிறது. அந்த கருத்துகள் அரசாங்கத்தின் சில கட்டுப்பாடுகளின் மூலம் 19(2) இல் ஒழுங்குப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால், கடடுப்பாடுகள் கருத்துரிமையை பாதிப்பதாக இருக்கக் கூடாது என்று பல்வேறு வழக்குகளில் உச்சநீதிமன்றம் மற்றும் உயர்நீதி மன்றங்கள் திரும்பத் திரும்ப கூறி வந்துள்ளன.

1999 ஆம் ஆண்டில் பழ. நெடுமாறன், சென்னை உயர்நீதிமன்றத்தில், புலிகளுக்கான தடையினை இரத்து செய்ய வலியுறுத்தி பொதுக் கூட்டம் நடத்துவதற்கு அனுமதி மறுக்கப்பட்டதை எதிர்த்து போடப்பட்ட வழக்கை விசாரித்த சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி ஆர். ஜெயசிம்மபாபு, முக்கியத்துவம் வாய்ந்த ஒரு தீர்ப்பினை அளித்தார். (1999(1) LW (CRI) பக்கம் 73) மேற்படி தீர்ப்பில் உச்சநீதிமன்றம் ஏற்கெனவே வழங்கிய தீர்ப்புகளான ரங்கராஜன் - எதிரி - பி. ஜெகஜீவன்ராம் (1989 (2) SCC 5741) என்ற வழக்கினையும் Himmatlal K. Shah - எதிர் காவல் ஆணையர் அகமதாபாத் (AIR 1973 SC 87) என்ற வழக்கையும் சுட்டிக்காட்டி போலீசாருக்கு இருக்கக்கூடிய அதிகாரம் ஒழுங்கு முறைப்படுத்துவதற்கான அதிகாரம் தான் என்றும் காலனி ஆதிக்க ஆங்கில அரசு இயற்றிய போலீஸ் சட்டத்தின்படி நடவடிக்கை எடுப்பது என்பது அரசியல் சட்டம் உறுப்பு 19(1) இல் அளித்துள்ள உரிமையினை மீறும் செயல். மேலும் ஜனநாயக நாட்டில் கருத்து சுதந்திரத்தினை வெளிப்படுத்துவதற்கு உரிமையினை அனுமதிப்பது தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தின் கடமை என்றும், வேண்டுமானால், அடிப்படை உரிமையான கருத்துரிமையினை மனுதாரர் வெளிப்படுத்துவதற்கு நிபந்தனைகளை விதிப்பதற்கு தடையேதும் இல்லை என்றும் கூறினார். அந்தத் தீர்ப்பின் அடிப்படையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தி.மு.க. ஆட்சி 2001 இல் மாறியதே தவிர, அதன் காட்சிகள் மாறவில்லை என்பதற்கு உதாரணமாக பல இடங்களில் கழகத் தோழர்கள் நடத்த இருந்த பொதுக் கூட்டங்களுக்கு தீமிதி, மூடநம்பிக்கை ஒழிப்பு ஊர்வலம் ஆகிய நிகழ்ச்சிகளுக்கு அனுமதி மறுக்கப்பட்டது. ஒவ்வொரு முறையும் நமது கழக மூத்த வழக்கறிஞர் எஸ். துரைசாமி, சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்து, அனுமதி பெற்றுத் தருவதும், அதன் அடிப்படையில் கூட்டங்கள் நடைபெறுவதும் வாடிக்கையானது. சென்னை மாவட்ட கழகத் தலைவர் தபசி குமரன், சென்னை தியாகராய நகரில் மூடநம்பிக்கை ஒழிப்பு ஊர்வலமும், அதைத் தொடர்ந்து தீ மிதியும் நடத்த அனுமதி கேட்டு, சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். வழக்கை விசாரித்த நீதிபதி பி.டி. தினகரன், நமது கழகம் எடுத்து வரும் முயற்சிகளை பாராட்டி, விஞ்ஞான பூர்வமான நிகழ்ச்சிகளை போலீசார் ஊக்கப்படுத்த வேண்டுமே தவிர தடை செய்யக்கூடாது என்று கூறி கழகம் நடத்த இருந்த மூடநம்பிக்கை ஒழிப்பு ஊர்வலம் மற்றும் தீ மிதி நிகழ்ச்சிகளை நடத்த காவல்துறைக்கு அனுமதி வழங்க ஆணையிட்டார்.

2004 ஆம் வருடத்தில் ஜெயலலிதா ஆட்சியில், மன்னார்குடி கழகத்தின் சார்பாக ராம. முத்துராமலிங்கம், காஞ்சி சங்கராச்சாரி கைது பற்றி விளக்கப் பொதுக் கூட்டம் நடத்த அனுமதி கேட்டபோது காவல்துறை சட்டம் ஒழுங்குப் பிரச்சினையை காரணம் காட்டி அனுமதி மறுத்தது. அதை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்த போது, சென்னை உயர்நீதிமன்றம், கூட்டம் நடத்துவதற்கு அனுமதி வழங்கிய அதே நேரத்தில் சங்கராச்சாரி கைது பற்றி பேசக் கூடாது என்ற நிபந்தனையுடன் அனுமதி அளித்தது. அதை எதிர்த்து இராம. முத்துராமலிங்கம் தொடர்ந்த அப்பீல் வழக்கில் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகள் மார்க்கண்டேய கட்ஜு மற்றும் என்.வி. பாலசுப்ரமணியம் அடங்கிய அமர்வு சட்டம் ஒழுங்கு பிரச்சினை ஏற்பட வாய்ப்பு இருந்தால் காவல்துறையினர், தாராளமாக பொதுக் கூட்டத்திற்கான அனுமதியை ரத்து செய்யலாம் என்று தீர்ப்பளித்தது (2004 (5) CTC 554) இந்த தீர்ப்பு வந்தவுடன் போலீசாருக்கு மிகுந்த கொண்டாட்டமாகி விட்டது.

சட்ட ஒழுங்கு பிரச்சினை ஏற்படும் என்ற காரணத்தைக் காட்டி பல கூட்டங்களுக்கான அனுமதியினை அன்றைய ஜெயலலிதா அரசு மறுத்தது. அதிரை எம்.எம்.இப்ராகிம் என்பவரும் அப்போதைய ராணிப்பேட்டை காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினரும், தாங்கள் பொதுக் கூட்டம் நடத்துவதற்கு சட்டம் ஒழுங்குப் பிரச்சினையை காரணம் காட்டியும், கூட்டம் நடத்த அனுமதித்தால் காங்கிரசாருக்கும், அண்ணா தி.மு.க. தொண்டர்களுக்கும் கைகலப்பு ஏற்பட்டு, சட்டம் ஒழுங்கு பிரச்சினை ஏற்படும் என்றும், போக்குவரத்து நெரிசல் ஏற்படும் என்றும் கூறி, அனுமதி மறுத்ததை எதிர்த்து வழக்கு தொடுத்தனர். சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி கே.பி. சிவசுப்ரமணியன், தன்னுடைய தீர்ப்பில் (2005 (3) CTC பக்கம் 260) சட்ட ஒழுங்கு பிரச்சினையைக் காரணம் காட்டியும் மோதல் ஏற்படும் சூழ்நிலையை காரணம் காட்டியும் அரசியல் சட்டம் வழங்கியுள்ள அடிப்படை உரிமையினை மறுதலிக்கக் கூடாது என்றும், இராம. முத்துராமலிங்கம் வழக்கில் அமர்வு நீதிமன்றம் அளித்த தீர்ப்பு உணர்வுபூர்வமான பிரச்சினையான சங்கராச்சாரியார் கைது சம்பந்தமாக வழங்கப்பட்டது என்றும், அந்தத் தீர்ப்பில்கூட டிவிஷன் பென்ச் அரசியல் சட்டத்தின் அடிப்படை உரிமையினை மறுக்கவில்லையென்றும், தனி நீதிபதி (நீதிபதி பி.டி. தினகரன்) அளித்த தீர்ப்பில்கூட அடிப்படை உரிமையை மறுக்கவில்லை என்றும் காவல்துறையினர் விதிக்கும் கட்டுப்பாடுகள் அரசியல் சட்டம் வழங்கியுள்ள பேச்சுரிமையின மறுக்கப்படக் கூடாது என்று கூறி, பொதுக் கூட்டங்கள் நடத்த அனுமதி வழங்கியதோடு, கூட்டம் நடத்தத் தகுந்த பாதுகாப்பினையும் அளிக்க உத்தரவிட்டார்.

மீண்டும் தி.மு.க. ஆட்சி 2006 இல் வந்தது. ஆனாலும் இதே நிலைமை தொடரத்தான் செய்தது. வேலூரில் கழக சார்பில் திலீபன், வழக்கு தொடர்ந்துதான் கூட்டம் நடத்த அனுமதி பெற்றார். மேட்டூர், தர்மபுரி, சேலம், ஈரோடு, சென்னை ஆகிய இடங்களில் நடத்தவிருந்த கூட்டங்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டு, பின்பு நீதிமன்றத்தின் மூலம் அனுமதி பெற்று நடத்தப்பட்டது.

(மீதி அடுத்த இதழில்)

## கோவை : திடீர் ‘வினாயகன்’ கழக எதிர்ப்பால் ‘மறைந்தான்’





கோவை வடக்கு வட்டாட்சியர் அலுவலகத்தில் 29.8.2010 ஞாயிறு அன்று அவசரமாக திண்ணை ஒன்றைக் கட்டி, அதன் மீது ஒரு விநாயகன் சிலையும் வைக்கப்பட்டது. திங்கள் காலை அலுவலகம் வந்த ஊழியர்களும், பொது மக்களும் இந்த திடீர் விநாயகன் சிலை கண்டு திகைப்படைந்தனர். இது குறித்து தகவல் கிடைத்ததும் கழகத் தோழர்கள், மாநகர தலைவர் கோபால், அமைப்பாளர் செல்வம், கதிரவன், வடக்கு மாவட்டத் தலைவர் இராமசாமி, மாநகர செயலாளர் இ.சாஜித் உள்ளிட்ட தோழர்கள் உடனடியாக வட்டாட்சியர் அலுவலகம் சென்று, அங்கிருந்த துணை வட்டாட்சியரிடம், அரசு அலுவலகத்தில் மதவழிபாடு சிலைகள் அமைப்பது அரசு ஆணைக்கு எதிரானது மற்றும் நீதிமன்ற தீர்ப்புக்கும் எதிரானது என்றும் கூறி மனு அளித்தனர். இதன் நகல் மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளரிடமும் வழங்கப்பட்டது. அதில் 2 நாட்களுக்குள் சிலை அகற்றப்படாவிட்டால், அலுவலக முற்றுகை போராட்டம் நடத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் வட்டாட்சியர் அலுவலக அதிகாரிகள், கழகப் பொதுச்செயலாளர் கு. இராமகிருட்டிணனிடம் நேரிலும், தொலைபேசியிலும் சமரசம் செய்ய முயன்றனர். கழகப் பொதுச்செயலாளர் உறுதியாக சிலை அகற்றம் என்பது மட்டுமே தீர்வு என்று தெரிவித்தார். 6.9.2010 அன்று காலை, வட்டாட்சியர் அலுவலகத்தில் முற்றுகைப் போராட்டம் நடத்தப்படும் என்று கழக சார்பில் அறிவிக்கப்பட்டது. இதையடுத்து போராட்டத்திற்கு முந்தைய நாள் 5.9.2010 அன்று அந்த விநாயகன் சிலை அங்கிருந்து அகற்றப்பட்டது.

சட்ட விரோதமாக வைக்கப்பட்ட விநாயகன் சிலை, கழக முற்றுகைப் போராட்ட அறிவிப்பால் அகற்றப்பட்டது. கழக கொள்கை உறுதிக்கு கிடைத்த வெற்றியேயாகும்.

செய்தி: சாஜித்

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/09-11 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/09-11
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

# 'தேவதாசி முறையை' உருவாக்கிய இராசஇராசசோழன்

(முதல் பக்கத் தொடர்ச்சி)

சமூகம் சிதைந்து, தங்களுக்குள் போரிட்டு வெட்டி சாய்த்துக் கொண்டது. வேளாளருக்கும், கைக்கோலருக்கும் யார் அதிக சலுகைகளைப் பெறுவது என்பதில் போர் நடந்தது.

- தமிழ்ச் சமூகம் - வலங்கை, இடங்கை என்று இரு பிரிவுகளாக - பார்ப்பனர்களால் பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு பிரிவிலும் 98 சாதிகள் பிரிக்கப்பட்டன. இந்த சாதிப் பிளவை நிலைநிறுத்த தனித்தனி புராண கட்டுக்கதைகள் உருவாக்கப்பட்டன.
- கீழ்ச்சாதிப் பிரிவுகள் உருவாக்கப்பட்டு, அவர்களுக்கு தொழில்களும் நிர்ணயிக்கப்பட்டதும் சோழர் ஆட்சியில் தான். இரதகாரர் என்ற சாதியினர், பார்ப்பனரின் வேள்விகளுக்கு வேண்டிய சட்டுவங்கள், தட்டுகள் முதலியவற்றை செய்வதோடு, தேர்ச் சக்கரத்தைசெய்ய வேண்டும். அத்துடன் மண்பாண்டம் செய்தல், மன்னருக்கு மணி முடி தயாரித்தலும் இவர்களின் வேலை. இவைகளைத் தவிர வேறு வேலைகளை இவர்கள் செய்யக் கூடாது.
- உயர்குலத் தந்தைக்கும், தாழ்குலத் தந்தைக்கும் பிறந்தவர் 'அனுலோமர்' என்றும், தாழ்குலத்துத் தந்தைக்கும், உயர்குலத்துத் தாய்க்கும் பிறந்தவர்கள் 'பிரதிலோமர்' என்றும், வைசியத் தந்தைக்கும் 'சூத்திர'த் தாய்க்கும் பிறந்தவர் 'கரணீகர்' என்றும் சமூகத்தைக் கூறு போட்டனர்.
- வலங்கை, இடங்கை சாதிப் பிரிவுகளுக்கு தனித் தனிக் கோயில்கள், மண்டபங்கள், தேவரடியார்கள் என பாகுபாடுகள் ஏற்படுத்தப்பட்டன. ஆடை, அணிகலன்கள், உணவிலும் பாகுபாடுகளை பார்ப்பனர்கள் அறிவுரைப்படி சோழ மன்னர்கள் திணித்தனர். கோயில்களிலும், மண்டபங்களிலும் சாதி மோதல்கள் வெடித்தன. குருதி ஆறாக ஒடியது. இந்த மோதல்களில் சோழ இளவரசன் ஒருவனும் இறந்து போனான்.

  மேலே குறிப்பிட்ட குலங்களைச் சாராத பிரிவினரை 'பறையர்' என்று தனிக் குலத்தவராக அடையாளப்படுத்தி, பார்ப்பனர் ஆலோசனைகளை ஏற்று, அவர்கள் இருப்பிடத்துக்கு தனியாக 'சேரி'களை உருவாக்கியதும் சோழர்கள்தான்.
- கோயில் பணிகளுக்காக பெண்கள் பொட்டுக் கட்டி விடப்பட்டு, தேவ தாசிகளாக்கப்பட்ட சமூக அவலமும் சோழர் காலத்தில்தான் உருவானது.
- புதுவையில் பிரஞ்சு ஆய்வு நிறுவனத்தின் ஆய்வாளர் பேராசிரியர் கோ. விஜயவேணு கோபால், தீண்டாமை எனும் கருத்துருவாக்கம் என்ற ஆய்வில் இவ்வாறு குறிப்பிடுகிறார்.

  "மனுதர்ம சாஸ்திரம் போன்ற நூல்களில் கூறப்படும் தீட்டுக் கோட்பாடு, சோழர் காலத்தில்தான் தமிழகத்தில் தலைதூக்குகிறது. முதலாம் இராசராசனுடைய கல்வெட்டு ஒன்றில், "தீண்டாச்சேரி" என ஊர்ப் பகுதி குறிப்பிடப்படுகிறது. தீண்டாமை எனும் வடநெறிக் கோட்பாடு சோழர் காலத்தில் வழக்குப் பெற்றமை இராசஇராசனின் கல்வெட்டில் புலனாகிறது" என்று எழுதுகிறார்.
- புதுவை மாநிலத்தைச் சார்ந்த பாகூரிலுள்ள திருமூலநாதர் கோயிலில் பொறிக்கப்பட்டுள்ள முதலாம் இராசேந்திரனின் கல்வெட்டு தீண்டாமையின் அடிப்படையில், ஒரு ஊரில் வாழ்ந்த மக்களை 'தீண்டாதோர்' என்று குறிப்பிடுகிறது.
- இறந்த மூதாதையர்களை வழிபடும் 'நடு கல்' வழிபாடுதான் தமிழர்களின் வழிபாட்டு முறையாக இருந்ததை சங்ககால இலக்கியங்கள் கூறுகின்றன. பெருந்தெய்வ ஆகம வழிபாட்டு முறைகள் அப்போது கிடையாது. இதுபற்றி ஆய்வாளரும் பேராசிரியருமான ஆ.சிவசுப்ரமணியம் கூறுகிறார்:

"பிற்காலச் சோழப் பேரரசு - பக்தியுடன் தன்னை பிணைத்துக் கொண்டது. அடித்தள மக்களின் வழிபாட்டை ஆகம நெறிக்கு உட்பட்ட சைவ நெறிக்குள் கொண்டு வரும் முயற்சி யின் ஓரங்கமாக நடுகல் வழிபாட்டையொத்த பள்ளிப் படைக் கோயில்கள் உருவாக்கப்பட்டன. மன்னர்கள், சமயத் துறவிகள் அடக்கஞ் செய்யப்பட்ட இடத்தில் கருவறையுடன் கூடிய கோவில்கள் உருப் பெற்றன." (ஆதாரம்: "கோபுரத் தற்கொலைகள்" நூல்)

- வடநாட்டுப் பார்ப்பனர்களுக்கு அடிபணிந்து
- தமிழர்களிடையே சாதிப் பிரிவுகளை உருவாக்கி மோதவிட்டு, குருதி ஆறு ஓடவிட்டு,
- கோயில்களில் வடமொழியை வழிபாட்டு மொழியாக்கி
- 'அக்கிரகாரங்களையும்', 'சேரி'களையும் தனித்தனியே உருவாக்கி
- தேவதாசி முறையை அறிமுகப்படுத்தி
- தமிழர்களை பார்ப்பனியமாக்கிய

இராசஇராசசோழனுக்கும், இன்றைக்கும் சூத்திர இழிவை நிலைநாட்டிக் கொண்டிருக்கும் தஞ்சை பிரகதீசுவரன் கோயிலுக்கும் விழா எடுத்து கொண்டாடி மகிழ்கிறது, கலைஞர் ஆட்சி ! அவமானங்களுக்கு அரசு விழாவாம் !

இதைத் தட்டிக் கேட்க வேண்டிய வீரமணிகள், வாயை இறுகக் கட்டிக் கொண்டு, கலைஞரின் புகழ் பாடித் திரிகிறார்கள் ! வெட்கம் !

**'இரா'**

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**
தொடர்புக்கு:
ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர், சென்னை-41.
✆ 99416 13535

## நன்கொடை

சென்னை பெரும்பாக்கம் 'வன்பொருளகம்' இராம கிருஷ்ணா வணிக நிறுவன உரிமையாளர் தோழர் பார்த்திபன், கழக ஏட்டுக்கு ரூ.500 நன்கொடை வழங்கி யுள்ளார். நன்றியுடன் பெற்றுக் கொண்டோம். (ஆர்)

# சங்கரமடம் தாக்கப்பட்ட வழக்கில் சேலம் தோழர்கள் விடுதலை

திருச்சி சீரங்கம் பெரியார் சிலை தாக்கப்பட்டபோது, அதற்கு தமிழகம் முழுவதும் தோழர்கள் எதிர்வினை ஆற்றினர். சேலம் சங்கர மடமும் தாக்கப்பட்டது. அந்த வழக்கிலிருந்து தோழர்கள் மோ. பாலு, இரா. டேவிட், தமிழர் தேசிய இயக்கம் சிவப்பிரியன், தமிழ்தேச பொதுவுடமை கட்சி பிந்துசாரன், தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்க இனியன் ஆகியோரை 3.9.2010 அன்று சேலம் நீதிமன்றம் விடுதலை செய்தது. கழக சார்பில் வழக்கறிஞர் அன்பு வாதாடினார்.

# பெரியார் பெருந்தொண்டர்கள் நினைவு கல்வெட்டு கழகத் தலைவர் கொளத்தூர் மணி திறந்து வைத்தார்



30.8.2010 அன்று கழகத்தின் சார்பாக ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலத்தில் கல்வெட்டு திறப்பு விழா, கொடியேற்று விழா மற்றும் 'குடிஅரசு' நூல் அறிமுக விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. சத்தியமங்கலம் பகுதியில் தன் வாழ்நாள் முழுவதும் பெரியாரின் தொண்டர்களாக, பெரியார் கொள்கைகளைப் பரப்புவதையே தன் இலட்சியமாகக் கொண்டும், பல போராட்டங்களிலும் பங்கெடுத்து, இயக்கம் வளர்த்த மறைந்த பெரியார் பெருந் தொண்டர்களாக ஆசிரியர் நவநீதன், வடவள்ளி ரங்கன் ஆகியோருக்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி, நினைவு கல்வெட்டை சத்தி - திம்மையன் புதூரிலும், வடவள்ளியிலும் திறந்து வைத்தார். கழகக் கொடியினையும் அவ்விடங்களில் ஏற்றி வைத்தார். பொதுக்கூட்டம் சத்தியில் உள்ள வடக்குப் பேட்டையில் துவங்கியது. முன்னதாக மேட்டூர் டி.கே.ஆர். இன்னிசைக் குழுவினர் கழகப் பாடல்களை பாடினர். மாவட்ட அமைப்பாளர் சதுமுகை பழனிச்சாமி தலைமையில் புதுரோடு சிதம்பரம், இறையிலன் மூர்த்தி முன்னிலையில் மேட்டூர் கலைமணி, மாவட்டச் செயலாளர் இராம. இளங்கோவன், கழகப் பேச்சாளர் கா.சு.வேலுச்சாமி ஆகியோர் பேசிய பின்னர் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, குடிஅரசு நூலை அறிமுகம் செய்து பேசினார். இறுதியாக வேலுச்சாமி, சுந்தர்ராசு ஆகியோர் கழகத் தலைவரிடமிருந்து குடிஅரசு நூல்களைப் பெற்றுக் கொண்டனர். மாவட்ட இளைஞரணி தலைவர் இராசேந்திரன் நன்றி கூறினார். இந்தப் பொதுக் கூட்டம் நடத்த அனுமதி வழங்கக் கூடாது என இந்து முன்னணியினர் காவல்துறையிடம் மனுச் செய்தனர். அதை நிராகரித்து அனுமதி வழங்கினர்.

# சூலூர் சிவா - பெரியார் செல்வி சாதி மறுப்பு மணவிழா




சூலூர் பகுதி கழகத் தோழர்பொறிஞர் அ.ப. சிவா, நாகை மாவட்டம் பொறையாரைச் சேர்ந்த மருத்துவர் சோ. பெரியார் செல்வி ஆகியோரின் வாழ்க்கைத் துணை நல (சாதி மறுப்பு) ஒப்பந்த விழா 5.9.2010 அன்று சூலூரிலுள்ள எஸ்.எல்.எஸ். நஞ்சம்மாள் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. பொதுச்செயலாளர் கு. இராமகிருட்டிணன் தலைமையில் மணமகனின் தந்தையார் இரா. அருணாசலம் வரவேற்புரையாற்ற, மணமகளின் சகோதரர் பா. சந்திரகுமார், மணமகனின் மைத்துனர் ந. பாலகிருட்டிணன் ஆகியோர் மணமக்களின் அறிமுகவுரையாற்றினர். சூலூர் பேரூராட்சி முன்னாள் தலைவர் சூ.இரா.தங்கவேலு, எழுத்தாளர் பாமரன், சூலூர் பாவேந்தர் பேரவை அமைப்பாளர் செந்தலை ந. கவுதமன் ஆகியோர் வாழ்த்துரை வழங்க, கழகத் தலைவர் கொளத்தூர் மணி வாழ்க்கைத் துணை நல ஒப்பந்த விழா உறுதிமொழியேற்கச் செய்து மணவிழாவை நடத்தி வைத்து வாழ்த்துரை வழங்கினார். மணவிழா நினைவாக தலைவர் கொளத்தூர் மணி, பல்லடம் நாத்திகர் விழாவில் ஆற்றிய உரை தொகுக்கப்பட்டு, "அறிவியல் மனப்பான்மை வளருங்கள்" என்ற பெயரில் மணவிழா வெளியீடாக சூலூர் பேரூராட்சி முன்னாள் தலைவர் சூ.இரா. தங்கவேலு வெளியிட, சூ.ந. பன்னீர்செல்வம் பெற்றுக் கொண்டார். மணவிழாவை முன்னிட்டு 'புரட்சிப் பெரியார் முழக்கம்' இதழ் வளர்ச்சி நிதியாக ரூ.2000 வழங்கப்பட்டது. நன்றியுடன் பெற்றுக் கொண்டோம். (ஆர்)

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 16th September 2010

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



புரட்சிப்

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | periyardk.org | திருவள்ளுவர் ஆண்டு 2041 | செப்டம்பர் 23, 2010 | புரட்சி 9 | முழக்கம் 37 | விலை: ரூ.2.50

### தீண்டாமைச் சுவரை அகற்றுங்கள்

## கத்தோலிக்க பாதிரியார்களுக்கு கழகம் கடிதம்

*தமிழ்நாட்டில் முக்கிய கத்தோலிக்க சபைகளின் அருட்தந்தைகளுக்கு கழக சார்பில் திருச்சியில் கத்தோலிக்க சுடுகாட்டில் நிலைநாட்டப்பட்டுள்ள தீண்டாமைச் சுவரை அகற்றுமாறு, ஆங்கிலத்தில் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. கடித விவரம்:*

திருச்சிராப்பள்ளி நகரத்துக்கு பல வரலாற்றுச் சிறப்புகள் உண்டு. சோழ மன்னன் கரிகாலனின் தலைநகரமாக திருச்சிராப்பள்ளி விளங்கியது. அவன்தான் இரண்டாம் நூற்றாண்டில் பெருமைக்குரிய கல்லணையைக் கட்டினான். பல சமணத் துறவிகள் வாழ்ந்த நகரமும் இதுதான். பழைய பெருமைகள் மட்டுமல்ல, நவீன விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சிகளும் கொண்டு நிமிர்ந்து நிற்கும் நகரம் திருச்சிராப்பள்ளி. அண்ணா பல்கலைக்கழகம், அய்.அய்.எம். கணினி தொழில்நுட்ப பூங்காக்கள், சர்வதேச தரத்தில் அமைந்து புகழ் பரப்பி வருகின்றன. இத்தகைய சிறப்புகள் அடங்கிய அதே திருச்சிராப் பள்ளியில்தான் மற்றொரு, மனித உரிமைக்கும் மனித மாண்புக்கும் எதிரான அடையாளமும் அடங்கியிருக்கிறது. இதை பெரியார் திராவிடர் கழகம், இப்போது மக்கள் மன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்திருக்கிறது. ‘வேர்அவுஸ் கல்லறை’ என்று அழைக்கப்படும், கத்தோலிக்கர்களின் கல்லறையில், தீண்டப்படாத மக்களின் பிணங்களை அடக்கம் செய்ய தனி இடம் அமைக்கப்பட்டு, அதனைத் தனியே பிரித்துக் காட்டுவதற்காக குறுக்குச் சுவர் ஒன்றும் எழுப்பப்பட்டுள்ளது. நாம் நாகரிகமுள்ள மனித சமூகத்தில்தான் வாழ்கிறோமா என்ற கேள்வியை, இந்த ‘தீண்டாமைச் சுவர்’ எழுப்பிக் கொண்டிருக்கிறது.

இந்தக் கல்லறை அமைந்துள்ளதோ, பாலக்கரை என்று அழைக்கப்படும் பகுதியில் மேலப்புதூர் பாலம் அருகே ஆகும். இது திருச்சிராப்பள்ளியின் மய்யமான பகுதி. இந்தக் கல்லறை, பழைய கோயில் என்று அழைக்கப்படும் திருச்சபையின் கட்டுப்பாட்டில் உள்ளது. மறைந்த நகரின் முக்கிய பிரமுகரான திரு. லூர்துசாமி அவர்கள், இந்த இடத்தை, கல்லறை நிறுவுவதற்காக, நன்கொடையாக வழங்கினார். அந்தக் கல்லறைதான், தீண்டாமையை குறுக்குச் சுவர் வழியாக வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறது.

உப்புப் பாறை, செங்குளம் தாழ்த்தப்பட்டோர் குடியிருப்பு, மல்லிகைபுரம், ஜெம்ஸ் டவுன், கூனி பசார், காஜாபேட்டை பகுதிகளில் வாழும், தாழ்த்தப்பட்ட பிரிவு மக்களான “பறையர்”, “சக்கிலியர்” சமூகத்தின் பிணங்கள், குறுக்குச் சுவர் அமைக்கப்பட்ட ஒரு பகுதி கல்லறையிலும், மறுபுறத்தில் உள்ள கல்லறையில், “பழைய கோயில்” பகுதி இருதயபுரம், எடத்தெரு வாழும் பகுதிகளில் உயர்சாதியினர் என்று கூறிக் கொள்ளும், பிள்ளைமார், சாதியைச் சார்ந்த பிணங்கள் புதைக்கப்படுகின்றன. இரண்டு கல்லறைகளிலும் யேசுவின் ‘புனித சிலுவை’ச் சின்னம்தான் பொறிக்கப்பட்டுள்ளது. இரண்டு பிரிவினரும், ரோமன் கத்தோலிக்கப் பிரிவைச் சார்ந்தவர்கள்தான்.

இந்துமதம் தான் இப்படி சுடுகாட்டிலும் தீண்டாமையை பின்பற்றி வருகிறது என்றால், கிறிஸ்தவ மதமும், அதே தீண்டாமையைப் பின்பற்றுவது அதிர்ச்சியளிக்கிறது.

சாதியும், தீண்டாமையும், இந்து மதத்தின் கேடுகளாக திகழ்கின்றன. பெரியார் இந்து மதத்தின் இழிவுகளையும் கொடுமைகளையும் எதிர்த்து, வாழ்நாள் முழுதும் போராடினார். அதே நேரத்தில் திருச்சிராப்பள்ளியில் வேர் ஹவுஸ் கல்லறையில் இருந்த இந்தத் தீண்டாமையையும் எதிர்த்து பல ஆண்டுகளுக்கு முன்பே குரல் கொடுத்துள்ளார். அதை எதிர்த்து போராட்ட அறிவிப்பையும் வெளியிட்டார். ஆனால், பல்வேறு காரணங்களுக்காக, அந்தப் போராட்டம் தொடராமல் போய்விட்டது. அதே தீண்டாமைச் சுவர், இப்போதும் அப்படியே இருக்கிறது. பெரியார் விட்டுச் சென்ற அந்த இடத்திலிருந்து - பெரியார் திராவிடர் கழகம், இப்போது போராட்டத்தைத் தொடங்கியிருக்கிறது.

கடந்த மார்ச் மாதம் நகரின் 8 பகுதிகளில் பெரியார் திராவிடர் கழகம் இந்தத் ‘தீண்டாமைச் சுவரை’ அகற்றக் கோரி பரப்புரை நடத்தியது. தொடர்ந்து மாவட்டக் காவல்துறையின் தீண்டாமை ஒழிப்புப் பிரிவான ‘மனித உரிமைப் பாதுகாப்பு’ பிரிவு அதிகாரியை நேரில் சந்தித்து, கடந்த மார்ச் 14 ஆம் தேதி சுவரை அகற்றக் கோரி விண்ணப்பம் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

இதுபோன்ற தீண்டாமைக் குற்றங்களைத் தடுப்பதற்காகவே அமைக்கப்பட்டதுதான் காவல்துறையின் இந்த தனிப் பிரிவு. எனவே, இதை அப்புறப்படுத்தி, தீண்டாமையைத் தடுக்க வேண்டிய சட்டப்பூர்வ கடமை, இந்த காவல்துறை பிரிவுக்கு உண்டு. அதனால்தான், அந்தக் கடமையை செய்யத் தவறிய தீண்டாமை ஒழிப்புப் பிரிவை இழுத்து மூடும் போராட்டத்தை, அக்.2 ஆம் தேதி பெரியார் திராவிடர் கழகம் நடத்துகிறது.

“காவல்துறை நடவடிக்கை ஒரு பக்கம் இருந்தாலும், கிறிஸ்தவ மதத்துக்கு எதிராக, இந்துமத வழியில் தீண்டாமையை நிலைநாட்டும், இந்த சட்டத்துக்கு எதிரான அவமானச் சின்னத்தை அகற்றும் முயற்சிகளில் இறங்க வேண்டும் என்று ரோமன் கத்தோலிக்க மதப் பிரிவுகளை நிர்வகிக்கும் தங்களை வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறோம்” இவ்வாறு கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது.

### அக்.2 போராட்டம்: லண்டன் பி.பி.சி.யில் விரிவான செய்தி

திருச்சியில் அக்.2 இல் கழகம் நடத்தும் போராட்டம், சர்வதேச அரங்கிலும் எதிரொலித்துள்ளது. லண்டனிலிருந்து வெளிவரும் ‘பி.பி.சி.’ தமிழ் ஓசை இது தொடர்பான விரிவான செய்திகளையும், பேட்டிகளையும் ஒலிபரப்பியது. பல தமிழக கிறிஸ்தவ பாதிரியார்களின் பேட்டிகளையும், பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் கருத்தையும், ஒலிபரப்பியதோடு, அதன் இணையதளத்திலும் விரிவாகப் பதிவு செய்துள்ளது.

### பேரறிவாளன் எழுதிய நூலின் 5 ஆம் பதிப்பு வெளியீடு

தூக்குக் கொட்டடியில் 19 ஆண்டுகளாக வாடி வரும் பேரறிவாளன் எழுதிய ‘தூக்குக் கொட்டடியிலிருந்து ஒரு முறையீட்டு மடல்’ எனும் நூலின் அய்ந்தாம் பதிப்பு வெளியீடும், கவிஞர் குயில்தாசன் எழுதிய “சான்றோர் பட்டுணர்ந்த திருக்குறள்” நூல் அறிமுகமும், சென்னை தேவநேயப் பாவாணர் அரங்கில் செப்டம்பர் 11 மாலை 6 மணியளவில் தோழர் தியாகு தலைமையில் அ. சவுரிராசன் முன்னிலையில் நிகழ்ந்தது. கவிஞர் குயில்தாசனின் நூலை அறிமுகம் செய்து, கவிஞர் தணிகைச் செல்வன் பேசினார். வழக்கறிஞர் பிரிட்டோ, கவிஞர் தாமரை, பத்திரிகையாளர் கவிதா, தமிழ் முழக்கம் சாகுல் அமீது, பேராசிரியர் சரசுவதி, உச்சநீதிமன்ற வழக்கறிஞர் பாரிவேந்தன் ஆகியோர் தூக்குத் தண்டனைக்கு எதிராகவும், பேரறிவாளன் மீதான குற்றச்சாட்டுகள் பொய்யானவை என்று - வலிமையான சான்றாதாரங்களுடன், தனது நூலில் பதிவு செய்துள்ளதையும் குறிப்பிட்டு, பேரறிவாளனின் தண்டனையைக் குறைத்து விடுதலை செய்ய வேண்டும் என்று மத்திய மாநில அரசுகளை வலியுறுத்தினர். நிகழ்ச்சியின் சிறப்பு அழைப்பாளராக, டில்லியிலிருந்து வந்திருந்த மனித உரிமைப் போராளி, பத்திரிகையாளர் ஜக்மோகன் சிங் உரையாற்றினார். அவரது உரையை தியாகு தமிழில் மொழி பெயர்த்தார். (விரிவான உரை பின்னர்) வழக்கறிஞர் ரஜினிகாந்த் நன்றி கூறினார்.

### அக்.2 போராட்டம்: ஓர் உரிமையான வேண்டுகோள்!

அக்டோபர் 2 ஆம் தேதி பெரியார் திராவிடர் கழகம் திருச்சியில் நடத்த இருக்கும் ‘தீண்டாமை ஒழிப்புப் பிரிவை’ இழுத்து மூடும் போராட்டம் பெரியார் திராவிடர் கழகத்தின் போராட்டம் மட்டுமல்ல; சமூகக் கொடுமைக்கு எதிரான இந்த பேராட்டத்தில் பங்கெடுக்க விரும்பும் அமைப்புகளை இரு கரம் நீட்டி அழைக்கிறோம். அவர்களும் சாதி - தீண்டாமை எதிர்ப்பு என்ற இந்த உண்மையான சமூக சமத்துவப் போராட்டத்தில் பங்கேற்க வேண்டும் என்றே விரும்புகிறோம். தி.மு.க. ஆட்சியும், இதை ஏதோ, அவர்கள் ஆட்சிக்கு எதிரான போராட்டமாக கட்சிப் பார்வையில் பார்க்கக் கூடாது.

அதிகாரத்தில் எந்தக் கட்சி இருந்தாலும், சமூகக் களத்தில், இத்தகைய கவனத்தை ஈர்க்கும் போராட்டங்கள் தொடர்ந்து நடத்த வேண்டியது அவசியமாகிறது. “எங்கள் ஆட்சியில் தான் நடத்த வேண்டுமா ?” என்று ஆட்சியில் இருக்கிற எந்தக் கட்சி கேட்டாலும், அந்தக் கேள்வியில் சமூகக் கவலையோ, சாதி - தீண்டாமை எதிர்ப்பு நோக்கமோ இல்லை என்றுதான் கூறுவோம் ! பல ஆண்டுகாலமாக மறக்கப்பட்ட - கிடப்பில் போடப்பட்ட இந்த சுயமரியாதைப் போராட்டத்தை தொடர்ந்து முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதே எமது நோக்கம்.

எந்தக் கட்சி அதிகாரத்தில் இருந்தாலும் இந்தப் போராட்டங்கள் தொடர்ந்து நடத்தப்பட வேண்டியதன் அவசியத்தை, உண்மையான சமுதாயக் கவலையுள்ள உண்மையாகவே பெரியார், அம்பேத்கர், அண்ணா லட்சியங்களை ஏற்றுக் கொண்ட எவருமே உணர்ந்து கொள்வார்கள்.

தீண்டாமை எனும் தேசிய அவமானம், இன்னும் நீடிக்கிறது என்று உயர்நீதிமன்ற நீதிபதிகளே குமுறுகிறார்கள்.

“மாநிலத்தின் அதிகாரத்திலுள்ள தீண்டாமை தடுப்புச் சட்டங்கள் முழுமையாக அமுல்படுத்தப்பட வேண்டும். தலித் மக்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியை காமன்வெல்த் விளையாட்டுகளுக்கு திருப்பிவிட்டது தவறு” என்று, உள்துறை அமைச்சர் ப. சிதம்பரமும் கூறுகிறார்.

எனவே கட்சிகளுக்கு அப்பாற்பட்ட இந்த சமுதாயப் பிரச்சினையில் களம் இறங்கிப் போராட, சாதி தீண்டாமை எதிர்ப்பு கொள்கையில் உடன்பாடுடைய ஒவ்வொரு அமைப்பையும், ஒவ்வொரு தோழரையும், பெரியார் திராவிடர்கழகம் அறைகூவி அழைக்கிறது !

தலையங்கம்

# இரண்டு தீர்ப்புகள்

தமிழ்நாட்டில் தீண்டாமை பல்வேறு வடிவங்களில் 'தாண்டவமாடி' வருவதை பெரியார் திராவிடர் கழகம் தொடர்ந்து சுட்டிக்காட்டி போராடி வருகிறது. பொதுவுடைமை கட்சியினர் இந்தப் பிரச்சினையில் தொடர்ந்து கவனத்தை ஈர்க்கும் போராட்டங்களை நடத்தி வருவதையும் குறிப்பிட வேண்டும். ஆனால், தமிழ்நாட்டில் 'மக்கள் சேவை'க்காக களத்தில் நிற்கும் வேறு எந்த அமைப்புகளும் இந்த முதன்மையான பிரச்சினைக்கு சமூக அவலத்துக்கு குரல் கொடுக்காமல் ஒதுங்கியே நிற்பது, வேதனைக்கும் கண்டனத்துக்கும் உரியதாகும்.

இது தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றம் வழங்கியுள்ள இரண்டு தீர்ப்புகளை சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

ஒன்று – சத்துணவு மய்யங்கள் மற்றும் அங்கன்வாடிகளில் பணி நியமனத்தில் தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் இடஒதுக்கீடுகள், மறுக்கப்பட்டது தொடர்பானதாகும். தமிழ்நாட்டில் உள்ள சத்துணவு கூடங்கள், உணவு வழங்கும் இடங்கள் மட்டுமல்ல; சாதி தீண்டாமை ஒழிப்பும் அதில் அடங்கியுள்ளது. தலித் சமூகத்தைச் சார்ந்தவர்கள், சத்துணவுக் கூடங்களில் சமையல்காரர்களாக இருந்து சமைத்து, அதை ஊரிலுள்ள அனைத்து சாதி ஏழைக் குழந்தைகளையும் உண்ண வைப்பது சமூக மாற்றத்துக்கான ஒரு திறவு கோலாகும். உத்திரபிரதேசத்தில் தலித் முதலமைச்சர் மாயாவதி, அங்கே உள்ள சத்துணவுக் கூடங்களுக்கு சமையல் வேலைக்கு தலித்துகளையே நியமிக்க ஆணையிட்டார். பிறகு பல பள்ளிகளில் சாதி உணர்வுள்ள பெற்றோர்கள், குழந்தைகளை பள்ளிக்கு அனுப்புவதையே நிறுத்தி விட்டனர். அதனால், அந்த உத்தரவை மாயாவதி திரும்பப் பெற்றுவிட்டார். இது சாதி தீண்டாமை வெறி பிடித்த உ.பி.யின் நிலை என்று நாம், பெருமைபட்டுக் கொள்ள முடியாது. இங்கே மட்டும் என்ன வாழுகிறதாம், என்ற கேள்வியை கேட்க வேண்டியிருக்கிறது. தமிழ்நாட்டில் சத்துணவு மற்றும் அங்கன்வாடி மய்யங்களில், அமைப்பாளர், சமையல்காரர், உதவியாளர் பணிகளுக்கு 29,773 காலிப் பணியிடங்களை நிரப்புவதற்காக 2008 ஆம் ஆண்டு மே 30 ஆம் நாள், அரசாணை ஒன்று வெளியிடப்பட்டது. கல்வித் தகுதி, வயது மற்றும் இடஒதுக்கீட்டைப் பின்பற்ற வேண்டும் என்று அந்த ஆணையில் கூறப்பட்டது. இதன்படி நிரப்பப்பட்டிருந்தால், 19 சதவீத இடஒதுக்கீட்டின்படி, 5675 காலிப் பணியிடங்களில், தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் நியமிக்கப்பட்டிருப்பார்கள். ஆனால், இடஒதுக்கீட்டைப் பின்பற்றாமலேயே அரசு ஆணைக்கு எதிராகவே பணியிடங்களை நிரப்பிவிட்டது தமிழக அரசு. பாதிக்கப்பட்டவர்கள் உயர்நீதிமன்றத்தை அணுகினர்.

வழக்கில் – தி.மு.க. அரசு, நீதிமன்றத்தில் அளித்த பதில்தான், அதிர்ச்சி தரக்கூடியது. சத்துணவு மற்றும் அங்கன்வாடிப் பணியாளர்கள் அரசுப் பணியாளர்கள் அல்ல என்றும், இவர்களின் பணி, எந்த ஒரு சட்டத்துக்கும் உட்பட்டதல்ல என்றும், எனவே, இடஒதுக்கீட்டை பின்பற்ற வேண்டியதில்லை என்றும், சமூகநீதி பற்றி 'தம்பட்டம்' அடித்துக் கொள்ளும் இந்த அரசு பதில் மனுதாக்கல் செய்தது. சத்துணவுத் திட்டங்களுக்கு அரசு ஒதுக்கும் நிதி ரூ.1,100 கோடி. இவ்வளவு அதிக நிதி ஒதுக்கீட்டின் கீழ், இயங்கும் திட்டத்தின் பணியாளர்கள், அரசுப் பணியாளர்கள் அல்ல என்கிறது இந்த ஆட்சி! அது மட்டுமின்றி "உள்ளூரில் அங்குள்ள **சமூகத்தோடு சேர்ந்து வாழும் நபர்களே** இம் மய்யங்களில் தகுதி அடிப்படையில் பணி நியமனம் செய்யப்படுகிறார்கள்" என்று பதில் அளித்துள்ளது. அதாவது, உள்ளூரில் ஆதிக்கசாதியினராக இருக்கும் பிரிவினரே நியமிக்கப்படுகிறார்கள் என்பதே இதன் அர்த்தம். இதுதான் பெரியார், அண்ணா ஆட்சிக்கான அடையாளமா, என்று கேட்க விரும்புகிறோம்.

நீதிபதி சந்துரு, தனது தீர்ப்பில், "பல்வேறு சமூகத்தாரின் குழந்தைகளுக்கு ஒரு தலித் உணவு தயாரித்து பரிமாறுவதை, சாதி இந்துக்கள் எதிர்ப்பார்கள் என்பது, மற்றொரு இன ஒதுக்கலின் வடிவமேயாகும்" என்று குறிப்பிட்டுள்ளார். தேசிய சுதந்திரப் போராட்டக் காலத்திலேயே சமூக மாற்றத்துக்காக சாதி தீண்டாமைக்கு எதிரான கருத்துகளை முன் வைத்தபோது, அதற்கு எதிர்ப்புகள், கருத்து மாறுபாடுகள் எழுந்ததை சுட்டிக்காட்டியுள்ள நீதிபதி, "நீண்டகால கசப்பான அனுபவங்களுக்குப் பிறகுதான் எதிர்ப்புகளை மீறி, சமபந்தி விருந்து வந்தது. உரிமை மறுக்கப்பட்ட சமூகத்தினர் தயாரித்த உணவை பல்வேறு உயர்சாதி சமூகத்தினருக்கு பரிமாறும் நடைமுறைகள் கொண்டு வரப்பட்டன. அதன் பிறகே சில வகையான தீண்டாமைகள் ஒழிக்கப்பட்டன. இது ஏற்றத்தாழ்வற்ற சமூகத்தை உருவாக்குவதில் ஏற்பட்ட மைல்கல்" என்று கூறியுள்ளார்.

தமிழ்நாட்டில் பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் நடத்திய காங்கிரஸ் மாநாடுகளில், பார்ப்பனர்களுக்கு தனியாக உணவு பரிமாறப்பட்டதையும், நீடாமங்கலம் காங்கிரஸ் மாநாட்டில், உணவு பந்தியில் உட்கார்ந்த, ஒரு தாழ்த்தப்பட்டவரை, மரத்தில் கட்டி வைத்து, தேசிய பார்ப்பனர்கள் தலையை மொட்டை அடித்ததையும், அதே நேரத்தில் – சுயமரியாதை இயக்கம் நடத்திய மாநாடுகளில் 'சமபந்தி' நடந்தது மட்டுமல்ல, 'தீண்டப்படாத நாடார் சமூகத்தினர் சமையல்' என்று அறிவித்து மாநாடு நடத்தியதையும் நினைவுகூர விரும்புகிறோம். தி.மு.க. ஆட்சி, சுயமரியாதை இயக்க வழிக்கு நேர்மாறாக, 'தேசிய பார்ப்பன காங்கிரஸ்' பின்பற்றிய 'உணவுத் தீண்டாமை'யைப் பின்பற்றுவதுதான், தி.மு.க.வின் கொள்கை வளர்ச்சியா? என்று வேதனையோடு கேட்கிறோம்!

மற்றொரு வழக்கு தலித் மக்களின் முன்னேற்றத்துக்காக செயல்பட்டு வரும் அரசு நிறுவனமான 'தாட்கோ' என்ற அமைப்பின், கட்டுமானப் பணி தொடர்பான ஒப்பந்தங்களை வழங்குவது பற்றியதாகும். ஆதி திராவிட மக்களுக்கு வீடுகள் கட்டித் தரும் திட்டப் பணிகளை, அதே சமுதாயத்தைச் சார்ந்த ஒப்பந்தக்காரர்களுக்கே வழங்கவேண்டும் என்று 1997 ஆம் ஆண்டு ஜூலை 15 ஆம் தேதி, அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டது. ஆனால், இந்த ஆட்சியின் ஆதி திராவிடர் நலத் துறை கடந்த பிப்ரவரி மாதம் 8 ஆம் தேதி பிறப்பித்த ஆணையோ கட்டுமானப் பணி ஒப்பந்தத்தில், தலித் பிரிவினர் அல்லாத மற்றவர்களும் பங்கேற்கலாம் என்று அறிவித்தது. இதை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கில் உயர்நீதிமன்றம், அரசு ஆணையை ரத்து செய்து விட்டது.

தீர்ப்பு வழங்கிய உயர்நீதிமன்ற நீதிபதி டி. அரிபரந்தாமன், "இப்போதும், பட்டியல் மற்றும் பழங்குடி இனப் பிரிவில் பெரும் பகுதியினர், வறுமைக் கோட்டுக்கும் கீழே தான் உழலுகிறார்கள். அரசியல் சட்டம் தீண்டாமையை சட்ட விரோதம் என்று அறிவித்திருந்தாலும், தீண்டாமை இன்னும் நடைமுறையில் செயல் அளவில் இருப்பது தேசிய அவமானமாகும். இப்போதும் கிராமங்களில் 'இரட்டைக் குவளை' அமைப்பு இருக்கவே செய்கிறது" என்று குறிப்பிட்டுள்ளார்.

பெரியார் திராவிடர் கழகம் முன்னெடுத்துள்ள சாதி – தீண்டாமை எதிர்ப்புப் போராட்டத்தின் நியாயங்களுக்கு, இத் தீர்ப்புகள் மேலும் வலிமையை கூட்டியுள்ளன என்றே கூறலாம். சாதி எதிர்ப்பு பரப்புரைகளையோ, இயக்கத்தையோ தமிழ்நாட்டில் திராவிட கட்சிகளாக வலம் வரும் கட்சிகள் முழுமையாகக் கைவிட்டு விட்டன.

பெரும்பான்மை வாக்கு வங்கிகளுக்காக – சாதி, தீண்டாமை எதிர்ப்பிலும் சமரசம் செய்து கொண்டு, பெரியார்–அண்ணா கொள்கைகளை பெயர்களில் மட்டும் வைத்திருப்பது மிகப் பெரும் கொள்கை வழுக்கல். பின்னோக்கியப் பயணம் என்றே சொல்ல வேண்டும். அரசு எந்திரங்களைக் கைப்பற்றி அதிகாரத்துக்கு வந்த நோக்கம் – இந்த செயல்பாடுகளுக்காகத்தானா?

தி.மு.க.வில் மிச்சம் மீதி இருக்கும் கொள்கையாளர்களாவது சிந்திக்க வேண்டும்.

# கருத்துரிமையை அனுமதிக்கிறதா தி.மு.க.அரசு?

– சு. குமார தேவன் –

(சென்ற இதழ் தொடர்ச்சி)

தமிழ்நாட்டில் மட்டும் தான் இப்படியா என்றால், பக்கத்தில் இருக்கும் யூனியன் பிரதேசமான புதுவையிலும், புதுவை மாநில கழகத் தலைவர் லோகு. அய்யப்பன், ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக நடத்தவிருந்த பொதுக் கூட்டத்திற்கு அரியாங்குப்பம் காவல்துறை சட்டம் ஒழுங்கு காரணம் காட்டி அனுமதி மறுத்தது. இதனை எதிர்த்து லோகு. அய்யப்பன் தொடர்ந்த வழக்கினை (W.P.No. 36916.2007) விசாரித்த சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி பி. ஜோதி மணி பல்வேறு தீர்ப்புகளைச் சுட்டிக்காட்டி, அரியாங்குப்பம் காவல் ஆய்வாளர் கூட்டம் நடத்த விதித்த தடையினை ரத்து செய்து கழகம் எந்த தேதியில் கூட்டம் நடத்த தீர்மானித்திருக்கிறதோ அந்த தேதிக்கு பொதுக் கூட்டம் நடத்த அனுமதித்ததும் 10 நாட்களுக்குள் உத்தரவு பிறப்பிக்கும்படியும் உத்தரவிட்டார். மேற்படி தீர்ப்பினை எதிர்த்து புதுவை அரசு மேல் முறையீடு செய்தது. மேல் முறையீட்டிலும் சென்னை உயர்நீதிமன்ற அமர்வு, தன்னுடைய தீர்ப்பில் (2008(7) MLJ பக்கம் **245**) பொதுக்கூட்டம் நடத்துவதற்கு அனுமதிக்க வேண்டும் என்றும், புதிய மனுவினை அளித்து அனுமதி பெற வேண்டும் என்றும், பதிவு செய்யப்பட்ட அமைப்புகள் நடததும் எந்தவிதமான பொதுக் கூட்டங்களுக்கும் அனுமதி அளிக்காமல் இருக்கக்கூடாது என்றும் கூறியுள்ளது. அதன் அடிப்படையில் புதுவை மாநிலக் கழகம் பொதுக் கூட்டத்தை நடத்தியது. இதற்கிடையே நீதிபதி பி.கே. மிஸ்ரா மற்றும் கே. சந்துரு ஆகியோர் அடங்கிய அமர்வு, சி.ஜே. ராஜன் என்ற வழக்கிலும் (2008 (3) MLJ பக்கம் **926**) மற்றும் கழகத்தினர் தொடர்ந்த வேறு சில வழக்குகளிலும் பொதுக் கூட்டம் நடத்த அனுமதி அளித்திருந்தது. கே.டி. பச்சைமால் என்ற அ.தி.மு.க.வின் கன்னியாகுமரி மாவட்ட செயலாளர், அந்த மாவட்ட அமைச்சருக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்துவதற்கு அனுமதி கேட்க, நாகர்கோவில் காவல்துறை துணைக் கண்காணிப்பாளர் சட்டம் ஒழுங்கு பிரச்சினையைக் காரணம் காட்டியும் ஆர்ப்பாட்டம் நடத்த அனுமதி அளித்தால் பொது மக்களின் மத்தியில் விரோதத்தை வளர்க்கக் கூடியதாக அமையும் என்றும் எடுத்துக் கூறப்பட்டது. ஆர்ப்பாட்ட அனுமதியினை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கில் (W.P. No.7361/2008) அரசின் மேற்கண்ட வாதத்தினை ஏற்க மறுத்த நீதிபதி கே. சந்துரு, ஆர்ப்பாட்டம் நடத்த அனுமதி அளித்தார். பெரியார் திராவிடர் கழகம் தவிர மக்கள் கலை இலக்கியக் கழகம், முத்துக்குமார் நினைவு அனுசரிப்பதற்கு கூட்டம் நடத்த அனுமதி கேட்ட பல்வேறு தமிழ் அமைப்புகளும், திரைப்பட இயக்குனர் புகழேந்தி, திரைப்பட இயக்குனர் மனோஜ் ஆகியோரும் பொதுக் கூட்டம் மற்றும் அரங்கக் கூட்டம் நடத்துவதற்கும் அனுமதியினை சென்னை உயர்நீதிமன்றத்தில் பெற்றுதான் நடத்தினர்.

சமீபத்தில் சென்னை மாநகரமே போக்குவரத்து நெரிசலில் சிக்கித் தவித்ததற்குக் காரணம் தி.மு.க. நடத்திய ஒரு போராட்டமாகும். அது கர்நாடகாவில் இருக்கக்கூடிய சொத்துக் குவிப்பு வழக்கினை ஜெயலலிதா தாமதப் படுத்துவதை கண்டித்து நடைபெற்ற ஆர்ப்பாட்டம் ஆகும். பனகல் மாளிகைக்கு முன்பும், சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு முன்பும் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தினால் பொது மக்கள் எந்த அளவிற்கு அல்லல்பட்டனர் என்று சென்னைவாசிகளுக்குத்தான் தெரியும். நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கும் ஒரு வழக்கு சம்பந்தமாக தி.மு.க.வினர் ஒரு போராட்டம் நடத்தினர். அதற்கான அனுமதியினை அவர்களே கொடுத்துக் கொண்டனர். ஆனால், ஐ.ஏ.எஸ். அதிகாரி உமாசங்கர் மீதான சஸ்பெண்ட் உத்தரவை திரும்பப் பெற வேண்டி ஆர்ப்பாட்டம் நடத்துவதற்கு காவல்துறை தடை விதித்தது. அந்த தடையும் சமீபத்தில் சென்னை உயர்நீதிமன்றத்தால் நீக்கப்பட்டுத் தான் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. நீதிபதி வி. தனபாலன் அதற்கான அனுமதியினை அளித்து உத்தரவிட்டிருந்தார். இறுதி நேரத்தில் பொதுக் கூட்டத்திற்கான அனுமதியினை ரத்து செய்வதை காவல்துறை தவிர்க்க வேண்டும் என்றும் நீதிபதி என்.பால் வசந்த குமார் ஒரு தீர்ப்பில் (2010(4) CTC) தெரிவித்துள்ளார்.

கருத்துரிமையை, கலைஞர் கருணாநிதி ஆட்சியில் இல்லாவிட்டால் ஒரு பார்வையுடனும் ஆட்சியில் இருந்தால் ஒரு பார்வையுடனும் செயல்பட்டு வருகிறார். கருத்துரிமை என்று சொன்னால் கலைஞரை பாராட்டுவதும், அவரை கவிதை மழையால் நனைய வைப்பதும்தான் என்ற நிலை வந்து விட்டது. மாறாக ஈழம், தமிழினம், தமிழின உரிமைகள், பகுத்தறிவு என்று பேசினால் தடை, கடைசி நேரத்தில் அனுமதி ரத்து, அதையும் மீறி பேசினால் தேசிய பாதுகாப்புச் சட்டத்தின்படி கைது, ஆர்ப்பாட்டம் நடத்தினால் அதற்கும் கைது என்ற நடவடிக்கை தொடர்ந்தால் அரசியல் சட்டம் **19(1)**(a) இல் வழங்கியுள்ள கருத்துரிமையினை கருவறுக்கும் செயலாகவே வரலாறு பதிவு செய்யும். ●

# கழகம் எடுத்த பெரியார் பிறந்தநாள் விழா



மதுரை



திருப்பூர்

## திருப்பூரில்

தந்தை பெரியார் பிறந்த நாளான செப்.17 அன்று காலை 11 மணிக்கு கழகத்தின் சார்பில் திருப்பூர் இரயில் நிலையம் அருகிலுள்ள பெரியார், அண்ணா சிலைகளுக்கு மாலை அணிவித்து பிறந்த நாள் உறுதிமொழி ஏற்கும் நிகழ்ச்சி, கழகப் பொதுச் செயலாளர் கு. இராமகிருட்டிணன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் சாதி, மத மூடநம்பிக்கை ஒழிப்பு உறுதிமொழியை அனைவரும் எடுத்துக் கொண்டனர். நிகழ்ச்சியில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் அங்ககுமார், மாவட்டத் தலைவர் துரைசாமி, மாநகர்த் தலைவர் இரமேசுபாபு, மாநகரச் செயலாளர் முகில்ராசு, ஒன்றிய தலைவர் அகிலன், மாணவரணி அமைப்பாளர் கார்த்திகேயன், சண். முத்துக்குமார், அவிநாசியப்பன், கருணாநிதி, கமல், கார்த்தி, முரளி உள்பட மாநில, மாநகர, ஒன்றிய நிர்வாகிகள் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

## பெரம்பலூரில்

தந்தை பெரியாரின் 132 ஆவது பிறந்த நாளன்று பெரம்பலூர் புதிய பேருந்து நிலையத்திலுள்ள பெரியார் சிலைக்கு கழகத்தின் சார்பில் மாலை அணிவிக்கப்பட்டது. பெரம்பலூர் மாவட்டத் தலைவர் துரை. தாமோதரன், பெரியார் பெருந்தொண்டர் கலிய பெருமாள், எல்.ஐ.சி. கார்த்திகேயன் மற்றும் தோழர்கள் பாடலூர் சுதாகர், சௌந்தர்யா, ராஜேஷ்குமார், கலைச்செல்வன், இரமேஷ், ராஜா, கற்பனைப் பித்தன் மற்றும் திரளான தோழர்கள் கலந்து கொண்டனர்.

மாலை 6 மணி அளவில் அம்மாபாளையத்திலுள்ள ஆதி திராவிடர் தெருவில் பெரியார் பிறந்த நாள் விழா தெருமுனை பரப்புரை நடைபெற்றது. துரை. தாமோதரன் 'மந்திரமா, தந்திரமா' நிகழ்ச்சி நடத்தினார். 30 மாணவ மாணவியர்களுக்கு பென்சில், பேனா, நோட்டு புத்தங்களை அம்மாபாளையம் தோழர்கள் வழங்கினர்.

## தூத்துக்குடியில்

பெரியார் சிலைக்கு கழக சார்பில் மாவட்டத் தலைவர் பொறிஞர் சி. அம்புரோசு மாலை அணிவித்தார். நிகழ்வில் கழக தலைமைச் செயற்குழு உறுப்பினர் பால். தினகரன், மாவட்ட செயலாளர் கோ. அ. குமார், மாவட்ட துணைத் தலைவர் வே. பால்ராசு, மாவட்ட இணைச் செயலாளர் க. மதன், மாவட்ட அமைப்பாளர் ச.கா. பாலசுப்பிரமணியன், மாநகரத் தலைவர் சா.த. பிரபாகரன், மாநகரச் செயலாளர் பால். அறிவழகன், மாநகர இணைச் செயலாளர் ச. இரவி சங்கர், செ. செல்லத்துறை, அ. அறிவு பித்தன் மற்றும் கழகத் தோழர்கள் திரளாக கலந்து கொண்டனர். முன்னதாக 17.9.2010 காலை 8.30 மணிக்கு வடக்கு சோட்டையன் தோப்பு கழகக் கிளையின் சார்பில் கொடியேற்றி இனிப்புகள் வழங்கி கொண்டாடினர்.

## மதுரையில்

மதுரை மாநகர் மாவட்டத்தின் சார்பாக மாவட்ட தலைவர் வழக்கறிஞர் அ. பெரியசாமி தலைமையில் நீதிமன்றத்தி லிருந்து ஊர்வலமாகச் சென்று பெரியார் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டது. ஸ்டாலின், விடுதலை சேகர், தமிழ்ப் பித்தன், முருகேசன், வெண்மணி, நாசர், இளங்கோ உட்பட இருபதுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

## ஈரோட்டில்

ஈரோடு மாவட்டம் கோபி நகரம் மற்றும் கொளப்பலூர் சுற்று வட்டாரங்கள் முழுவதும் 17.9.2010அன்று அறிவுலக ஆசான் தந்தை பெரியாரின் 132 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு கொடியேற்று விழா மற்றும் குடும்ப விழா சிறப்புடன் நடந்தது.

வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு தாசம்பாளை யத்தில் ஆரம்பித்து, பொலவக் காளிபாளையம், வெள்ளாள பாளையம் பிரிவு, புதுக்காடு, சோதி நகர், அரசு போக்கு வரத்து அலுவலகம் முன்பு, கடைவீதி, மூன்று முக்கு, அய்ந்து முக்கு, கச்சேரி மேடு, கரட்டடிபாளையம், ல. கள்ளிப் பட்டி பிரிவு, ல. கள்ளிப்பட்டி, கோபி பேருந்து நிலையம், எஸ்.டி.என். காலனி, மொடச் சூர், வேட்டைகாரன் கோயில், கும்மிக்கருக்கு, அம்மன் கோவில்பதி, குருமந்தூர் பிரிவு, அருவங் கொரை, கொளப்பலூர் பேருந்து நிலையம், புனித மரியன்னை உயர்நிலைப் பள்ளி அருகில், பெரியார் நகர், மூப்பன்சாலை பிரிவு, சிறுவலூர் ஆகிய அனைத்து இடங்களிலும் கழகக் கொடிகள் ஏற்றப்பட்டன.



கோபி

ஒவ்வொரு இடத்தி லும் இனிப்பு, கழக துண்டறிக்கைகள் பொது மக்களுக்கு வழங்கப் பட்டது. பெரியார் பிஞ்சுகள் பகுத்தறிவு, அறிவுமதி, பிரபாகரன், மதிவதனி, இளங்கதிர் போன்ற சிறுவயது தோழர்கள், பல இடங் களில் கழகக் கொடி யினை ஏற்றி வைத்தனர். அத்துடன் கோபி மற்றும் கொளப்பலூரில் (சமத்துவ புரத்தில்) பெரியார் சிலைகளுக்கு மாலை அணிவிக்கப் பட்டது. வழிநெடுக வேன் களில் (டிரம்ஸ்) மேளம் அடித்துக் கொண்டு பெரியார் பாடல்கள், கருத்துக்கள், ஒலி பெருக்கி மூலம் பரப்பினர். 150 தோழர்கள் இரு சக்கர வாகனங்களில் அணிவகுத்து வந்த அந்த ஊர்வலக் காட்சி எழுச்சியாக இருந்தது.

அக்.2 இல் திருச்சி போராட்ட விளக்கத் துண்டறிக்கைகள் வழங்கப்பட்டன. கொடியேற்று விழா நிகழ்ச்சி மாலை 3.30 மணிக்கு முடிவடைந்தவுடன், இராம. இளங்கோவன் தோட்டத்து வீட்டில் அசைவ உணவு விருந்து அளிக்கப்பட்டது. பகுதி முழுவதும் பெரியார் பிறந்த நாள் சுவரொட்டிகளும், போராட்ட விளம்பர சுவரெழுத்தும் எங்கு பார்த்தாலும் கண்கொள்ளாக் காட்சியாக மக்களின் மனதில் நன்கு பதியும் வகையில் அமைந்திருந்தது.

## பட்டுக்கோட்டையில்

பட்டுக்கோட்டை புதிய பேருந்து நிலையம் அருகிலுள்ள தந்தை பெரியார் சிலைக்கு நகர கழக பொறுப்பாளர் ரெ.சா. இளவரசன் மாலை அணிவித்து மரியாதை செய்தார். உடன் சிலம்ப வேலங்காடு கு. பாரி, தங்கராசு, எம். சீனிவாசன் (தி.மு.க.), என். பக்கிரிசாமி (அ.தி.மு.க.) கலந்து கொண்டனர்.

## கோவை வடக்கு மாவட்டக் கழக முடிவுகள்

கோவை வடக்கு மாவட்டக் கழக கலந்துரையாடல் கூட்டம் 12.9.2010 மாலை 5 மணிக்கு பெரியநாயக்கன் பாளையத்தில், மாவட்ட தலைவர் து. இராமசாமி தலைமையில் நடைபெற்றது. பெரிய நாயக்கன் பாளையம் ஒன்றியத் தலைவர் கி. சீனிவாசன், ஒன்றிய செயலாளர் சி. பிரசன்னா முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் பெரியார் பெருந்தொண்டர்கள் நாகை பாட்சா, கீசகன் ஆகியோர் மறைவிற்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

26.9.2010 அன்று பெரியநாயக்கன்பாளையத்தில் அக்.2 திருச்சி போராட்ட விளக்க பொதுக் கூட்டம் நடத்துவது என்றும், 'புரட்சிப் பெரியார் முழக்கம்' ஏட்டுக்கு 100 சந்தாக்கள் திரட்டுவது என்றும், அக். 2 போராட்டத்திற்கு மாவட்டம் முழுவதும் சுவர் விளம்பரம் செய்வது, மாவட்ட கழக சார்பில் 100 தோழர்கள் பங்கு பெறுவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

மேட்டுப்பாளையம் பத்திரகாளி அம்மன் கோவில் அருகிலுள்ள பவானி ஆற்றில் சுழலில் சிக்கி மர்மமான முறையில் நிகழும் மரணங்களை தடுக்கக் கோரி கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் மேட்டுப்பாளையத்தில் நடத்துவது என்றும் முடிவு செய்யப்பட்டது. மாவட்ட அமைப்பாளர் ம. சண்முகசுந்தரம், செயலாளர் ஆ. நாகராசன், சா.சா. குளம் ஒன்றிய செயலாளர் வே. சுரேசு மற்றும் பல தோழர்கள் கலந்து கொண்டனர். பெரிய நாயக்கன்பாளையம் நகர செயலாளர் வீரபாண்டி பாபு நன்றி கூறினார். ●

### திருச்சிராப்பள்ளியில் 'குடிஅரசு' அறிமுகம்



திருச்சிராப்பள்ளியில் தந்தை பெரியார் 'குடிஅரசு' தொகுப்பு நூல் அறிமுக விழா நடைபெற்றது. பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டிணன் கலந்து கொணடார். இலக்கிய விமர்சகர் வீ.நா. சோமசுந்தரம் வாழ்த்துரை வழங்கினார்.

150 இடங்களில் சுவரெழுத்து – 20,000 மக்களுடன் சந்திப்பு

# அக்.2 போராட்டம்; சென்னை மாவட்ட கழகம் நடத்திய எழுச்சியான மக்கள் சந்திப்பு இயக்கம்

திருச்சிராப்பள்ளியில் அக்டோபர் 2 ஆம் தேதி கழகம் நடத்தவிருக்கும் தீண்டாமை ஒழிப்புப் பிரிவை இழுத்து மூடும் போராட்டத்தை விளக்கி, தென் சென்னை மாவட்டக் கழக செயல்வீரர்கள் தீவிரமான களப்பணிகளில் இறங்கியுள்ளனர். போராட்டத்துக்காக பரப்புரைக் குழு ஒன்று தனியே அமைக்கப்பட்டது. குழுவினர் கடந்த செப்டம்பர் 6 ஆம் தேதி தொடங்கி, ஒவ்வொரு நாளும் சென்னை நகரின் முக்கிய பகுதிகளான தியாகராயர் நகர், பாண்டியன் அங்காடி, பாரிமுனை, கோயம்பேடு, புதுப்பேட்டை, சிந்தாதிரிப்பேட்டை, திருவல்லிக்கேணி, புரசைவாக்கம் உள்ளிட்ட பல பகுதிகளில் நடைபாதைக் கடை நடத்துவோரையும், வணிக நிறுவனங்களையும், பொது மக்களையும் நேரில் சந்தித்து, போராட்ட விளக்க துண்டறிக்கைகளை வழங்கி, போராட்ட நிதியும் திரட்டி வருகிறார்கள். இதுவரை 20,000 மக்களை நேரில் சந்தித்து, அவர்களிடம் போராட்டம் குறித்தும், பெரியார் திராவிடர் கழகம் பற்றியும், விளக்கி, துண்டறிக்கைகளை வழங்கியுள்ளனர்.

சமூகத்தின் அடித்தளத்து மக்களும், நடைபாதைக் கடைகளை நடத்தி வரும் பெண்கள், ஆண்களும், கழகத்தின் போராட்டத்துக்கு தங்கள் ஆதரவையும் மகிழ்ச்சியையும் வெளிப்படுத்தி வருகின்றனர். ரூ.5, ரூ.10 என அவர்களால் இயன்ற சிறு தொகையை நன்கொடையாக வழங்குகிறார்கள். நடைபதைக் கடைகளில், பொருள் வாங்க வந்த ஒருவர், துண்டறிக்கையைப் படித்துவிட்டு, தமது பெயரை சொல்ல விரும்பாமல், ரூ.500 நன்கொடை வழங்கி, தோழர்களிடம் கை குலுக்கினார். விநாயகன் சிலைக்கு காவலுக்கு நின்ற, ஒரு காவல் துறை ஆய்வாளர், தோழர்களை தாமாகவே அழைத்து, ரூ.100 நன்கொடை வழங்கி, ‘நன்றாக இழுத்துப் பூட்டுங்கள்’ என்று பாராட்டினார். பூவிற்கும் ஒரு மூதாட்டி, போராட்டத்தின் நோக்கத்தைக் கேட்டவுடன், ரூ.50 நன்கொடை வழங்கினார். ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சார்ந்த சிறு சிறு கடைகளை வீதி ஓரங்களில் நடத்தும் பெண்கள், கழகத் தோழர்களை பாராட்டி, ரூ.5, ரூ.10 என்று நன்கொடைகளை வழங்கிய நிகழ்வுகள், உணர்வின் வெளிப்பாடுகளாக அமைந்தன. சுவர் விளம்பரக் குழு ஒன்று தனியாக அமைக்கப்பட்டு, அவர்கள் சென்னை நகரம் முழுதும், செப்டம்பர் 19 ஆம் தேதி வரை 150 இடங்களில் போராட்டத்தை விளக்கி, சுவரெழுத்துகளை எழுதியுள்ளனர்.

சுவர் விளம்பரக் குழுவில் தோழர்கள் சேத்துப்பட்டு இராசன், அ.வ. வேலு, இருதயராஜ், அய்யனார், நாத்திகன், இரமேஷ், தீபா ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். பரப்புரை நிதி திரட்டும் குழுவில் இடம் பெற்று, ஒவ்வொரு நாளும் மக்களை சந்தித்து வரும் தோழர்கள்: தீபக், தீபா, செயக்குமார், கார்த்திக், குமரன், தபசி. குமரன், இரா. உமாபதி, கேசவன், மயிலை சுகுமார், பிரசாத், இளையசிம்மன், தமிழ்ச் செல்வி, மனோஜ், குமரேசன், வெங்கட், நந்தா, விவேக், உமாபதி, அம்பிகா, ஜெயந்தி, மனோகர், சைதை மனோகர், லட்சுமணன், சைதை சிவா, நாராயணன், பிரபாகர், வீரா, தமிழ்ச் செல்வன், தமிழரசன், பார்த்தசாரதி, சுதாகர், பொற்செல்வம், சரவணன், சசி. குமார், விநாயகம், கணேஷ், குட்டி, ஜனார்த்தனன், தட்சிணாமூர்த்தி, ராசுக்குமார், குரு. சரவணன், தினேஷ் ஆகிய தோழர்கள், ஒவ்வொரு நாளும் அணி அணியாகப் பிரிந்து மக்களை சந்தித்து வருகிறார்கள். மக்கள் சந்திப்பு இயக்கம் தோழர்களுக்கு மேலும் உற்சாகத்தை வழங்கி, களப்பணிகளை தீவிரமாக்கியுள்ளது.

– நமது செய்தியாளர்



பெரியார் பிறந்த நாள் செப்.17 அன்று கழகத் தலைவர் மற்றும் தோழர்கள் சென்னை சேத்துப்பட்டு பெரியார் - அம்பேத்கர் சிலைகளுக்கு மாலை அணிவித்தபோது எடுத்த படம்

## ஆதி திராவிடர் மாணவர் விடுதி கோரி அவிநாசியில் கழகம் ஆர்ப்பாட்டம்

சேவூரில் ஆதி திராவிடர் மாணவர் விடுதிக்கென இடம் ஒதுக்காமல் 2006 ஆம் ஆண்டு சமுதாய நலக் கூடத்தில் மாணவர் விடுதி தொடங்கப்பட்டது. ஆனால் இன்று வரை மாணவர் விடுதிக்கென இடம் ஒதுக்கப்படாமல் இருந்து வருகிறது. அருகிலுள்ள பழைய நூலக கட்டிடத்தில் தான் மாணவர் விடுதிக்கான சமையல் அறை செயல்பட்டு வருகிறது. மேலும் சுயஉதவிக் குழு பல் நோக்கு மையக் கட்டிடம் மாணவர் விடுதியின் பொருள் சேமிப்பு அறையாக செயல்பட்டு வருகிறது. மாணவர் விடுதிக்கென தனியாக இடமும் கட்டிடமும் இல்லாத சூழ்நிலையில், சுமார் 40 மாணவர்கள் அவதியுறுகிறார்கள். மாணவர் விடுதிக்கென தனியாக கட்டிடம் இல்லாத காரணத்தால் சென்ற ஆண்டு படித்த மாணவர்களின் எண்ணிக்கையைவிட இந்த வருடம் குறைவாக உள்ளது.

ஆதி-திராவிடர் மாணவர் விடுதியாக தற்காலிகமாக செயல்பட்டு வரும் சமுதாய நலக் கூடத்தை வேறு நிகழ்ச்சிகளுக்காக பயன்படுத்தும்போது அருகிலுள்ள ஊர்களைச் சார்ந்த மாணவர்களை கண்டிப்பாக அவரவர் வீடுகளுக்கு அனுப்பி விடுகின்றனர். அதுபோக அங்கு தங்கியிருக்கும் மாணவர்கள் வெளியேற்றப்பட்டு, அருகிலுள்ள ஊராட்சி மன்ற திண்ணையிலும் சுயஉதவிக் குழு பல்நோக்கு மைய மிகச் சிறிய கட்டிடத்திலும் இரவு நேரங்களில் தங்க வைக்கப்படுகிறார்கள். இதனால் மழைக் காலங்களிலும், குளிர்காலங்களிலும் தேர்வு காலங்களிலும் மிகவும் அவதிப்படுகிறார்கள். இதனால் மாணவர்கள் உடலளவிலும், மனதளவிலும் பாதிக்கப்படுவதால் அவர்களின் கல்வியும், எதிர்காலமும் கேள்விக்குறியாக உள்ளது. ஆதி திராவிட மாணவர்களுக்கு தனியாக விடுதி கட்டித் தரக் கோரியும், தற்காலிக விடுதியாக செயல்படும் சமூக நலக் கூடத்தை, வேறு நிகழ்ச்சிகளுக்கு வழங்குவதை நிறுத்தக் கோரியும் 6.9.2010 அன்று அவிநாசி கழக சார்பில் ஆர்ப்பாட்டம் நடந்தது. திருப்பூர் மாவட்டத் தலைவர் சு.துரைசாமி தலைமை வகித்தார். அவிநாசி ஒன்றிய அமைப்பாளர் கு.செந்தில்குமார், கோவை கா. சோமசுததரம் முன்னிலை வகித்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈரோடு மாவட்ட செயலாளர் இராம. இளங்கோவன், தமிழ்நாடு மாணவர் கழக அமைப்பாளர் ந. பன்னீர்செல்வம், திருப்பூர் முகில்ராசு, வழக்கறிஞர் மாதவி, ஆதித் தமிழர் விடுதலை முன்னணியின் மாநில துணைச் செயலாளர் அர. விடுதலைச் செல்வன், ஆதித் தமிழர் பேரவையின் திருப்பூர் மாவட்ட நிதிச் செயலாளர் மயில்சாமி ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

செய்தி: கோவை கா. சோமசுந்தரம்

## ‘சுபா’ பிறந்த நாள்


சென்னை மாவட்ட கழகச் செயல் வீரர் ச.குமரன் - கு.கவுரி ஆகியோரின் இரண்டாவது மகளும், தணுவின் தங்கையுமான ‘சுபா’வின் முதலாம் ஆண்டு பிறந்த நாள் சென்னை மீர்சாகிப்பேட்டை சமூகநலக் கூடத்தில் சிறப்புடன் நடந்தது. கழகத் தோழர்கள் பெருமளவில் குடும்பத்தினருடன் பங்கேற்று வாழ்த்து தெரிவித்தனர். முன்னதாக சிற்பி ராசன் ‘மந்திரமா, தந்திரமா’ நிகழ்ச்சி நடைபெற்றது. விழா மகிழ்வாக தோழர் குமரன் கழக ஏட்டுக்கு ரூ.1000 நன்கொடை வழங்கினார். நன்றியுடன் பெற்றுக் கொண்டோம். (ஆர்)



Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on:23rd September 2010

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



புரட்சிப்

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | periyardk.org | திருவள்ளுவர் ஆண்டு 2041 | செப்டம்பர் 30, 2010 | புரட்சி 9 | முழக்கம் 38 | விலை: ரூ.2.50


## திரும்புமிடமெல்லாம் சுவரெழுத்து பிரச்சாரம்; தீவிரப் பணிகள்

# அக்.2 : போராட்டத்துக்கு தோழர்கள் திரளுகிறார்கள்

*திருச்சியில் அக்டோபர் 2 ம் தேதி நடக்க இருக்கும் தீண்டாமை ஒழிப்புப் போராட் டத்துக்கு கழகத் தோழர்கள் தயாராகி வருகிறார்கள்.*

பெரியார் திராவிடர் கழகம், தமிழ்நாட்டின் கிராமங்களில் மோசமாக பின்பற்றப்பட்டு வரும், தீண்டாமைக்கு எதிராக போராடி வருகிறது. இரண்டாவது கட்டமாக பல்வேறு கிராமங்களில் இரட்டைக் குவளை முறை, இரட்டை சுடுகாடு உள்ள ஊர்கள் மற்றும் பல்வேறு முறைகளில் தீண்டாமையைப் பின்பற்றும் கடைகள், ஊர்கள், பெயர்களை பட்டியல்களாக வெளியிட்டது. ஏப்.13 ஆம் தேதி முதல் மூன்று கட்டங்களாக கிராமம் கிராமமாகச் சென்று சாதி தீண்டாமைக்கு எதிராக பரப்புரை இயக்கங்களை நடத்தியது. தொடர்ந்து பல பொதுக் கூட்டங்களையும் நடத்தி வருகிறது. திருச்சியில் ரோமன் கத்தோலிக்கர்களுக்கு உரிமையுள்ள ஒரு கல்லறையில் தடுப்புச் சுவர் எழுப்பி தீண்டப்படாத மக்களுக்கு தனி கல்லறைப் பகுதியை ஒதுக்கியுள்ளது. தீண்டாமையின் குறியீடாக விளங்கும் இந்தச் சுவரை அகற்றக் கோரி திருச்சியில் அக்.2 ஆம் தேதி திருச்சி தீண்டாமை ஒழிப்புப் பிரிவு காவல்துறையை இழுத்துப் பூட்டும் போராட்டத்தை கழகம் நடத்துகிறது.

இந்தப் போராட்டம் பற்றிய செய்திகளை ஊடகங்கள் முழுமையாக இருட்டடித்துவிட்டன. கட்சிகளோ, அமைப்புகளோ, இது பற்றி வாய் திறக்கவே இல்லை. இந்த நிலையில் தமிழ்நாடு முழுதும் மக்களை நேரடியாக சந்தித்து, போராட்டத்தை கழகத் தோழர்கள் மக்கள் கவனத்துக்குக் கொண்டு சென்றுள்ளனர். தமிழகம் முழுதும் வியக்கத்தக்க அளவில் சுவரெழுத்துகள் வழியாக தோழர்கள் போராட்ட அறிவிப்புகளை எழுதியுள்ளனர். இது பொது மக்களிடையே போராட்டம் பற்றிய செய்தியை கொண்டு சேர்ப்பதில் பெரும் பயனைத் தந்துள்ளது. சுவரெழுத்து விளம்பரங்களைப் பார்த்து, பலரும் கழகத் தோழர்களோடு தொடர்பு கொண்டு போராட்டத்துக்கு ஆதரவினைத் தெரிவித்து வருகிறார்கள்.

சென்னையைத் தொடர்ந்து திருச்சியிலும் மக்களை சந்திக்கும் இயக்கத்தை தோழர்கள் தொடங்கி நடத்தி வருகிறார்கள். கோவையில் பொதுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. கோபி, மேட்டூர், சேலம், மயிலாடுதுறை, சீர்காழி, நாகை பகுதிகளில் பொதுக் கூட்டங்களும், சுவரெழுத்தும் மிகச் சிறப்பாக செய்யப்பட்டுள்ளன.

தனிப் பேருந்துகள், வாகனங்களில் திருச்சியில் தோழர்கள் குவிய இருக்கிறார்கள். இதற்கான ஏற்பாடு களில் தோழர்கள் முனைப்பு காட்டி, செயல்பட்டுவரும் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன.

**– நமது செய்தியாளர்**

## திருச்சியில் மக்கள் சந்திப்பு இயக்கம்



தீண்டாமைக் கொடுமைகளைக் கண்டுகொள்ளாத காவல்துறையின் தீண்டாமை ஒழிப்புப் பிரிவு அ லுவலகத்தை வரும் அக்டோபர் 2 ஆம் நாளில் திருச்சியில் இழுத்துப் பூட்டும் போராட்டத்தை பெரியார் திராவிடர் கழகம் அறிவித்துள்ளது. அப்போராட்டத்தை விளக்கும் வகையில் திருச்சி தோழர்கள் தலைமைக் கழகம் வெளியிட்ட போராட்ட விளக்கத் துண்டறிக்கையை மக்களிடம் விநியோகிக்கின்றனர். விநியோகிக்கும்போது போராட்ட விளம்பரத்தை டி சர்ட்டில், பனியனில் அச்சிட்டு நடமாடும் விளம்பரங்களாக போராட்டத்தைப் பிரச்சாரம் செய்கின்றனர். பெரியார் பிறந்த நாளில் நகர் முழுவதும் இப்படிப் பிரச்சாரம் நடைபெற்றது. உள்ளூர் தொலைக்காட்சிகளும் செய்தி ஏடுகளும் இந்த நடமாடும் விளம்பர முறையை செய்தியாக வெளியிட்டுள்ளன.

### சேர, சோழ, பாண்டியர்கள் யார்?

*நம் இராஜாக்கள் என்பவர்கள் எல்லாரும்கூட பார்ப்பான் காலில் விழுந்து அவன் காலைக் கழுவிக் குடித்தாலே மேல் என்று எண்ணி, பார்ப்பான் இந்த நாட்டில் இஷ்டப்படி ஏது வேண்டுமோ அவற்றையெல்லாம் செய்ய அனுமதித்தும், அவர்கள் கூறியபடி நடந்தும், தமது இனத்திற்கே துரோகம் செய்திருக்கின்றனர். பெரிய வீரன் என்பார்கள் சிவாஜியை! அவனை இந்தப் பார்ப்பனர்கள் எவ்வளவு முட்டாளாக்கி அவனை ஆட்டிப் படைத்திருக் கின்றார்கள். தெரியுமா? நம் சேர சோழ பாண்டியன்களைப் பற்றி கேட்க வேண்டியதே இல்லை. மோட்சத்திற்காக தம் மனைவியைப் பார்ப்பானுக்குக் கூட்டிக் கொடுக்கும் அளவுக்கு முட்டாள்களாக, மடையர்களாக இருந்திருக்கின்றனர். எவனும் பார்ப்பானை எதிர்க்கத் துணியவில்லை; துணிந்தவர்கள் எல்லாரும் இப்படித் தான் ஒழிக்கப்பட்டுவிட்டனர்.*

**– பெரியார், ‘விடுதலை’** 30.3.1959

## திருச்சி சட்ட எரிப்பு வீரர்கள் நினைவிடத்தில் தோழர்கள் உறுதி ஏற்பு



திருச்சி ஓயாமாரிச் சுடுகாட்டில் சட்ட எரிப்பு வீரர்கள் பட்டுக்கோட்டை இராமசாமி, மணல்மேடு வெள்ளைச்சாமி ஆகிய தோழர்களின் நினைவிடங்கள் முன்பு பெரியார் பிறந்த நாளை முன்னிட்டு, சட்ட எரிப்பு வீரர் இலால்குடி முத்துச்செழியன் தலைமையில், கழகத் தோழர்கள் உறுதிமொழி எடுத்துக் கொண்டு ஊர்வலமாக மத்தியப் பேருந்து நிலையம் முன்பு உள்ள பெரியார் சிலைக்குச் சென்றனர். அங்கும் திருச்சி, திருவரங்கம், துவாக்குடி, காட்டூர் ஆகிய இடங்களிலுள்ள பெரியார் சிலைகளுக்கும் சென்று, அவைகளின் முன்பு சாதி ஒழிப்பு உறுதிமொழியை எடுத்தனர். சட்ட எரிப்பு வீரர் இலால்குடி முத்துச்செழியன் உறுதி மொழியை முன்மொழிய, அனைத்துத் தோழர்களும் அவரைப் பின்பற்றி முழங்கினர். மாவட்டத் தலைவர் செ.த. இராசேந்திரன் தலைமையில் டாக்டர் எஸ்.எஸ்.முத்து, ஆரோக்கியசாமி, மனோகரன், புதியவன் ஆகிய தோழர்களும் திண்டுக்கல்லிலிருந்து சிற்பி இராசன், தாமரைக் கண்ணன், திருப்பூர் இராவணன் ஆகியோரும் பங்கேற்றனர்.

*தமிழர் தலைவர் பெரியாரின் 132 ஆம் பிறந்த நாளான இன்று, நம்மை இழிவுபடுத்தும் சாதியை, பாதுகாக்கும் இந்திய அரசியல் சட்டத்தை எரித்து சிறையில் வீரமரணம் அடைந்த தோழர்கள் பட்டுக்கோட்டை இராமசாமி, மணல்மேடு வெள்ளைச்சாமி ஆகியோர் விதைக்கப்பட்ட இந்நினைவிடத்தில் பெரியார் திராவிடர் கழகத்தைச் சேர்ந்த நான் எடுக்கும் உறுதிமொழி –*

*மனிதனை மனிதன் உயர்வு தாழ்வு கற்பிப்பதற்கு ஆதாரமாய் இருப்பவை எதுவாக இருந்தாலும் அவற்றை அழித்து ஒழிப்பதே எனது முதல் கடமை என்ற பெரியாரியலை இலட்சியமாக ஏற்றுக் கொண்டுள்ள நான், அதை சமுதாயத்தில் பிரச்சாரம் செய்வதோடு நின்று விடாமல், எனது சொந்த வாழ்க்கையிலும் பின்பற்றுவேன் என்றும்,*

*தாழ்த்தப்பட்ட மக்களின் விடுதலையிலும், பெண் விடுதலையிலும், பொதுவுடைமைப் பணியிலும் சொல்லொன்று செயலொன்றாக இல்லாமல் உண்மையாக நடந்து கொள்வேன் என்றும் உறுதி ஏற்கிறேன்.*

*ஒழியட்டும் சாதி அமைப்பு! மடியட்டும் பெண்ணடிமை! வெல்லட்டும் பெரியாரியப் பண்பாட்டுப் புரட்சி!*

# நடைபாதைக் கோயில் : உச்சநீதிமன்றம் கண்டனம்

## திமுக. ஆட்சி என்ன செய்யப் போகிறது?

தமிழ்நாட்டில் நடைபாதைக் கோயில்கள் புற்றீசல்போல் பெருகி வருகின்றன. அரசு வளாகங்களிலேயே - கோயில்கள், அரசு ஆணைகளுக்கு எதிராக கட்டப்படுகின்றன. கழக சார்பில் இதை எதிர்த்து நீதிமன்றங்களில் பல வழக்குகள் தொடர்ந்துதான் ஆங்காங்கே தடுத்து நிறுத்தி வந்துள்ளது. அண்ணா முதலமைச்சரானவுடன், அரசு அலுவலகங்கள் மதச்சார்பற்றவையாக தோற்றமளிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு, கடவுள் படங்களை அகற்ற ண்டும் என்று ஆணை பிறப்பித்தார். இப்போது அரசு அலுவலகங்களும், காவல் நிலையங்களும், பஜனை மடங்கள் போல் காட்சி அளிக்கின்றன. அண்ணாவின் வழி வந்த ஆட்சியாக உரிமை கோரிவரும் தி.மு.க. ஆட்சி, இதைக் கண்டு கொள்ளவே இல்லை. சட்ட விரோதமாகக் கட்டப்பட்ட கோயில்களுக்கு வீட்டு வசதி வாரியம் ஏற்பும் வழங்கி வருகிறது. நடைபாதைக் கோயில்கள் என்பவை முதலீடு இல்லாத வர்த்தகமாகவே நடைபெற்று வருகின்றன. பல்வேறு அரசியல் கட்சியின் உள்ளூர் நபர்கள், கூட்டணி அமைத்துக் கொண்டு கோயில்களைக் கட்டி, விழாக்களை நடத்தி, அதன் வழியாக பொருளீட்டி வருவது ஒன்றும் ரகசியமல்ல. பொது மக்களுக்கே நன்றாகத் தெரியும். சென்னை நகரில் இதுவே, பலருக்கு முழு நேர தொழிலாகவும் மாறிவிட்டது. அதன் காரணமாகத்தான், இந்தியாவிலேயே, சட்ட விரோதமாக பொதுவிடங்களை ஆக்கிரமித்து, கோயில்கள் கட்டுவதில், தமிழ்நாடு முதலிடம் பெற்று நிற்கிறது. தமிழ்நாட்டில் 77,450 கோயில்கள் சட்டவிரோதமாக, பொது இடங்களை ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ளன. இரண்டாவதாக இராஜஸ்தான் மாநிலத்திலும், மூன்றாவதாக குஜராத்தில் 15,000 கோயில்களும் இதுபோல் கட்டப்பட்டுள்ளன.

இது தொடர்பாக உச்சநீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில், மாநில அரசுகளும், யூனியன் ஆட்சி நிர்வாகங்களும், போக்குவரத்துக்கும், பொது மக்களுக்கும் இடையூறாக உள்ள கோயில்கள், மசூதிகள், சர்ச்சுகள், குருத்துவாரக்களை உடனே அகற்றுமாறு உத்தரவிட்டது. இந்த வழக்கு விசாரணை மீண்டும் கடந்த செப்டம்பர் 14 ஆம் தேதி உச்சநீதிமன்ற நீதிபதி தல்வீன் பண்டாரி தலைமையிலான அமர்வு முன் விசாரணைக்கு வந்தபோது, நீதிமன்ற அமர்வு கடுமையான எச்சரிக்கை செய்துள்ளது.

பலமுறை வலியுறுத்திய பிறகும், இந்த வழக்கில், தங்கள் மாநிலத்திலுள்ள சட்டவிரோத வழிபாட்டுத் தலங்கள் பற்றிய விவரங்களை நீதிமன்றத்திடம் சமர்ப்பிக்காததை நீதிமன்றம், ஆத்திரத்துடன் சுட்டிக்காட்டி கண்டித்துள்ளது. சட்டவிரோத வழிபாட்டு இடங்களை அகற்றம் நடவடிக்கைகளை உடனே மேற்கொள்ளாவிட்டால், மாநில தலைமைச் செயலர்கள், உச்ச நீதிமன்றத்துக்கு நேரில் அழைத்து விளக்கம் கேட்கப்படுவார்கள் என்றும் நீதிபதி எச்சரித்துள்ளார்.

இரண்டு வாரங்களுக்குள் மாநில அரசுகள், தங்கள் பதில் மனுவை தாக்கல் செய்ய வேண்டும் என்றும், உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது. சட்டத்தைக் கைகளில் எடுத்துக் கொண்டு, தமிழ்நாட்டில் இந்து மதவெறி பார்ப்பன சக்திகள் சட்ட விரோத கோயில்களை இடிக்கக் கூடாது என்று மிரட்டி வருகின்றன. காவல்துறையும், அரசும் இதற்கு பணிந்து போய் நிற்கிறது. இந்த நிலையில் உச்சநீதிமன்றமே, இப்போது இடித்துரைத்துள்ளபோது, தமிழ்நாட்டில் தி.மு.க. ஆட்சி என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது ? சட்ட விரோத நடைபாதைக் கோயில்களில் தமிழகம் முதலிடத்தில் நிற்பது தமிழகத்துக்கே தலைகுனிவாகும் !

## சாதிவாரிக் கணக்கெடுப்பை தனியாக நடத்துக!

சாதிவாரிக் கணக்கெடுப்பை சமூகநீதி கோரும் அமைப்புகள் கோருவது, சாதிகளின் தலைகளை எண்ணி சாதிச் சங்கங்களுக்கு உரம் ஊட்டுவதற்கு அல்ல. மாறாக, தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட சாதிப் பிரிவுகளின், சமூக பொருளாதார, வளர்ச்சியை மதிப்பிடுவதற்கும், அவர்களின் மக்கள் தொகைக்கேற்ப உரிமைகள் வழங்கப்படாவிடில், அதை வழங்குவதற்கும்தான், இந்த நிலையில் மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்போது கேட்கப்படும், சமூக, பொருளாதார நிலைகளோடு சாதிக் கணக்கெடுப்பும் நடத்தப்பட்டால்தான், அதன் நோக்கம் நிறைவேறும். ஆனால், சாதிவாரிக் கணக்கெடுப்பை மட்டும் தனியாக, மக்கள் தொகைக் கணக்கெடுப்பிலிருந்து பிரித்து எடுப்பதும், அதற்கு ரூ.2000 கோடி பணத்தை செலவிடுவதும், வீண்விரயமாகவே இருக்கும்.

பிற்படுத்தப்பட்டோர் ஆணையத் தலைவர் என்.என். ராவ், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத் தலைவர் எம்.எஸ்.ஜனார்த்தனம், கர்நாடக மாநில பிற்படுத்தப்பட்டோர் ஆணையத் தலைவர் ரவி வர்மகுமார் ஆகியோர் கூட்டாக விடுத்துள்ள அறிக்கையில், இதே கருத்தை வலியுறுத்தியுள்ளனர். தமிழக முதல்வர் தமிழக பிற்படுத்தப்பட்டோர் ஆணையக் குழுத் தலைவர் வலியுறுத்தியுள்ள இந்தக் கருத்தை பிரதமரிடமும் சோனியாவிடமும் விளக்கி வற்புறுத்துவது அவசியமாகும்.

## சுரேஷ் கல்மாடி பின்னணி என்ன?

காமன்வெல்த் விளையாட்டுக் குழுவின் தலைவராக உள்ள சுரேஷ் கல்மாடி என்ற காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் மீது அடுக்கடுக்கான ஊழல் குற்றச்சாட்டுகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. இவர் பிறப்பால் ஒரு பார்ப்பனர். இவரது பூர்வீகம் கர்நாடக மாநிலம். உடுப்பி மாவட்டத்திலுள்ள பிரபல மீன்பிடித் துறைமுகம் அமைந்துள்ள மால்பி எனும் கடற்கரைப் பிரதேசம். இவரது மூதாதையர்கள் பெரும் வசதி படைத்த பார்ப்பனர்கள். அவர்களில் பலரும் மும்பை, சென்னை, புனேவுக்கு குடியேறிவிட்டார்கள். கல்மாடியின் தந்தை, 60 ஆண்டுகளுக்கு முன்பே பூனேயில் குடியேறினார். அவர் ஒரு டாக்டர். சுரேஷ் கல்மாடியும் புனேயில்தான் பிறந்தார். உடுப்பியில் இருந்த இவர்களின் அரண்மனை கல்மாடி ஷிவாள 'பிராமண' அரண்மனை என்றே அழைக்கப்படும். 40 ஆண்டுகளுக்கு முன்பு பிரபல தொழில் அதிபர் ஒருவர் அதை விலைக்கு வாங்கி விட்டார். கல்மாடி பார்ப்பன குடும்பம் நவராத்தியின்போது பார்ப்பனர்களுக்கு தடபுடலான விருந்துகள் நடத்துவதை, அக் கிராம மக்கள் இப்போதும் நினைவு கூர்கிறார்கள்.

கல்மாடி மராட்டிய காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் என்பதையும், பச்சை வர்ணாஸ்ரமப் பின்னணி கொண்ட ஒரு பார்ப்பனர் என்பதையும், உண்மையை ஏடுகள் வெளியிடுவதில்லை.

## உங்கள் சக்திக்கு வேலை வந்துவிட்டது! வேத விற்பன்னர்களே! அவசரம்! அவசரம்!

டெல்லியில் காமன்வெல்த் நாடுகள் பங்கேற்கும் விளையாட்டுப் போட்டிகள் தொடங்க இன்னும் சில நாட்களே உள்ளன. ஆனால், பாலம் இடிந்து விழுகிறது. வெளிநாட்டு விளையாட்டு வீரர்கள். தங்கும் குடியிருப்புகள் மோசமான நிலையில் உள்ளதால் வெளிநாட்டினர் வரத் தயக்கம் காட்டுகிறார்கள். ஊழல் புகார் சந்தி சிரிக்கிறது. விளையாட்டு வீரர்கள் தங்கும் வீடுகளில் பாம்பு நுழைந்து விட்டது. போட்டிகள் நடக்குமா என்று கேள்வி எழுந்து விட்டது.

வேதம் பிறந்த புண்ணிய பூமியில் - பகவான் அவதாரங்கள் எடுத்த தேசத்தில் - இப்படி 'அதர்மங்கள்' நிகழ்ந்தால், அது புண்ணிய தேசத்துக்கே இழுக்கு அல்லவா ? சர்வதேச நாடுகள் முன் நமது புண்ணிய பூமி, தலைகுனிந்து நிற்பது நமது 'ஆரிய மண்ணுக்கு' அவமானம் அல்லவா ?

வேத பிராமனோத்தமர்களே ! புரோகித புண்ணிய சிகாமணிகளே ! மகரிஷிகளே ! வாஸ்து பண்டிதர்களே ! உடனே டில்லிக்குப் புறப்படுங்கள் !

எந்தத் தீமைகளையும் ஒழித்து, எந்த நன்மைகளையும், பயன்களையும் கொண்டு வந்து குவிக்கும் சக்தி நிறைந்த வேதங்களும், யாகங்களும், நம்மிடம் இருக்கும்போது, நமக்கு என்ன கவலை ?

அக்னிகுண்டம், யாகம் வளர்த்து, ஷேமத்தைக் கொண்டுவர பிதுர்களுக்கும், வானுலகத்தில் வாழும் ''தேவர்''களுக்கும் உடனே மனுப் போடுங்கள்.

ஆபத்துகள், நெருக்கடிகள் வரும்போதெல்லாம் அவதாரம் எடுத்து வருவேன் என்று கூறிய பகவான் கிருஷ்ணனை உடனே டெல்லிக்கு வரச் சொல்லுங்கள் !

ஆண்டுதோறும் 'ராமலீலா' நடக்கும் நமது 'டெல்லி' பூமியை அன்னிய தேசத்தான் கைகொட்டி சிரிக்க நாம் அனுமதித்து விடலாமோ ? அது தகுமோ ?

தர்ப்பைப் புல், பூணூல் உள்ளிட்ட சகல ஆயுதங்களுடன் டெல்லிக்கு கிளம்புங்கள் !

அவசரம் ! அவசரம் ! அவசரம் !

எல்லாம் நன்றாக நடக்க - தீயசக்திகளை விரட்ட, வேதத்தின் சக்தியை அவிழ்த்துவிடுங்கள், அதற்கு இதுவே 'பேஷான' வியப்பு !

பயம் வேண்டாம். துப்பாக்கி ஏந்திய பாதுகாப்புப் படைகள் உங்களுக்கு பாதுகாப்பாக நிற்கும், சாமி !

— *உண்மை பக்தனின் வேண்டுகோள்.*

## 'நாயை'யும் விட்டு வைக்காத தீண்டாமை

மத்திய பிரதேச மாநிலம் மொரினா மாவட்டத்தில் உள்ள ஊர் மாணிக்பூர். இந்த கிராமத்தில் அரசியல் செல்வாக்கு பெற்ற பெரும் நிலக்கிழாராக உள்ளவர் ராம்பால் சிங். ராஜபுத்திரப் பிரிவை சார்ந்த உயர்சாதிக்காரர். இவர் பாசத்துடன் ஒரு நாய் வளர்த்தார்.



நாயின் பெயர் 'ஷேரு'. கடந்த வாரத்தில் ஒரு நாள் நாய் 'ஷேரு' மிகப் பெரும் 'பாவ'ச் செயல் ஒன்றை செய்து விட்டது. சுனிதா ஜாதவ் என்ற தலித் பெண் கூலி வேலை செய்த தமது கணவனுக்கு கொண்டு சென்ற ரொட்டி ஒன்றை அருகே திரிந்து கொண்டிருந்த அந்த 'நாய்'க்கு போட்டார். நாயும் 'சாதி' தெரியாமல் ரொட்டியை விழுங்கி விட்டது.

செய்தி நாயை வளர்த்த ராம்பால் சிங் காதுக்கு எட்டியது. அவ்வளவு தான். ''நாய் தீட்டாகி விட்டது; இனி இந்த நாய்க்கும் எனது குடும்பத் துக்கும் எந்த உறவும் இல்லை; வீட்டிலிருந்து விரட்டுகிறேன்'' என்று அறிவித்தார். பிரச்சினை அத்துடன் முடியவில்லை. ஊர் பஞ்சாயத்தைக் கூட்டினார். தலித் பெண் சுனிதாவும் அழைக்கப்பட்டார். ''தோட்டத்தில் வேலை செய்த கணவருக்கு கொண்டு வந்த சாப்பாட்டில் மீதமான ஒரு ரொட்டியை அருகே சுற்றிக் கொண்டிருந்த நாய்க்குப் போட்டேன்'' என்று விளக்கமளித்தார். ''நாய் தீட்டாகிவிட்டது. இனி அந்த நாய் ஊர்ப் பொதுவிடங்களில் நடமாடக் கூடாது; அதை ஊர் நாய் என்று எவரும் அழைக்கக் கூடாது; இனி அது சேரி நாய்; நாயை வளர்க்க வேண்டிய பொறுப்பு சுனிதாவுக்குத்தான்'' என்று பஞ்சாயத்து தீர்ப்பளித்தது. நாய்க்கு 'ரொட்டி' போட்ட குற்றத்துக்காக சுனிதாவுக்கு ரூ.15000 அபராதமும் விதித்தது. நாய் இப்போது சேரிக்கு வந்துவிட்டது.

வறுமையில் உழலும் அந்த ஏழைக் குடும்பத்தால், எப்படி இவ்வளவு பெரிய தொகையை அபராதமாக கட்ட முடியும் ? பதறிப் போன சுனிதாவும், அவரது சகோதரர் நகர்சிங்கும், சுமாவாலி காவல் நிலையத்துக்கு விரைந்து நடந்ததைக் கூறினர். அங்கே புகாரை வாங்க மறுத்து, வன்கொடுமை தடுப்புச் சட்டத்துக்காகவே கல்யாண் பகுதியில் இருக்கும் காவல் நிலையம் போகுமாறு கூறிவிட்டனர். மாவட்ட ஆட்சித் தலைவரிடமும் மனு எடுத்துச் சென்றனர். மாவட்ட தீண்டாமை ஒழிப்புப் பிரிவு காவல்துறை அதிகாரி பல்தேவ் சிங்கும் வழக்கை பதிவு செய்யவில்லை.

போலீஸ் படை ஒன்றை, கிராமத்துக்கு அனுப்பி விசாரணை நடத்திய பிறகே வழக்கை பதிவு செய்வோம் என்று கூறிவிட்டார். மாவட்ட ஆட்சித் தலைவர் அகர்வால், உரிய நடவடிக்கை எடுப்பதாக கூறுகிறார்.

தலித் பெண் தந்த ரொட்டியை, மலம் தின்னும் நாய் சாப்பிட்டால்கூட, நாயும் தீட்டாகி விடுகிறது என்று கருதும் நிலை தான் இந்த புண்ணிய பூமியில் இன்றும் நீடிக்கிறது !

**செய்தி : 'டைம்ஸ் ஆப் இந்தியா' செப். 24.**

## சாலை ஓர சுவர்கள் பேசினால்...

**சாலை ஓர சுவர்களைப் பார்த்தால் அதில் பெரிய பெரிய எழுத்துகள்! இப்போதெல்லாம் வெற்றிட சுவர்களைப் பார்ப்பதே அரிதாகிவிட்டது. இந்த சுவர்கள் வாய் திறந்து பேசுமானால்..... ஒரு கற்பனை:**

நாங்கள் தான் சாலை ஓர சுவர்கள் பேசுகிறோம். சுவர்கள் பேசுமா? என்று பகுத்தறிவுடன் கேட்பீர்களே! கல்லும், மண்ணும், காரையும், சுண்ணாம்பும், சிமெண்டும், கருங் கல்லுமாக உள்ள சுவர் பேசுமா என்று கேட்கிற நீங்கள், அதே கல்லால் ஆன சிலைகளை நம்புகிறீர்களே! அந்த சிலைகளுக்கு சக்தி இருப்பதாக பூசை செய்கிறீர்களே! அந்த சிலைகள் பேசா விட்டாலும் பேசுவதாக, எவராது கூறினால், உடனே நம்பி ஓடுகிறீர்களே! அங்கே மட்டும் உங்கள் பகுத்தறிவுக்கு 'டாட்டா' காட்டி விட்டீர்களா? சரி போகட்டும்.

இப்போதெல்லாம், கடவுள்களைவிட எங்களின் முக்கியத்துவம் அதிகரித்து விட்டது. முன்பெல்லாம் தேர்தல் காலங்களில் மட்டும் எங்களைக் கவனிப்பார்கள். சுண்ணாம்பு அடிப்பார்கள். வேட்பாளர் பெயரையும், சின்னங்களையும் எழுதிக் குவிப்பார்கள். இப்போது காலம் முழுதும் எங்கள் மீது எழுத்துகள், சுவரொட்டிகள். இதை நினைத்தால்தான், எங்களுக்கு சிரிப்பு சிரிப்பாய் வருகிறது. ஒவ்வொரு தலைவரின் பெயரை மட்டும் மாய்ந்து மாய்ந்து எழுதி வைக்கிறார்கள். அந்தத் தலைவர்களுக்கு அவர்கள் தருகிற பட்டங்களோ சொல்லி மாளாது. உலகப் புரட்சித் தலைவர்களின் பெயர்களை எல்லாம், தங்களுக்கு பட்டமாக்கிக் கொள்கிறார்கள். இந்தப் பெயர்களையும், பட்டங்களையும் தாங்கி தாங்கி, நாங்கள் நொந்து நூலாகி விட்டோம். அப்படியே உடைந்து விழுந்து விடக்கூடாதா என்று சலிப்பே வந்து விட்டது. இந்தப் "புரட்சி"ப் பெயர்களை எழுதுவதற்கு முன்பதிவு வேறு நடக்கிறது. நாட்டு மக்களுக்கே அடையாளம் தெரியாத அமைப்புகளைக்கூட நாங்கள் நன்றியோடு தாங்கிக் கொண்டு இருக்கிறோம்.

இவை மட்டுமா? மக்களை சாதியால் கூறுபோடவும், எங்களைத்தான் பயன்படுத்துகிறார்கள். உத்தமபுரத்திலிருந்து திருச்சி கத்தோலிக்க கல்லறை வரை, தீண்டாமைக்காக பயன்படுத்தப்படுவது, எங்களைத்தான். எங்களையே குறுக்காக போட்டு, பிணங்களைக்கூட இந்த பாழாய்ப் போன மனிதர்கள் பிரித்து புதைக்கிறார்கள். மனிதர்களின் இந்த வெறிபிடித்த காட்டுமிராண்டித்தனத்துக்கு நாங்கள் பயன்பட வேண்டுமா என்று கவலைப்பட்டோம். கண்ணீர் வடித்தோம். "அடே மானுடர்களே! புரட்சிப் பட்டங்களையும், போலிப் பெருமைகளையும், பெயர்களையும் விளம்பரப்படுத்தத்தானா நாங்கள் கிடைத்தோம்; ஏதாவது மக்களுக்குப் பயன்படும் கருத்துகளை எழுதக் கூடாதா? அப்படி எழுதுவதற்கு எல்லாம் இந்த நாட்டில் எவருமே இல்லாமல் போய்விட்டார்களா, என்று ஏங்கினோம். இப்போது எங்களுக்கே அதிர்ச்சி; திடீரென்று இளைஞர்கள் கூட்டம் கூட்டமாக – கருப்புச் சட்டையுடன் வந்தார்கள்; எங்கள் மீது சுண்ணாம்பு அடித்தார்கள். 'வந்துட்டாங்கய்யா; இன்னொரு தலைவர் பெயர் எழுத வந்துட்டாங்கய்யா' என்று நொந்து போனோம்.

ஆனால், என்னே அதிசயம்; கொள்கைகளை கோரிக்கைகளை எழுதத் தொடங்கி விட்டார்கள். தீண்டாமைக்கு எதிராக போராட்டம் என்று எழுதுகிறார்கள்; தீண்டாமை ஒழிப்புப் பிரிவை இழுத்து மூடப் போகிறார்களாம். ஆகா, என்ன மகிழ்ச்சியான அறிவிப்பு! இப்படி எல்லாம் கொள்கைகளையும், போராட்டங்களையும் எழுதுவதற்கும் எங்களைப் பயன் படுத்துகிறவர்கள் இருக்கிறார்களே என்பதை நினைக்கும் போது, நாங்கள் இன்ப அதிர்ச்சியில் உறைந்து கிடக்கிறோம்!

எண்ணிச் சில நாட்களிலே – திரும்புகிற இடமெல்லாம் சாதி தீண்டாமைக்கு எதிரான பரப்புரைக் களமாக எங்களை மாற்றிக் காட்டிய இந்த இளைஞர்கள் கரங்களை முத்தமிடுகிறோம். எந்தத் தீண்டாமைக்காக எங்களை சாதி வெறி மனிதர்கள் பயன்படுத்துகிறார்களோ, அதே அநீதிக்கு எதிராகவும் எங்களை போராட்டக் கருவிகளாக மாற்றி விட்ட தோழர்களே, உங்களை பாராட்ட வார்த்தை இல்லை.

கட்சிகளும், ஏடுகளும் இருட்டடிக்கும் உங்கள் போராட்டத்தை, மக்களிடம் கொண்டு போக, எங்களைப் பயன்படுத்திய கொள்கைச் சுடர்களே! உமது தொண்டு தொடர வாழ்த்துகிறோம். வெற்று புகழாரங்களுக்கும், போலி விளம்பரங்களுக்கும் மட்டுமே பயன்படுத்தப்பட்டு வந்த நாங்கள், ஒரு கொள்கைப் பாசறைக்குப் பயன்படுகிறோமே என்று நிமிர்ந்து நிற்கிறோம்.

ஒன்றை மட்டும் சொல்கிறோம்; நெடுஞ்சுவர்களாகிக் கிடக்கும் மனிதர்களைவிட கொள்கைகளையும் போராட்டங்களையும் சுமந்து நிற்கும் நாங்கள் எவ்வளவோ மேலானவர்கள்!

ஆமாம், கொள்கைக்கு மட்டுமல்ல, எங்களுக்கும் நீங்கள் பெருமை சேர்த்து விட்டீர்கள், தம்பிகளே!

**– கோடங்குடி மாரிமுத்து**

# அன்னூரில் கழகத்தின் எழுச்சி

கோவை மாவட்டம் அன்னூர் ஒன்றியத்தில் நான்கு கிளை கழகங்களின் கொடியேற்று விழா, பெயர் பலகை திறப்பு விழா மற்றும் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

5.9.2010 ஞாயிறு பிற்பகல் 2 மணிக்கு நல்லிசெட்டி பாளையத்தில் சோதி ராம் தலைமை யிலும், துரைவீரன் முன்னிலையிலும்3.30 மணிக்கு அச்சம்பாளையத்தில் கணேசன் தலைமையிலும், அருண்குமார் முன்னிலையிலும், மாலை 5 மணிக்கு அல்லிகாரம்பாளையத்தில் பி.சிதம்பரம் தலைமை யில், குமார் முன்னிலையிலும், 6 மணிக்கு அக்கரை செங்கம்பள்ளியில் செல்வராஜ் தலைமையிலும், ரமேசு முன்னிலையிலும், பெயர் பலகை திறப்பு விழா மற்றும் கொடியேற்று விழா நடைபெற்றது.

ஒலி பெருக்கி அமைத்த வாகனத்தில் அறிவிப்பு செய்து கொண்டும், அதைப் பின் தொடர்ந்து தோழர்கள் இரு சக்கர வாகனங்களிலும், மகிழுந்து களிலும் பேரணியாக சென்றது இந்த ஒன்றியம் முழுவதும் மக்களின் கவனத்தை ஈர்த்தது. ஆதித் தமிழர் விடுதலை முன்னணியின் கலைக் குழுவினர் (சென்னை) பறையாட்ட நிகழ்ச்சிகளை நடத்தினர். தமிழ்நாடு மாணவர் கழக அமைப்பாளர் பன்னீர் செல்வம், பெரம்பலூர் லட்சுமணன், சூலூர் வீரமணி ஆகியோர் உரையாற்றினர். கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பெயர்ப் பலகைகளை திறந்து வைத்தார். கழகப் பொதுச்செயலாளர் கோவை இராமகிருட்டிணன், கழகக் கொடியை ஏற்றி வைத்தார்.

மாலை 7 மணிக்கு ஓதிமலைப் பாதையில் "சாதி வாரிக் கணக்கெடுப்பை விரைந்து தொடங்கக் கோரியும், சாதியத் தீண்டாமையை எதிர்த்தும்" என்ற தலைப்பில் பொதுக் கூட்டம், மேட்டூர் கே.ஆர். இசைக் குழுவினரின் பாடல்களோடு துவங்கியது. அன்னூர் ஒன்றியத் தலைவர் மகேசு தலைமை தாங்கினார். அன்னூர் ஒன்றிய அமைப்பாளர் சோதிராம், இராமன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். அன்னூர் ஒன்றியச் செயலாளர் ஈசுவரன் வரவேற்புரை யாற்றினார். கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டிணன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். குருந்தாச்சலம் நன்றி கூறினார்.

திருப்பூர் மாவட்ட தலைவர் சு. துரைசாமி, கோவை தெற்கு மாவட்ட தலைவர் கலங்கல் வேலுச் சாமி, துணைத் தலைவர் சூலூர் பன்னீர்செல்வம், வடக்கு மாவட்ட செயலாளர் வெள்ளமடை நாகராசு, கோவை மாநகர தலைவர் வே. கோபால், செய லாளர் கி.மு. சாஜித், அலுவலகப் பொறுப்பாளர் சா. கதிரவன், மற்றும் பல தோழர்கள் கலந்து கொண்டனர்.

### கழகப் போராட்ட அறிவிப்பு வெற்றி

கோவை வடக்கு வட்டாட்சியர் அலுவலகத்தில் அரசு ஆணையை மீறி சட்ட விரோதமாக கோயில் அமைக்கப்பட்டதைக் கண்டித்தும் அகற்றக் கோரியும், 6.9.10 திங்கட்கிழமை காலை 10 மணிக்கு வடக்கு வட்டாட்சியர் அலுவலகம் முன்பு முற்றுகைப் போராட்டம் நடத்துவதாக கோவை மாநகர கழக சார்பாக, துண்டறிக்கை போட்டு அறிவித்தனர். போராட்டத்திற்கு முதல் நாள் 5.9.10 அன்று கோவிலை அகற்றிவிட்டனர். கோவை அன்னூர் ஒன்றியத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டிணன், இந்த தகவலை தெரி வித்து போராட்டத்தை கைவிடுவதாக அறிவித்தார்.

4.9.10 சனிக்கிழமை மாலை 6 மணிக்கு கோவை மாவட்டம், சூலூர் ஒன்றிய கழகம் சார்பாக வே. ஆனைமுத்து அவைக் கூடத்தில், "சமகால அரசியல் சூழலில் பெரியார் தொண்டர்களின் பணி" என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடை பெற்றது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றி, தோழர்களின் கேள்விகளுக்கு விளக்கம் அளித் தார். தோழர் சூலூர் ப. வீரமணி நன்றி கூறினார்.

### சிறப்பு திருமணச் சட்டத்தைத் திருத்த வேண்டும்

மதம் மாறி செய்து கொள்ளும் சிறப்பு திருமணச் சட்டத்தில், ஒரு மாதத்திற்கு முன்பே தகவல் பலகையில் அறிவிக்க வேண்டும் என்பதை நீக்க வேண்டும் என்று தோழர் கொளத்தூர் மணி வலியுறுத்தினார். மேலும் அவர் பேசியதாவது:

சுயமரியாதை திருமண சட்டம் என்பது இந்துத் திருமணச் சட்டத்தில் மட்டும்தான் மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது. மற்ற மதங்களில் இன்னும் அந்த சிக்கல் தொடர்கிறது. ஒரு மதத்தைச் சார்ந்தவர், இன்னொரு மதத்தைச் சார்ந்தவரை பதிவு திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்றால், பதிவு அலுவலகத்தில் ஒரு மாதத்திற்கு முன்பாகவே தகவல் பலகையில் போட்டு அறிவித்த பிறகே திருமணத்தை பதிவு செய்ய முடியும் என்ற நிலை உள்ளது. ஒரே மதத்தைச் சார்ந்தவராக இருந்தால் மட்டுமே உடனே பதிவு செய்ய முடியும். அறிவிப்பு பலகையில் போட்டவுடன் அதுவே தடையாக வந்துவிடுகிறது. உறவினர்கள் மூலமாக மணப்பெண்ணோ, மணமகனோ கடத்தப்பட்டு, ஒரு பதட்ட நிலை உருவாகி விடுகிறது. எனவே மதம் மாறி திருமணம் செய்வதை அரசே தடுப்பதுபோல இருக்கிறது. எனவே முன்கூட்டியே அறிவிக்க வேண்டும் என்பதை நீக்கிக் கொண்டு மதம் மாறி திருமணம் செய்யும் போதும், ஒரே மதத்தைச் சார்ந்தவர்களுக்கு உள்ளது போல உடனே பதிவு செய்யும் முறை வேண்டும் என, நாம் வாய்ப்புள்ள நேரங்களில் எல்லாம் வலியுறுத்த வேண்டும் என்று 5.9.10 அன்று சூலூர் அ.ப.சிவா - சோ. பெரியார் செல்வி வாழ்க்கை இணை ஏற்பு விழாவில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி குறிப்பிட்டார்.

### பெரியார் திராவிடர் கழக துவக்க விழா

9.9.2010 வியாழக்கிழமை மாலை 6.30 மணிக்கு விழுப்புரம் மாவட்டம், சின்ன சேலம் பகுதி கழக துவக்க விழா பொதுக் கூட்டம், காந்தி பொது மேடையில் நடைபெற்றது. ந. வெற்றிவேல் தலைமை யேற்க, இராம. பிரபு வரவேற்றுப் பேசினார். கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றினார். 7.30 மணி முதல் மழை லேசாக பொழிந்து கொண்டே இருந்ததால், 8 மணிக்கே கழகத் தலைவர் உரையாற்றத் தொடங்கினார். சற்று நேரத்தில் மழை வேகமாக பெய்யத் தொடங்கியது. பொது மக்கள் அருகிலிருந்த கடைகளில் நின்று பேச்சைக் கேட்டனர். 9 மணிக்கு மழை நின்றவுடன் மீண்டும் ஆர்வமாக இருக்கையில் அமர்ந்தனர். தொடர்ந்து கழகத் தலைவர் 10.45 மணி வரை இரண்டே முக்கால் மணி நேரம் உரையாற்றினார். க. ராசவேலு நன்றியுரையாற்றினார்.

நல்ல ஆர்வமுள்ள, கொள்கைப் பிடிப்புள்ள தோழர்கள் புதிதாக இணைந்திருக்கும் இப்பகுதி யில் 10.9.2010 அன்று காலை 9 மணிக்கு நயினார் பாளையம், தந்தை பெரியார் பள்ளி அருகில் பொது மேடையில் க. மதியழகன், ச. தீபா ஆகியோருக்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் வாழ்க்கை இணை ஏற்பு விழா நடைபெற்றது. தாலி கட்டாமல், சடங்கு இல்லாமல், நல்ல நேரம் பார்க்காமல் நடைபெற்ற இத்திருமணம் சாதி மறுப்பு திருமணம் என்பது குறிப்பிடத்தக்கது.


**செய்தி: கோகுலகண்ணன்**

# கடவுளை நம்பி பயனில்லை – இயக்குனர் சேரன்

'ஆண்மை தவறேல்' என்ற புதிய படத்தின் பாடல்கள் அடங்கிய குறுந்தகடு வெளியீட்டு விழா, சென்னை சத்யம் தியேட்டரில் நடந்த விழாவில், இயக்குனர் சேரன் பேசும்போது கூறியதாவது:

"ஆண்மை தவறேல் என்றால், ஆண்களின் ஆண்மையை குறிப்பதல்ல. மனைவியை திருப்திபடுத்துவது மட்டும் ஆண்மை என்று கூற முடியாது. ஒரு ஆண் மகனின் குணாதிசயங்களை குறிக்கும் படம் இது. இந்த படம் நூறு நாட்கள் ஓட வேண்டும் என்று கடவுளை நான் வேண்டவில்லை. ஏனென்றால், இறைவனை நம்பி எந்த பயனும் இல்லை. இறைவன் ஏதாவது செய்வான் என்று நம்பி ஏமாறுவதைவிட, மனிதர்களை நம்பலாம். மனிதர்களுக்கு, மனிதர்கள்தான் உதவி செய்வார்கள். இறைவன் வந்து உதவி செய்யப் போவதில்லை." - இவ்வாறு சேரன் பேசினார்.

# கோவையில் பெரியார் பிறந்த நாள்



கோவையில் பெரியார் பிறந்த நாளை கழகம் எழுச்சி விழாவாக நடத்தியது. கழக சார்பில் பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டிணன் தலைமையில் அய்யா சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டது. காந்திபுரத்தில் கழகம் அமைத்துள்ள அய்யா சிலைக்கு கோவை வந்திருந்த துணை முதல்வர் ஸ்டாலின் மாலை அணிவித்தார். கழகப் பொதுச் செயலாளர் இராம கிருட்டிணன், அவருக்கு 'சுவரெழுத்து சுப்பையா சிந்தனைப் பொறிகள்' நூலின் முதல் படியை நினைவுப் பரிசாக வழங்கினார். நிகழ்வில் ஊரகத் தொழிற் துறை அமைச்சர் பொங்கலூர் பழனிச்சாமி, உயர்கல்வித் துறை அமைச்சர் க. பொன்முடி மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்றனர். கழகத்தின் செயற்குழு உறுப்பினர் வெ. ஆறுச்சாமி மற்றும் கோவை மாவட்ட, மாநகர கழகப் பொறுப்பாளர்கள், தோழர்கள் பங்கேற்றனர். பின்னர் கழக அலுவலகமான பெரியார் படிப்பகத்தில் இனிப்புப் பொங்கல் வழங்கப்பட்டது.

# கருத்து மணம் பரப்பிய 'குடிஅரசு' ஆய்வரங்கம்




1925-1938 'குடிஅரசு' 27 தொகுப்புகளையும் சென்னையில் கீற்று இணைய தளம் நடத்திய கருத்தரங்கில் தோழர்கள் விரிவாக ஆய்வு செய்தனர். 'பெரியாருடன் ஒரு பயணம்' என்ற தலைப்பில் இந்த ஆய்வரங்கம் செப். 18 ஆம் நாள் மாலை 5 மணியளவில் சென்னை தேவநேயப் பாவாணர் அரங்கில், கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் நிகழ்ந்தது. கீற்று ஆசிரியர் குழுவைச் சார்ந்த தோழர் பாஸ்கர் வரவேற்புரையாற்றினார்.

1925 முதல் 1926 வரை அடங்கிய தொகுப்புகளை ச. தமிழ்ச்செல்வன் (பொதுச் செயலாளர், தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்கள், கலைஞர்கள் சங்கம்); 1927 ஆம் ஆண்டிலிருந்து 1929 வரை எழுத்தாளர் ஓவியா; 1930-1932 வரை தோழர் கொளத்தூர் மணி, 1933-1935 வரை எழுத்தாளர் பூங்குழலி, 1936-1938 வரை பேராசிரியர் ஹாஜாகனி (பொதுச்செயலாளர், தமிழ்நாடு முஸ்லீம் முன்னேற்றக் கழகம்) ஆகியோர் ஆய்வு வழங்கினர்.

'ரிவோல்ட்' இதழ் தொகுப்பு நூல் குறித்து பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் உரையாற்றினார். நிறைவாக கொளத்தூர் மணி தொகுப்புரை வழங்கினார். 'கீற்று' ஆசிரியர் குழு சார்பாக பிரபாகரன் நன்றி கூறினார். உரையாற்றிய அனைவரும் 'குடிஅரசு' தொகுப்புகளை ஆழமாக படித்து, ஏராளமான செய்திகளை முன் வைத்தது, கருத்தரங்கின் சிறப்பாகும். பெரியார் பற்றிய துல்லியமான வரலாற்று செய்திகளையும், அவரது சிந்தனைகளையும் இதற்கு முன் இதுபோல் விரிவாக விவாதிக்கப்பட்டதில்லை என்று கூறும் அளவில் கருத்தரங்கம் சிறப்பாக இருந்தது என்று கருத்தரங்கில் பங்கேற்ற பலரும் கூறினர்.

பெரியார் திராவிடர் கழகம், 'குடிஅரசு' தொகுப்புகளை வெளியிட்டதன் நோக்கம், பெரியார் பற்றிய இத்தகைய பல்வேறு பரிமாணங்கள் விவாதத்துக்கு வர வேண்டும் என்பதுதான் என்று பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் தனது உரையில் குறிப்பிட்டார். இதே போன்று, பல்வேறு ஊர்களில் 'பெரியாருடன் பயணம்' மேற்கொள்ள பலரும் கருத்து தெரிவித்தனர். பார்வையாளர்களாக ஏராளமான இளம் தலைமுறையினர் வந்திருந்தது, கருத்தரங்கின் மற்றொரு சிறப்பாகும்.

– **நமது செய்தியாளர்**


## நன்கொடை

13.9.2010 அன்று மேட்டூர் பெரியார் படிப்பகத்தில் வாழ்க்கை துணை ஏற்பு செய்து கொண்ட மணமக்கள் சின்னதண்டா என். ஈசுவரமூர்த்தி - ஆர்.திலகவதி ஆகியோர், புரட்சிப் பெரியார் முழக்கம் ஏடு வளர்ச்சி நிதிக்காக ரூ.1000 நன்கொடையாக வழங்கினர். நன்றியுடன் பெற்றுக் கொண்டோம். (ஆர்)

# 'ரிவோல்ட்' பக்கங்களிலிருந்து.... (1)

# பெரியார் இயக்கம் தொடங்கிய போது

*(1928 ஆம் ஆண்டிலிருந்து 1930 ஆம் ஆண்டு வரை பெரியார் நடத்திய 'ரிவோல்ட்' ஆங்கில வார ஏட்டிலிருந்து சில வரலாற்றுத் தகவல்கள்)*




வட மாநிலங்களைவிட தமிழ்நாடு விழிப்புணர்வும், வளர்ச்சியும் பெற்றிருக்கிறது என்பதும், கல்வி, நிர்வாக அமைப்புகள் மற்றும் சமூகம் சார்ந்த பிரச்சினைகளில் வடமாநிலங்களிடமிருந்து தமிழகம் எவ்வளவோ முன்னேறி நிற்கிறது என்பதும், இப்போது பொதுவாக ஏற்கப்பட்டுள்ள உண்மை நிலை. ஆனால், பெரியார் இயக்கம் தொடங்கிய காலத்தில் இந்த நிலைதான் இருந்ததா ? இல்லை. இதற்கு நேர்மாறான நிலை இருந்ததாகவே சமூக வரலாறுகள் கூறுகின்றன. 'ரிவோல்ட்' இது குறித்து பல வரலாற்றுச் செய்திகளை பதிவு செய்துள்ளது.

பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில், காங்கிரஸ் மாநாடுகளுடன் இணைந்து இந்து மகாசபை மாநாடுகளும், வர்ணாஸ்ரம ஆதரவு மாநாடுகளும் நடைபெறுவது வழக்கம். தமிழ் மாகாணத்தில் காங்கிரஸ் மாநாட்டோடு, 'வர்ணாஸ்ரம மாநாடு' நடத்தப்பட்டுள்ளது. இதைக் கண்டித்து 'குடிஅரசு' பத்திரிகையும் தலையங்கம் தீட்டியிருக்கிறது. **(30.10.1927)**

அதே காலத்தில் லாகூரில் ஜாட்பட் தோரக் என்ற சாதி ஒழிப்புக் கழகம் தீவிரமாக செயல்பட்டு வந்தது. சென்னை காங்கிரஸ் மாநாட்டோடு இணைந்து வர்ணாஸ்ரம மாநாடு நடந்தது என்றால், வடக்கே லாகூரில் நடந்த காங்கிரஸ் மாநாட்டோடு இணைந்து அதே பந்தலில் சாதி ஒழிப்புக் கழக மாநாடு (ஜட்பட்தோரக்) நடந்தது. இதை வரவேற்று 'ரிவோல்ட்' தலையங்கம் தீட்டியது. அதில் சென்னையில காங்கிரஸ் கட்சி வர்ணாஸ்ரமம் பேசுவதையும் வடக்கே லாகூரில் காங்கிரஸ் - அதற்கு நேர் மாறாக சாதி எதிர்ப்பு பேசுவதையும் சுட்டிக்காட்டியது. அதற்கான காரணத்தையும் அத்தலையங்கம் விளக்கியது.

"தென்னாட்டின் சமூக நிலவரம் எப்படி இருக்கிறது என்பதை வடநாட்டில் உள்ள நமது தோழர்கள் புரிந்து கொள்ள வேண்டும். (This event will give some idea to our North Indian Comrades, of the Social condition in the South and of the way in which the wind is blowing in South India) என்று சுட்டிக்காட்டியதோடு, கவிக்குயில் சரோஜினி நாயுடு "தென்னாட்டுப் பார்ப்பனர்கள் ஆங்கிலேயர்களுக்கு இணையாக தற்பெருமையும் ஆணவமும் கொண்டவர்கள்" என்று கூறியதையும் சுட்டிக்காட்டியது. 'தென்னாட்டில் வர்ணாஸ்ரமத்தை எதிர்த்தால் இங்கே காங்கிரசே இல்லாமல் போய்விடும். ஆனால் வடக்கே சாதி ஒழிப்பை ஏற்காவிட்டால், அங்கே காங்கிரசே இல்லாமல் போய்விடும்' என்று 'ரிவோல்ட்' படம் பிடித்துக் காட்டியது.

இதுதான் பெரியார் இயக்கம் தொடங்கிய காலகட்டத்தில் தமிழகத்தின் நிலை. அதற்கு பிறகு, பெரியாருடைய இயக்கத்தின் தாக்கம் தான். தமிழ்நாட்டில் பார்ப்பனியத்தை ஒடுக்கி வடமாநிலங்களைவிட தமிழகம், சமூக தளத்தில் முன்னேறிய நிலைக்குக் கொண்டு வந்ததோடு, சமூக நீதியிலும், வழிகாட்டும் மாநிலமாக உயர்த்தியது. இந்தியாவில் சமூகநீதியின் தலைநகர் தமிழ்நாடுதான் என்று மறைந்த சமூகநீதிக் காவலர் வி.பி.சிங் கூறியதை இங்கு நினைவு கூர வேண்டும்.

– **இரா.**

## கழகப் போராட்டத்துக்கு காங்கிரஸ் தலைவரின் பாராட்டு-நன்கொடை

மத்திய சென்னை காங்கிரஸ் பொதுச் செயலாளர் அய்.டி. அரசன், கழகம் நடத்தவிருக்கும் போராட்டத்துக்கு கழகத் தோழர்களிடம் ரூ.1000 நன்கொடை வழங்கினார்.

போராட்டத்துக்கு ஆதரவைத் தெரிவித்ததோடு, தீண்டாமைப் பட்டியல்களையும் தாம் தயாரித்து உதவுவதாக தோழர்களிடம் தெரிவித்து கழகத்தின் செயல்பாடுகளைப் பாராட்டினார்.

## கொளத்தூரில் புதுகை - பூபாளம் கலை நிகழ்ச்சி

19.9.10 அன்று மாலை 7 மணிக்கு கொளத்தூர் கழக சார்பாக பெரியார் 132 ஆவது பிறந்த நாள் விழா ஒன்றியத் தலைவர் சூரியகுமார் தலைமையில் நடைபெற்றது. இராமமூர்த்தி வரவேற்புரையாற்றினார். கழகத் தோழர்கள் காவை இளவரசன், டைகர் பாலன், முல்லை வேந்தன் ஆகியோர் உரைக்குப் பின் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டிணன் ஆகியோர் உரையாற்றினர்.

தொடர்ந்து புதுகை பூபாளம் கலைக் குழுவினரின் பகுத்தறிவு கலை நிகழ்ச்சி நடைபெற்றது. கலை நிகழ்ச்சியை ஏராளமான பொது மக்கள் பார்த்து தெளிவு பெற்றனர். பூ. இராசா நன்றி கூற இரவு 10.45 மணிக்கு கூட்டம் முடிவடைந்தது.

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
ஆண்டுக்கட்டணம் ரூ.150/-
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.
✆ 99416 13535

**அய்யா பிறந்த நாள் விழா செய்திகள் அடுத்த இதழில்**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on:30th September 2010

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.